RNI No.APTAM/2021/80590

SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:6, Issue:01, Pages:56
August-2026, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2026,
விலை ரூ.20/-





# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## 14-09-2026 முதல் 23-09-2026 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 14-09-2026 | திங்கள் | -- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 15-09-2026 | செவ்வாய் | துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 16-09-2026 | புதன் | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 17-09-2026 | வியாழன் | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 18-09-2026 | வெள்ளி | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 19-09-2026 | சனி | பல்லக்கில் மோகினி அவதாரம் | கருட சேவை |
| 20-09-2026 | ஞாயிறு | ஹனுமத் வாகனம், மாலை வஸந்தோத்ஸவம்,தங்கத்தேர் | யானை வாகனம் |
| 21-09-2026 | திங்கள் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 22-09-2026 | செவ்வாய் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 23-09-2026 | புதன் | சக்கரஸ்நானம் | துவஜாவரோஹணம் |



ஏஷா தேऽபி$_4$ஹிதா ஸாங்க்$_2$யே
பு$_3$த்தி$_4$ர்யோகே$_3$ த்விமாம் ச்ருணு ।
பு$_3$த்$_3$த்$_4$யா யுக்தோ யயா பார்த$_2$
கர்மப$_3$ந்த$_4$ம் ப்ரஹாஸ்யஸி ॥

பார்த்தா! இந்த புத்தி உனக்கு ஞானயோக விஷயத்தில் கூறப்பட்டது. இனி, இதனைக் கர்மயோக விஷயத்தில் கேள். அந்த புத்தியோடு கூடியவனாக ஆகி கர்மபந்தத்தை முழுமையாக விலக்கி விடுவாய்; அதாவது, முற்றிலும் அழித்து விடுவாய்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–39*



*ஸ்ரீமத்யை விஷ்ணுசித்தார்ய*
*மநோநந்த$_3$நஹேதவே ।*
*நந்த$_3$நந்த$_3$நஸுந்த$_3$ர்யை*
*கே$_3$ாத$_3$ாயை நித்யமங்க$_3$ளம் ॥*

விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாருடைய திருவுள்ளமுகக்கக் காரணமானவளும், (அவ்விஷ்ணுசித்தரோடுள்ள உறவாகிய) பெருஞ்செல்வத்தை உடையவளும், நந்தகுமாரனுக்குப் பொருந்திய அழகுடையவளுமான கோதைக்கு என்றும் மங்களமாகுக.

*– குருபரம்பரா ப்ரபாவம்*










## திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம், திருமலை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 22-08-2026 | சனி | --- | அங்குரார்ப்பணம் |
| 23-08-2026 | ஞாயிறு | பவித்ர பிரதிஷ்டை | ஆவணி (ச்ராவண) |
| 24-08-2026 | திங்கள் | பவித்ர சமர்ப்பணம் | மாதத்தில் |
| 25-08-2026 | செவ்வாய் | பூர்ணாஹுதி, பவித்ரோத்ஸவம் நிறைவு | நடைபெறும் |






## ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பவித்ரோத்ஸவம், திருப்பதி

திருப்பதி நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்தப் பழமையான ஆலயத்தை 10 ஆம் நூற்றாண்டில் சோழ அரசன் நிர்மாணித்தார். 15ஆம் நூற்றாண்டில் ஸ்ரீகிருஷ்ண தேவராயர் மேலும் விரிவுபடுத்தினார். ஸ்ரீசீதா சமேத கோதண்டராம லஷ்மண ஸ்வாமி விக்ரஹங்களும், இவ்வாலயத்திற்கு எதிரில் ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமியும் வீற்றிருக்கிறார். திருப்பதி பேருந்து மற்றும் இரயில் நிலையங்களிலிருந்து 10 நிமிடத்தில் சென்றடையலாம்.

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 07-08-2026 | வெள்ளி | --- | அங்குரார்ப்பணம் |
| 08-08-2026 | சனி | பவித்ர பிரதிஷ்டை | |
| 09-08-2026 | ஞாயிறு | பவித்ர சமர்ப்பணம் | |
| 10-08-2026 | திங்கள் | பவித்ரோத்ஸவம் நிறைவு | |

## ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி, கார்வேடி நகரம்



### தெப்போத்ஸவம்

ஸ்ரீவேணுகோபால ஸ்வாமிக்கு 25-08-2026 செவ்வாய்க்கிழமை அன்று துவங்கி 27-08-2026 அன்று ச்ராவண (ஆவணி) பௌர்ணமி திதியில் நிறைவடையும் விதத்தில் தெப்போத்ஸவம் நடைபெறும்.

### பவித்ரோத்ஸவம்

ஸ்ரீவேணு கோபால ஸ்வாமிக்கு ச்ராவண (ஆவணி) மாதத்தில் 26-08-2026 புதன்கிழமை அன்று அங்குரார்ப்பணத் துடன் துவங்கி 27-08-2026 அன்று பவித்ரோத்ஸவம் நடைபெறும்.




## ஸ்ரீபட்டாபிராமஸ்வாமி
## பட்டாபிஷேக உத்ஸவம், வால்மீகிபுரம்

திருப்பதியிலிருந்து சுமார் 96 கி.மீ. தூரத்திலுள்ள வால்மீகிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமிக்கு 17-08-2026 திங்கட்கிழமை முதல் 19-08-2026 வரை அதாவது ச்ராவண மாதத்தில் சுக்ல பஞ்சமியிலிருந்து சப்தமி வரை பட்டாபிஷேக உத்ஸவம் நடைபெறும்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்




# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஆகஸ்ட் 2026 மலர் 06 இதழ் 01


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| திருமலையப்பனும் திருவாடிப்பூர நாயகியும் -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 7 |
| ஸ்ரீசக்கரத்தாழ்வார் - திரு.கே.ஸ்ரீநிவாசன், மன்னார்குடி. | 10 |
| திரட்டு பிள்ளையார் -திரு.சதா.ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம். | 12 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : கீசகன் - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 13 |
| குடும்ப நலம் பெருகும் கருட தரிசனம் - திரு.பொ.பாலாஜி கணேஷ், சிதம்பரம். | 17 |
| நீதிக்கதை : அடக்கம் என்பது உயர்ந்த குணம் -திரு. ஜெ.சுவாமிநாதன், சென்னை. | 19 |
| ஸ்ரீவைகுண்ட கத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும் - திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 20 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி. கோவிந்தசாமி, புத்தூர். | 23 |
| கல்வி வளம் அருளும் நம்மாழ்வார் பாசுரங்கள் - முனைவர் தி.கமலி, சென்னை. | 25 |
| வரலக்ஷ்மி விரதம் வழிபாட்டு முறை | 27 |
| வேல்மாறல் மகாமந்திரம்! -முனைவர் ச. செந்திலாண்டவன், சென்னை. | 36 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருப்பதரியாச்ரமம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 40 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்: ஸ்ரீபராசர பட்டர் -ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,சென்னை. | 42 |
| சீலம் எல்லை இலான் - பெருமாள் கோவில் திருமலை விஞ்சமூர் ஆராவமுதன், திருவல்லிக்கேணி. | 44 |
| ராசிபலன்கள் : ஆகஸ்ட் 2026 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : எதிரியை என்றுமே முழுமையாக நம்பாதே! | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்.

பின்னட்டை : வள்ளி தேவசேனா உடனுறை ஆறுமுக ஸ்வாமி (சித்திரம்).


சிறப்பு ஆசிரியர் :
திரு. முத்தாட ரவிச்சந்திரா, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-ஆசிரியர்,
பிரதான ஆசிரியர் (முழு கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி., பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
பிரதான ஆசிரியர் : 2264363

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்

உங்களுடன்



# வாழ்விலேயே இனியது நட்பு

நட்பு என்பது சாதி, இனம், மதம் என அனைத்தும் கடந்து எல்லையில்லா அன்பு, தியாகம், தவற்றினைச் சுட்டிக்காட்டி நல்வழிப்படுத்துவது, மகிழ்ச்சியின் போது மகிழ்வதும் அதேபோன்று துன்பத்திலும் பங்கு கொள்வது எனும் அடிப்படைகளைக் கொண்டது என்கிறது சங்க இலக்கியம். கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார், அதியமான் – ஔவையார், தலைவி – தோழி இடையிலான நட்புகள் சிறந்த நட்பிற்கான எடுத்துக்காட்டாக சங்க காலத்தில் புகழப் பெற்றவை. உலகப் பொதுமறையான திருக்குறளை அருளிய வள்ளுவப் பெருந்தகையும் *"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு"* அதாவது "ஆடை நழுவும் போது கை தானாகவே விரைந்துச் சென்று மறைப்பது போல ஆபத்தில் ஓடிவந்து உதவுவதே சிறந்த நட்பு" என்கிறார்.

இராமாயணமும் "யாரொருவரைக் காண்பதாலும், அவரை நினைப்பதாலும், அவர் வார்த்தைகளைக் கேட்பதாலும், அவருடன் பேசுவதாலும் மனது உருகுகிறதோ அதுதான் ஒரு நல்ல நட்பு" என்று கூறுகிறது. கிஷ்கிந்தா காண்டம் நட்பைப் பற்றிய அற்புதமான விஷயங்களை வெளிப்படுத்துகிறது. அனுமன், இராமரையும் லட்சுமணரையும் சுக்ரீவனிடம் அழைத்து வந்து, அவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தினார். தன் அண்ணன் வாலியின் பகை காரணமாக அச்சத்தில் வாழ்ந்து வந்த சுக்ரீவன், இராமர் மற்றும் லட்சுமணரின் நட்பைப் பெற்றதில் மகிழ்ச்சியடைந்தான். "இராமா! நீ என்னுடன் நட்பாக இருக்க சம்மதித்தால், இதோ என் கையோடு கைகோர்த்துக்கொள். இப்போதே நாம் ஒரு நித்திய பந்தத்தை உருவாக்குவோம்" என்றான். இராமரும் மகிழ்ச்சியடைந்து அவருடன் கைகோர்த்தார். அனுமனும் நெருப்பை உண்டாக்கிட, இராமரும் சுக்ரீவனும் அந்த நெருப்பின் முன் நின்று நட்புக் கரம் நீட்டினர். சுக்ரீவன், "நீ என் நண்பனாகிவிட்டாய். இனி, இன்பமோ துன்பமோ, நாம் இருவரும் பிரச்சனையைப் பகிர்ந்து கொள்வோம்'' என்றான். அவர்கள் தங்கள் பிரச்சனைகளைப் பகிர்ந்து கொண்டனர். இராமர் சீதையின் பிரிவால் துயருற்றிருந்தபோது, சுக்ரீவன், "நமது நட்பைக் கௌரவிப்பதற்காகவே நான் உனக்கு நல்ல விஷயங்களைச் சொல்கிறேன். ஆனால், இது அறிவுரை அல்ல. நீ நமது நட்பை உண்மையானதாக நினைத்தால், நீ உன் துயரத்தைக் கைவிட வேண்டும்" என்றான். இங்கே நண்பர்கள் பரிவுடன் அன்பான வார்த்தைகளைப் பேசுவதை நாம் காண்கிறோம்.

இராமரின் தாக்குதலால் வாலி தரையில் விழுந்தான். அதாவது வாலியின் வதை நடந்தபோது, சுக்ரீவனுக்கு ஒரு விசித்திரமான குற்றவுணர்ச்சி ஏற்பட்டது. மேலும், அவன் தன் வருத்தத்தை இராமரிடம் வெளிப்படுத்தினான். தன் சகோதரனின் மரணத்திற்குத் தானே காரணம் என்பதால், தான் தீயில் பிரவேசிப்பதாகக் கூறினான். மக்களும் இதைக் கேட்டு வருந்தினர். ஆனால், அவனது மனநிலையைப் புரிந்துகொண்ட ஒரு நண்பனாக, இராமர் அவனிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாமல், கண்ணீர்விட்டு அழுது உணர்ச்சிவசப்பட்டார். இங்கே, தன் நண்பன் மீது இராமர் காட்டிய சகிப்புத்தன்மையைக் கவனிக்க வேண்டும். உலகில் பல நண்பர்கள் பல சமயங்களில் "என்னைப் புரிந்துகொள்! என்னைப் புரிந்துகொள்!" என்று கூறுகிறார்கள். ஆனால், ஒருவரையொருவர் புரிந்துகொள்வதில்லை. உண்மையாகப் புரிந்துகொள்பவர்கள், சரியான நேரத்தில் பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும். மற்றவரின் பலவீனத்தை மன்னிக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். ஒரு நண்பன் கடவுளாக இருந்தாலும், வறுமையில் வாடினாலும், சோகமாக இருந்தாலும், மகிழ்ச்சியாக இருந்தாலும், குற்றமற்றவராக இருந்தாலும் அல்லது குற்றவாளியாக இருந்தாலும், அவனைக் கைவிடக்கூடாது என்று இராமாயணம் கூறுகிறது.

சுக்ரீவன் முடிசூட்டப்பட்ட பிறகு, இராமரின் பணிகளைப் புறக்கணித்து, ராஜ்யத்தின் இன்பங்களில் மூழ்கி இருந்தபோது, இராமர் லட்சுமணனை அவனிடம் அனுப்பி, "கடுமையாகப் பேசாதே" என்று கூறினார். இதுவே இராமர் நட்புக்கு அளித்த மரியாதையாகும்.

ஒருவருடன் நட்பு கொள்வது எளிது. ஆனால், அந்த நட்பை இறுதிவரை தக்கவைத்துக் கொள்வது கடினம். மனம் அமைதியற்று இருந்தால், சிறிய காரணங்களுக்காகக் கூட நட்பு சேதமடையக்கூடும். எனவே, நட்பு என்பது மிகவும் புனிதமாகவும், விலைமதிப்பற்றதாகவும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பொக்கிஷம் ஆகும்.

# திருமலையப்பனும் திருவாடிப்பூர நாயகியும்



ஆடி மாதம் என்றாலே நமக்கு ஆண்டாளின் அவதாரம் நினைவுக்கு வந்துவிடும். அதுவும் பூர நட்சத்திரம் என்பது அவளுக்கே உரிய சிறப்பான நட்சத்திரம். சிம்ம ராசியில் அவதரித்த ஆண்டாள், அந்த சிம்ம ராசிக்கே உரிய கம்பீரத்துடன், கண்ணனையும் ஆண்டாள். கண்ணனை நேசிக்கும் நம் போன்ற அடியார்களையும் ஆண்டாள். அதனால்தான் அவள் பெயர் ஆண்டாள். சிம்ம ராசிக்குரிய அந்தத் தனித்துவமான கம்பீரம் அவளது பக்தி நெறியிலும், பாசுரங்களிலும் அப்படியே வெளிப்படும்.

***''மாலே மணிவண்ணா''*** என்று கண்ணனை உரிமையோடு வற்புறுத்தி, தனக்குத் தேவையான சங்குகளையும், பறைகளையும் கேட்கும் போதாகட்டும்; ***''வாரணமாயிரம் சூழ வலம் வந்து''*** என்று தன் திருமணக் கனவை மிகத் துணிவோடு பாடும் போதாகட்டும்... அவளிடம் இருந்தது வெறும் பக்தி அல்ல, காதலும் கம்பீரமும் கலந்த பேரதிகாரம்.

அதனால்தான் மாமுனிகள், தம்முடைய உபதேச ரத்தின மாலையில், திருஆடிப்பூரம் வந்தாலே அந்த நாளின் சீர்மையை நினைத்து நெகிழ்ந்து போகிறார்.

***இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக***
***வன்றோ இங்காண்டாளவதரித்தாள் -***
***குன்றாத வாழ்வான வைகுந்தவான் போகந்***
***த(ன்)னையிகழ்ந்து***
***ஆழ்வார் திருமகளாராய்***

ஸ்ரீமந்நாராயணன் பற்பல அவதாரங்களை எடுத்து, இந்த உலக மக்களைத் திருத்த வேண்டும் என்று முயற்சித்தான். ஆனால் அவனுடைய முயற்சி வெற்றி பெறவில்லை.

அதே நேரத்தில் தம்முடைய குழந்தைகள் உலகியலில் உழன்று, துன்பப்படுவதையும் கண்டு மனம் பொறுக்கவில்லை.

ஒரு பக்கம் உயிர்களின் துயரம், ஒருபக்கம் பகவானின் துயரம் என இரு பக்கத் துயர்களையும் தீர்க்கத் திருவுள்ளம் கொண்ட சர்வ லோக மாதாவான பூமிப்பிராட்டி, தன்னுடைய வைகுண்ட வான் போகத்தையும் வெறுத்து, இந்த மண்ணுலகத்தில் ஆடி மாதம் பூர நட்சத்திரத்தில் அவதரித்தாள்.

எல்லோரும் வைகுந்தத்தை விரும்புவர். ஆனால் லோக மாதாவான பிராட்டி வைகுந்தத்தை வெறுத்தாள்.

அங்கே உள்ள போகங்களை வெறுத்தாள். என்ன காரணம்? வீட்டில் அறுசுவை விருந்து அமர்க்களமாக இருந்தாலும், ஒரே ஒரு குழந்தை நோய்க் கொண்டு, உண்ண முடியாமல் தவிக்கும் பொழுது, கஷ்டப்பட்டுத் தயார் செய்த உணவுகளை தாயார் விரும்பமாட்டாள்.

இதை தன்னுடைய குழந்தை சாப்பிடவில்லையே என்று நினைக்கும் போது அந்த உணவின் மீது அவளுக்கு ஒரு வெறுப்பும் வந்துவிடும். இதைத்தான் ஆண்டாளின் அவதார நிலையில் ***''வைகுந்த வான் போகம்***

*தன்னை இகழ்ந்து''* என்ற பாசுரத் தொடரில் பார்க்கிறோம். இந்த அவதாரத்திற்கு தனக்கு ஒரு தந்தையை ஆண்டாள் தேர்ந்தெடுக்க விரும்புகிறாள்.

பகவான் துன்பப்படக் கூடாது என்று, தன்னுடைய நிலையையும் மறந்து.– தான் அசக்தன், பகவானின் தொண்டன்– என்பதையும் மறந்து அண்டாதி அண்டங்களைப் படைத்த, அந்த அரசனையே (பகவானையே) நன்றாக இருக்க வேண்டும் என்று, மங்களாசாசனம் செய்த பெரியாழ்வாரை, தந்தையாகத் தேர்ந்தெடுக்கிறாள். ஆடிப் பூரத்துத் துளசி வனத்துத் தவக் கொழுந்தின் பெருமையான ஆண்டாள், பெரியாழ்வார் தந்த தமிழோடும், கவியோடும், பக்தியோடும் இந்தத் தரணியில் வளர்ந்து, அந்த புருஷோத்தமனையே மணாளனாக வரிக்கிறாள்.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான, மண்ணுக்கும் விண்ணுக்கும் நிதியான திருமலை அப்பனை மணாளனாக வேண்டி, மேகத்தையும் குயிலையும் தூது விடுகிறாள். அதில் ஒரு பாசுர நயத்தை இந்த ஆடிப் பூரத்தை ஒட்டி அனுபவிப்போம். குயில் பத்து எனப்படும் ஐந்தாம் திருமொழியில் இரண்டாம் பாசுரம்,

*வெள்ளை விளிசங்கு இடங்கையிற்*
*கொண்ட விமலன் எனக்குருக் காட்டான்*
*உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளும்*
*உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்*
*கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்*
*களித்திசை பாடுங் குயிலே*
*மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாதென்*
*வேங்கடவன்வரக் கூவாய்*

கண்ணனின் பிரிவால் வாடும் கோதை, குயிலிடம் தன் தூதை எவ்வளவு ஆழமாகவும், அதே சமயம் மெல்லிய கோபத்துடனும் விவரிக்கிறாள் என்பதை இந்தப் பாசுர வரிகள் அழகாகப் படம் பிடித்துக் காட்டும்.

முதலில் பகவானோடு கொண்ட ஊடலை அவள் வருத்தத்தோடு பதிவு செய்கிறாள். "நான் எத்தனைக் காதலிக்கிறேன் அவனை? அவனைத் தவிர நான் வேறு யாரையும் நினைக்கவில்லையே! பிறந்ததிலிருந்து அவனைத் தானே நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவரைப் பிராயம் தொடங்கி ஆதரித்து எழுந்த என் தடமுலைகள் துவரைப் பிரானுக்கு என்றே அல்லவா சங்கல்பித்து வைத்திருக்கிறேன். இத்தனை ஆசைப் படும் எனக்கு அவன் முகம் காட்டாமல் இருக்கிறானே" என்கிற வருத்தம் அவளை வாட்டுகிறது. பகவான் முகம் காட்டாத வருத்தம் *''வெள்ளை விளிசங் கிடங்கையிற் கொண்ட விமல னெனக்குருக் காட்டான்''* என்று துடிக்க வைக்கிறது.

இடது கையில் வெண்மையான, கம்பீரமாக முழங்கும் பாஞ்சஜன்யம் என்னும் சங்கை ஏந்தி இருக்கும் அந்தப் பரிசுத்தமானவன் (விமலன்), எனக்குத் தன் உருவத்தைக் காட்டி அருள் செய்ய மறுக்கிறான். ஏன்? வராவிட்டால் போகிறான். ஆனால் என்னுடைய உள்ளத்திலே புகுந்து, என்னை நிமிடத்திற்கு நிமிடம் வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கிறானே!

*"உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளும்*
*உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்''*

என்ற வரியில் எத்தனை வலி பாருங்கள். உயிர் போய்விட்டாலும் நிம்மதி. ஆனால் உயிரையும் காப்பாற்றுகின்றான். வேதனையும் தீர்க்காமல் இருக்கின்றான். இது ஒரு வேடிக்கையா அவனுக்கு?

இப்போது பக்கத்தில் இருந்து கொண்டு ஏதோ சந்தோஷமாகப் பாடிக் கொண்டிருக்கும் குயிலைப் பார்க்கும் பொழுது அவளுடைய வேதனை இன்னும் அதிகரிக்கிறது.

குயிலைப் பார்த்து முறைக்கிறாள். "நீ செய்வது உனக்கே நன்றாக இருக்கிறதா?" என்று கேட்கிறது அவள் பார்வை. அடுத்த இரண்டு வரியைப் பாருங்கள். ஆண்டாளின் ஏக்கம் நம்மை என்னவோ செய்யும். அதன் ஆழத்தைப் புரிந்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

*கள்ளவிழ் செண்பகப் பூமலர் கோதிக்*
*களித்திசை பாடுங் குயிலே*
*மெள்ள விருந்து மிழற்றி மிழற்றாதென்*
*வேங்கட வன்வரக் கூவாய்*

தேன் சிந்தும் செண்பகப் பூமலர்களைக் கிளறி, அதன் சுவையில் திளைத்து, மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டிருக்கும் குயிலே, நீ மட்டும் அங்கே நிம்மதியாக அமர்ந்து கொண்டு, மெல்ல மெல்ல மழலை பேசுவது போல் கூவி என்னை மேலும் வதைக்காதே! அதற்குப் பதிலாக, என் வேங்கடவன் என்னைத்தேடி வரும்படி உன்னுடைய குரலால் அவனை அழுது கூவி அழைப்பாயாக! இங்கே ஆண்டாளின் தவிப்பு

உச்சக்கட்டத்தை அடைகிறது. திருமலையப்பன் (வேங்கடவன்) அவளுக்குள் இருக்கிறான், ஆனால் அவளுக்குக் காட்சி தரவில்லை. "உள்ளே இருந்து ஆட்டுகிறான், வெளியே வந்து அணைக்க மறுக் கிறான்" என்ற அந்த நாயகி பாவத்தின் தவிப்பை குயிலிடம் கொட்டுகிறாள்.

செண்பகப்பூவின் தேனைக் குடித்துக் "களிப் பில்" இருக்கும் குயிலுக்கும், கண்ணனின் நினை வால் "துன்பத்தில்" இருக்கும் தனக்கும் உள்ள முரண்பாட்டைச் சுட்டிக்காட்டி, "உன் பாட்டை நிறுத்தி விட்டு, என் வேங்கடவனை வரவழைக்கும் பாட்டைப் பாடு" என்று அன்புக் கட்டளையிடுகிறாள். ஆண்டா ளின் தமிழ் அழகும், அவளது காதல் வேதனையும் ஒருசேரத் ததும்பும் அற்புதமான பாசுரம் இது. இந்தப் பாசுரத்தில் பாஞ்சசன்யத்தை ஏன் குறிப்பிட வேண் டும்?

கார்முகில் போன்ற கரிய திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைய, "என்னைப் போலே நீங்களும் கைங்கர்யம் பண்ண வாருங்கள்" என்று அழைப்பது போன்ற முழக்கத்தை உடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை இடத்திருக்கை யிலே ஏந்தியிருக்கும் எம்பெருமான் தன்னைக் காண்கையிலே மிக்க ஆசையுள்ள எனக்குத் தன் திருவுருவத்தைக் காட்டாதே மறைக்கிறானே என்கிற ஒப்பீட்டுத் தவிப்பு இப்படி வார்த்தையாக வந்து விழுகிறது. அதைவிட இந்தப் பாசுரத்தில், அழகிய மணவாளச் சீயர் காட்டும் அற்புதமான உவமை, உலகியலை அப்படியே எடுத்து வைக்கிறது.

குற்றவாளிகளை, ராஜசேவகர்கள் பிடித்து, முக்கோணம் கட்டி அடிப்பார்களாம். அந்த அடியில் அவன் உயிர் போய்விடுமோ என்று நினைக்கும் பொழுது, அவனுக்கு கொஞ்சம் சோறும் நீரும் தந்து, மயக்கம் தெளிந்த பிறகு, மறுபடியும் அடிக்கத் துவங்குவார்கள். அந்தக் காலத்து ராஜ தண்டனையே அப்படித்தான் இருக்கிறது.

அதுபோல எம்பெருமான், என்னைத் துடிக்க வைத்து கொல்லப் பார்க்கிறான். முடியும் பொழுது, உயிர் போகா வண்ணம் அவனே தடுத்து நிறுத்தி மறு படியும், துன்பப்படுத்துகிறான். எம்பெருமானைத் தவிர உலகத்தில் உள்ள அத்தனை சந்தோஷங்க ளும் நமக்கு இன்பம். ஆண்டாள் போன்ற பக்தியில் பழுத்தவர்களுக்கு, எம்பெருமான் தரிசனம் தவிர, மற்ற எத்தனைச் சுகபோகங்கள் கிடைத்தாலும் துன்பம். இல்லாவிட்டால் வைகுந்தத்தையே துறக்கச் சம்மதிப்பாளா ஆண்டாள்!

*– பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,*
*புவனகிரி, 94434 39963*

*திருமலை திருப்பதி தேவஸ்தானம்*

## திருமலைக்கு நடந்து வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

அண்மைக் காலமாக திருமலைக்கு நடந்து வரும் பக்தர்களிடையே இதய நோய் சம்மந்தப்பட்ட நோயாளிகளே அதிகமாக இடம் பெறுகின்றனர். இதன் காரணமாக பக்தர்களுக்கு தி.தி.தே. சில ஆலோசனைகளை வழங்கி வருகிறது. பக்தர்கள் தங்களின் ஆரோக்கிய நலனைக் காத்திட பின்வரும் ஆலோசனைகளைக் கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- **60 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு, கீல்வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோர் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டவர்கள், உடல் பருமனானவர்கள் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **மலை ஏறும்போது ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் மிக உயரத்தில் குறைவான ஆக்சிஜன் செறிவும் இதய பாதிப்பு மற்றும் ஆஸ்துமாவை மேலும் மோசமாக்கலாம்.**
- **நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் மருந்துகளைத் தவறாமல் தங்களுடன் கொண்டு வருதல் வேண்டும்.**
- **மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் அலிபிரி நடைபாதையில் உள்ள படி எண். 1500, காலி கோபுரம் மற்றும் இராமானுஜர் சன்னதி அருகில் உள்ள மருத்துவ மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.**
- **திருமலையில் 24/7 மணி நேரமும் அஸ்வினி மருத்துவமனை/முதலுதவி மையங்கள் செயல்படுகின்றன.**
- **நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு அவசர டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்கு திருப்பதி ஸ்விம்ஸ் மருத்துவமனையும் உள்ளது.**

உலகில் ஒருவரை உண்டாக்க அல்லது அழிக்க அங்கும் இங்கும் அலைய வேண்டியது இல்லை. காக்கும் தொழில் மேற்கொண்டு உள்ள ஸ்ரீமந்நாராயணன் ஒரு ஜீவன் ஜீவிக்கும் காலம் வரை அங்கெல்லாம் ஓடி உழன்று காக்க வேண்டும். அப்படி காக்கும் பொறுப்பை உடைய நாராயணன் கருணையும் சக்தியும் உள்ளவனாகவும், பார்ப்பதற்கு கண்ணுக்கு அழகானவனாகவும், கருத்துக்கு இனிமையானவனாகவும் விளங்குகிறான். அவனை வேதங்களும் உபநிடதங்களும் தாமரைக்கண்ணன் என்றும், அவன் திருக்கரங்கள் கமலத்தை ஒத்ததாகவும், திருவிழிகள் அரவிந்தத்தை ஒத்ததாகவும் இருக்கின்றன.

உண்மையில் பஞ்சாயுதங்களும், அவனுக்கு ஆயுதங்களாகவும், அவன் அடியார் கண்களுக்கு ஆபரணங்களாகவும் திகழ்கின்றன. திவ்யாயுதங்கள் சங்கு, சக்கரம், வில், கதை, வாள் போன்றவைகளைத் தரித்துள்ளான். மேலும், சேதனர்கள் அவன் திருக்கண் நோக்கு நம்மீது விழாதா என்று ஏங்குகின்றனர். மனிதர்கள் கண்ணுக்கும் மாதவன் கண்ணுக்கும் அநேக வித்தியாசங்கள் உள்ளது. உலகில் இரண்டு பேருக்கு கண்கள் மிக சிவந்து காணப்படும். ஒன்று மனிதன் மதுபானம் அதிகமாக அருந்தியிருந்தால் அவன் கண்கள் சிவப்பாக இருக்கும். மற்றொன்று யாருக்கு கருணை மிகுந்து உள்ளதோ அவனுடைய கண்களும் சிவந்தே இருக்கும். இதில் எம்பெருமான் இரண்டாவது வகை. இனி எம்பெருமானின் திவ்யாயுதங்களில் சுதர்சனம் என்று சொல்லக்கூடிய சக்கரத்தாழ்வாரைப் பற்றி இங்கே காண்போம்.

எம்பெருமானின் ஹ்ருதயத்திலிருந்து சங்கல்பித்து பிறந்தவரே சக்கரத்தாழ்வார். ஆனி மாத சுக்லபக்ஷத்து சித்திரை நட்சத்திரத்தில் தோன்றியவர். பக்ஷிகளில் கருடன், மலர்களில் பாரிஜாதம், இசைக் கருவிகளில் வீணை போன்றவை முதன்மை. அதுபோல் ஆயுதங்களின் அரசன் சக்கரத்தாழ்வார் ஆவார்.




கணிதத்தில் எண்களில் 32 என்பது ஒரு சிறந்த எண். உபநிடதங்களில் சொல்லப்பட்ட ப்ரும்ம வித்தைகள் 32, நிகமாந்த மகாதேசிகன் அருளிய பாதுகா சஹஸ்ரம் என்ற நூலில் உள்ள பந்திகள் 32, அவர் அருளிய சுதர்சன அஷ்டகத்தில் "ஜய ஜய" என்ற வார்த்தைகள் 32 மற்றும் மனிதனுக்கு பற்கள் 32. இப்படி பல சிறப்புகளைக் கொண்ட எண்ணாகும். மேலும், மன்னார்குடியில் குடி கொண்டிருக்கும் ஸ்ரீவித்யா ராஜகோபால ஸ்வாமி தன்னுடைய பக்தர்களான கோபியர் கோப்பிரளயர் என்ற பக்தர்களின் தவத்துக்கு மெச்சி தன்னுடைய கிருஷ்ண அவதாரத்தில் காட்டிய லீலைகள் 32.

ஆக, சுதர்சனாழ்வாருக்கும் "ஜயஜய" என்ற வெற்றிச் சொல் கொண்ட சுதர்சனாஷ்டகத்தின் பெருமை வேறேதும் இல்லை. அப்படிப்பட்ட சுதர்சனாழ்வாருக்கு என்று உலகிலேயே ஒரு தனி கோயில் ஏற்பட்டது கும்பகோணத்தில் உள்ள சக்ர பாணி கோயில். விஜய வல்லி, சுதர்சனவல்லி

என்று இரண்டு நாச்சிமார்களோடு தனிக்கோயில் உள்ளது இங்குதான்.

சுதர்சனப்பெருமாள் அறுகோண வடிவ சக்கரத்தில் அக்னி கிரீடம் கொண்டு 16 கரங்களோடும், சிவப்பு மலர் கிரீடமும், சிவப்பு ஆடையும் தரித்து விளங்குவதும், மேலும் சுதர்சன ஆழ்வாருக்கு அநேக ஸ்துதிகள் இருந்தாலும் முதன் முதலில் ஏற்பட்ட ஸ்துதி நடாதூரம்மாள் இயற்றிய ஹேதி புங்கவ ஸ்தவம் என்ற சுலோகம் ஆகும். இதுவும் "ஜயஜய" என்று முடியக் கூடிய 32 வரிகளை கொண்டதாகும். இந்த ஸ்துதியை சக்ரபாணி கோயிலில் பாடி கந்தளன் என்பவரின் மன நோயைப் போக்கி நடாதூரம்மாள் அருளினார் என்பது வரலாறு.

சக்கரத்தாழ்வார் ஒருகாலமும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை விட்டு பிரியாதவர் என்பதை காண்போம். ஸ்ரீஹரி எடுத்த அவதாரங்களில் சக்கரத்தாழ்வார் பங்கும் மிக முக்கியமானது.

### 1) மச்ச அவதாரத்தில்

மீனுரு கொண்டபோது மீனின் மூக்குப்பகுதியில் கொம்பு ஒன்றிருக்கும், அது சக்கரத்தாழ்வாரே. அதைக்கொண்டே இரண்யாட்சனை அழித்து வேதத்தை மீட்டுக் கொடுத்தார்.

### 2) கூர்ம அவதாரத்தில்

பாற்டலைக் கடையும்போது அந்த மந்திர மலை சாய்ந்தபோது சாயாமல் அதை தாங்கிய கூர்மத்தின் மேல் ஓடாக அவதரித்தவர் சக்கரத்தாழ்வாரே.

### 3) வராக அவதாரத்தில்

பிரளய ஜலத்திலிருந்த பூமி தேவியைத் தன் கூர்மையான கோரப்பல்லாய் இடந்தெடுத்தவர் சக்கரத்தாழ்வாரே.

### 4) நரசிம்ம அவதாரத்தில்

இவ்வவதாரத்தில் இரண்யகசிபுவை தன்னுடைய நகங்களால் குத்தி கிழித்து சம்ஹரித்தார். இதில் நகமாக வந்தது சக்கரத்தாழ்வாரே.

### 5) வாமன அவதாரத்தில்

தானம் கொடுக்க வந்த மகாபலியை சுக்கிரன் தடுக்க அவன் கண்ணைத் துரும்பால் குத்தியபோது, அந்தத் துரும்பாய் (தர்பைபுல்) அவதரித்தவர் சக்கரத்தாழ்வாரே.

### 6) பரசுராம அவதாரத்தில்

மனத்தூய்மையை உலகிற்கு எடுத்துக்காட்ட நினைவு, செயல் என்ற இரண்டில் நினைவே செயலுக்குக் காரணமாகிறது என்பதை நிரூபிக்க தன் தாயின் தலையை வெட்டிய பரசு என்ற ஆயுதமாய் அவதரித்தவர் சக்கரத்தாழ்வாரே.

### 7) இராம அவதாரத்தில்

*"ராமோ விக்ரஹவான் தர்ம:"* என்பதை உணர்ந்த எம்பெருமானின் கோதண்டமாய் அவதரித்தவர் சக்கரத்தாழ்வாரே.

### 8) கிருஷ்ண அவதாரத்தில்

ஸ்ரீஹரி கிருஷ்ண அவதாரம் எடுத்தபோது அவரது வலது திருக்கரத்தில் சக்கரமாகவே சக்கரத்தாழ்வார் தோன்றினார்.

### 9) கல்கி அவதாரத்தில்

கலி முடியும் போது எடுக்கப்போகும் கல்கி அவதாரத்தில் குதிரை வீரனாய் வருவார். அவர் வரும் குதிரையும், அவர் கையில் உள்ள வாளும் சக்கரத்தாழ்வார் அம்சமே. இப்படி எல்லா அவதாரங்களிலும் எம்பெருமானோடு சேர்ந்து அருள் பாலிக்கிறார். சிவபெருமான் முப்புரம் எரித்தபோது அவர் அம்பில் சக்கரத்தாழ்வார் சக்தியாக ஆவிர்பவித்து முப்புரம் எரித்தார். இப்படிப்பட்ட சக்கரத்தாழ்வாரை வழிபடுவதால் பூவுலகோருக்கு என்னென்ன பலன்கள் உண்டாகும் என்பதைப் பார்ப்போம்.

சக்கரத்தாழ்வாரை – துளசிமாலைச் சாற்றி, மலர் கிரீடம் சாற்றி 9 முறை வலம் வர இஷ்ட காரிய சித்தி ஏற்படும். சக்கரத்தாழ்வாரை–தினமும் காலை மாலை நெய் தீபம் ஏற்றி 18 முறை வலம் வர பில்லி, சூன்யம், பூதப்ரேத பிசாசுகளால் வரும் தீயவை அகலும். சக்கரத்தாழ்வாரை செவ்வாய்க்கிழமை நெய் தீபம் ஏற்றி 9 முறை பிரதக்ஷிணம் செய்ய நம் கடன் தொல்லை தீரும். சக்கரத்தாழ்வாரை – வெள்ளிக்கிழமை அன்று துளசி மாலை சாற்றி நெய் தீபம் ஏற்றி 18 பிரதக்ஷிணம் செய்ய லக்ஷ்மி கடாக்ஷம் சித்திக்கும், பிரசவ காலங்களில் ஏற்படக் கூடிய கஷ்டங்களும் விலகும். சக்கரத்தாழ்வாரைத் துதித்து நாமும் சுதர்சனரின் அருள்பெருவோமாக.

***– திரு.கே.ஸ்ரீநிவாசன், மன்னார்குடி,***
***9597132238***



# திரட்டு பிள்ளையார்

– திரு. சதா.ஸ்ரீஹரிஹரன், கும்பகோணம், 9443171383.

வெற்றி நல்கும் விநாயகர் வழிபாடு என்பது இந்தியாவில் மட்டும் அல்லாமல், அயல் நாடுகளிலும் உண்டு. மேலும், தமிழக இல்லங்களில் எந்தவொரு சுப காரியங்களையும் தொடங்கும் முன் மிக எளிமையான பிள்ளையார் வழிபாடு என்பது முதன்மை வகிப்பது தமிழர் மரபின் சிறப்பாகும்.

இந்த வழிபாட்டில் விநாயகர் வடிவத்தை இயற்கை அன்னை தந்த, ஆற்றல் நிறைந்த மண்ணாலும் அல்லது மஞ்சள் பொடியாலும் அல்லது கோமாதாவின் (பசுஞ்) சாணத்தாலும் என இவைகளில் ஏதோ ஒன்றினை கையால் பிடித்து (துகள்களாக உள்ளவைகளை ஒன்று திரட்டி) வைத்தால் அங்கு (பிடி) விநாயக மூர்த்தி மிக அழகாக எழுந்தருள்வார் என்பது ஐதீகம்.

விநாயகருக்கு வீதியில் விளைந்திருக்கும் அருகம்புல், தும்பைப்பூ, எருக்கம்பூ என இவைகளில் ஏதேனும் ஒன்றை சூட்டி மனம் உருகி வழிபட்டால், அவரின் அனுக்கிரஹம் முழுமையாகக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடு வணங்கி வந்துள்ளார்கள் நமது முன்னோர்கள்.


இந்நிலையில் ஆன்மீகத்தின் மதிப்பு, தமிழ் மொழியின் சிறப்பு அறியாத சில மனிதர்களின் தவறான வார்த்தை உச்சரிப்பால் திரட்டு எனும் வார்த்தை திருட்டு என உச்சரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி ஒரு கோயில் கட்ட வேண்டும் என்றால் அதில் ஒரு விநாயகர் சிலை முதலில் நிறுவ வேண்டும். அந்த விநாயகரும் மற்ற கோயிலிலிருந்து திருடி வந்து வைத்தால் தான் சிறப்பு என்ற பழக்கத்தை ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். இது சில காலமாக குறிப்பாகத் தமிழ் நாட்டில் நடைபெற்று வருகிறது. இக்கருத்தினை முன் நிறுத்தி சில திரைப்படங்களும் வந்துள்ளது என்பது மிகவும் வேதனை தரும் செய்தியாகும். பிறக்கோயில்களில் உள்ள பிள்ளையார் சிலையைத் திருடி வந்து தாங்கள் கட்டும் புதிய கோயில்களில் வைத்து வழிபடும் நிகழ்வுகள் இன்றும் பல பகுதிகளில் அரங்கேறி வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

திரட்டு என்பதற்கு விளக்கம் என்னவெனில் தனித்தனியாக இருக்கும் பலவற்றை ஒன்று சேர்த்தல் எனப் பொருள். இந்தத் திரட்டு வார்த்தையே இன்று திருட்டு ஆகிவிட்டது.

அன்னை மகாசக்தி தன் பதியான தன்னுடலில் ரூபமான பரமனை (சிவனை) கஜமுகாசூரனின் அன்பின் சிறையில் இருந்து மீட்டெடுக்க தன் சக்தி அதிகரிக்க தவம் செய்யும் பொருட்டு தன் தவத்திற்கு எந்தவொரு இடையூறும் வராமல் பாதுகாக்க தனது உடலிலிருந்து திரட்டி எடுக்கப்பட்ட மஞ்சள் துகள் குவியல்களைக் கொண்டு பார்வதி தேவி தன் கைகளினால் பிடித்து தன் சக்திகளை அதற்கு கொடுத்து உருவாக்கிய ஒரு உயரிய சக்தி வடிவம்தான் இந்த திரட்டு விநாயகர் என்பது ஐதீகம். இந்தத் திரட்டு என்ற வார்த்தை மருவி இன்று திருட்டு விநாயகராகப் பரிமாணம் கொண்டுள்ளது.

நமது முன்னோர்கள் கண்டிப்பாக நம்மை தவறு செய்ய சொல்லியிருக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து, இனி வரும் காலங்களில் கோயில்களுக்கு விநாயகரை மற்ற கோயிலிலிருந்து திருடி கொண்டு வந்து வைத்தால்தான் சிறப்பு என்று நினைக்காமல் விலை தந்து புதிய விநாயகரை பிரதிஷ்டை செய்து மூத்தோர் ஆத்மா மகிழும் படியும், நம் சந்ததிகளுக்கு நல்லதொரு பழக்கத்தையும், நற்பண்புகளையும் உருவாக்குவோம்.

அலசுவோம்... அறிவோம்... ஆதிகாவிய நாயகர்களை...




திரு. எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம், 94861 39685

# அராஜகத்தை அரங்கேற்றிய கீசகன்

பன்னிரண்டு வருட வனவாசத்தைத் தொடர்ந்து பாண்டவர்கள் தங்களின் அடையாளத்தை மறைத்துக் கொண்டு ஒருவருட காலம் அஞ்ஞாதவாசம் புரியவேண்டிய காலம் வந்தது.

அவ்வாறு வெற்றிகரமாக அஞ்ஞாதவாசத்தை முடித்த பின்னரே அவர்களுடைய ராஜ்ஜியம் அவர்களுக்குத் திரும்பக் கிடைக்கும் என்பதும், ஒருவேளை அஞ்ஞாதவாச காலத்தில் அவர்களுடைய அடையாளம் வெளிப்பட்டுவிட்டால் மீண்டும் வனவாசம் செல்லவேண்டும் என்பதும் சூதாட்ட நேரத்தில் பாண்டவர்கள், கௌரவர்கள் தரப்பினரால் ஒப்புக்கொள்ளப் பட்ட விதிகளாகும்.

இந்நிலையில், தங்களுடைய வனவாசத்தை முடித்துக் கொண்ட பாண்டவர்கள் ஐவரும், திரௌபதியுடன் மத்ஸ்ய தேசத்தை அடைந்தனர். தாங்கள்தாம் பாண்டவர்கள் என்பதை யாரும் அறியாதவண்ணம் தங்களின் அடையாளங்களை மறைத்துக்கொண்டு, அத்தேசத்தின் மன்னனாகிய விராட ராஜனைச் சந்தித்து அரண்மனையில் பணிசெய்வது என்று முடிவு செய்தனர்.

இயற்கையிலேயே அழகும், தேஜஸ்ஸும் நிரம்பியவர் களாகிய பாண்டவர்கள் ஐவரையும், திரௌபதியையும் பார்க் கும் பொழுது இவர்கள் பிறரால் ஏவப்படத் தகுந்தவர்களல்ல என்று கருதிய விராட ராஜன் அவர்களைத் தனது அரண்மனை யில் பணியாளர்களாக நியமிக்கத் தயக்கம் காட்டினான்.

பின்னர், தாங்கள் சாதாரணப் பின்னணியைச் சேர்ந்தவர் கள் என்றும், தங்களுக்கு இடப்பட்ட பணிகளைச் சிரத்தையு டன் நிறைவேற்றத் தயாராக இருப்பதாக வும் அவர்கள் உறுதியளித்ததைத் தொடர்ந்து சமாதானமடைந்த விராட ராஜன் அவர்களைத் தனது அரண்மனை யில் பணிசெய்ய அனுமதித்தான்.

அதைத்தொடர்ந்து யுதிஷ்டிரர் விராட ராஜனின் ஆலோசகராகவும், பீமசேனன் அரண்மனைச் சமையற்கார னாகவும் அமர்த்தப்பட்டனர். நபும்ஸக உருவம் தரித்துக்கொண்ட அர்ஜுனன் பிருஹன்னளை என்ற பெயருடன் அரண்மனைப் பெண்களுக்கு நாட்டிய சாஸ்திரம் கற்றுக்கொடுக்கத் தொடங்கி னான். நகுலன் விராடராஜனின் தேர்க் குதிரைகளைப் பராமரிப்பவனாகவும், சகாதேவன் பசுக்களைப் பராமரிப்பவனா கவும் நியமிக்கப்பட்டனர். அஸ்தினாபுரம் அரண்மனையில் ஏற்கெனவே பணிப் பெண்ணாகப் பணிபுரிந்த அனுபவம் தனக்கு உள்ளதாகக் கூறிக்கொண்ட திரௌபதி விராடமன்னனின் பட்டத்தரசி யாகிய சுதேஷ்ணையின் அந்தப்புரத்தில் ஒரு பணிப்பெண்ணாக அமர்த்தப் பட்டாள்.

விராட மன்னன் சற்றே வயதாகியவ னாக இருக்க, அவருடைய மகனாகிய இளவரசன் உத்தரன் அனுபவமற்ற இளைஞனாக இருந்தான். இந்நிலையில் சுதேஷ்ணையின் சகோதரனும், பலவா னுமாகிய கீசகன் அவ்வரசனின் படைத் தளபதியாகச் செயல்பட்டுக் கொண்டு இருந்தான்.

தளபதி பட்டத்துடன் மகாராஜாவின் மைத்து னன் என்ற உறவுமுறையும் சேர்ந்துக் கொள்ள விராடனின் ராஜ்ஜியத்தில் கீசகனின் அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது. பெண்கள் விஷயத்தில் பலவீன சிந்தனை உடையவனும், மோகவசப்பட்ட வனுமாகிய கீசகன் அரண்மனையில் பணிபுரியும் பணிப்பெண்களைத் தனது அதிகாரத்தால் வசப் படுத்தி அனுபவித்து வந்தான். அரசியாகிய சுதேஷ் ணையும் தன்னுடைய தம்பியாகிய கீசகனின் மீதுள்ள பாசத்தினால் அவனுடைய தீய நடத்தை களைக் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டாள்.

இந்நிலையில், அரண்மனையில் புதிதாகச் சேர்ந்த பணிப்பெண்ணாகிய திரௌபதியின் பேரழ கில் மயங்கிய கீசகன் அவளையும் தனது வசப் படுத்தத் துடித்தான்.

நேரடியாகவும் மறைமுகமாகவும் திரௌபதிக்கு நெருக்குதல் கொடுக்கத் துணிந்த கீசகனின் சீண்டல்களை திரௌபதி அலட்சியம் செய்துகொண்டே வந்தாள். இதனால் ஆத்திரம் முற்றிய கீசகன் தன்னுடைய சகோதரியும், விராட தேசத்து அரசியுமாகிய சுதேஷ்ணையிடம் நேரடி யாகச் சென்று அவளுடைய பணிப் பெண்ணாகிய திரௌபதியைத் தான் அடைவதற்கு உதவுமாறு சிறிதும் வெட்கமின்றிக் கேட்டுக் கொண்டான்.

சுதேஷ்ணையும், தன் சகோதரன் கீசகனைக் கண்டித்து நெறிப்படுத்துவதற்குப் பதிலாக அவ னுக்கு இவ்விஷயத்தில் உதவுவதாக உறுதி அளித்தாள். ஒரு சில நாட்கள் கழித்து ஓர் இரவு வேளையில் திரௌபதியை அழைத்த அரசி சுதேஷ் ணையானவள் அவளிடம் ஒரு தங்கப்பாத்திரத்தை அளித்து, "என் சகோதரன் கீசகனின் அரண்மனை யில் உயர்தரமான மது தயாரிக்கப்பட்டு வருகிறது. நீ உடனே அவ்வரண்மனைக்குச் சென்று இந்தப் பாத்திரத்தில் மதுவை நிரப்பிக்கொண்டு வருவாயாக!" என்று உத்தரவிட்டாள்.

இதைக்கேட்டு திடுக்கிட்ட திரௌபதி, மகா ராணியே, தங்கள் தம்பி கீசகன் பலமுறை என்னிடத் தில் தவறாக நடந்து கொள்ள முயற்சித்துள்ளார். இந்நிலையில் அவருடைய அரண்மனைக்கு எவ் வாறு நான் தனியாகச் செல்வது? என வினவினாள்.

"அதெல்லாம் ஒன்றும் ஆகாது. நீ உடனே கிளம்பிச் சென்று அங்கிருந்து மதுவை எடுத்துக் கொண்டு வா!" என்று சுதேஷ்ணை கட்டளையிட, என்ன நடந்தாலும் அதைத் துணிவுடன் எதிர் கொள் வது என்று தனது மனதைத் திடப்படுத்திக் கொண்ட திரௌபதி கீசகனின் அரண்மனைக்குச் சென்றாள்.

எதிர்பார்த்தபடியே அங்கிருந்த கீசகன் திரௌபதியிடம் தவறாக நடக்க முனைந்தான். அடுத்த கணமே அவனைத் தள்ளிவிட்டு மீண்டும் பட்டத்தரசி சுதேஷ்ணையின் அரண்மனையை நோக்கி விரைந்த திரௌபதியைப் பின்தொடர்ந்து வந்த கீசகன் மன்னன் விராடனின் எதிரிலேயே அவளைத் தாக்க முற்பட்டான்.

தன்னுடைய மைத்துனனும், தனது நாட்டைக் காக்கும் தளபதியுமாகிய கீசகனின் செயலைக் கண்டிக்கும் சக்தியற்றவனாய் திரௌபதிக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான் விராடமன்னன்.

நடந்தவற்றை அரசியிடம் சொல்லி முறையிட்ட திரௌபதி நேராகத் தனது இருப்பிடத்திற்குத் திரும்பினாள். அன்றிரவு பீமசேனனிடம் நடந்தவை அனைத்தையும் விவரித்துக் கதறினாள் திரௌபதி.

கீசகனின் தீய நடத்தையைக் கேட்டு ஆத்திரம் கொண்ட பீமசேனன் திரௌபதியைத் தேற்றி ஆறு தல் கூறினான். "கலங்காதே திரௌபதி! நாளைய தினம் அந்தக் கீசகனை நீ சந்தித்து அரண்மனையின் ஆளரவமற்ற இடத்திற்கு இரவு நேரத்தில் தனியாக வருமாறு அழைப்பு விடுப்பாயாக! உனக்குப் பதி லாக நான் அவ்விடத்திற்குச் சென்று அங்கு வரும் கீசகனின் கதையை முடிக்கிறேன்" என்று சபதம் செய்தான் பீமசேனன்.

மறுநாள் திரௌபதி சுதேஷ்ணையின் அரண் மனைக்குச் சென்ற பொழுது அவளை வழிமறித்த கீசகன், தன்னுடைய ஆசைக்கு இணங்கும்படி மீண் டும் மிரட்டினான்.

திரௌபதியும் பீமசேனனின் அறிவுரைப்படி அக்கீசகனை அரண்மனை நாட்டிய அரங்கத்திற்கு இரவு நேரத்தில் ஆள் நடமாட்டமில்லாத சமயத்தில் வரும்படி கூறினாள். மிகுந்த மகிழ்ச்சியுடன் அன்றிரவு தன்னை அலங்கரித்துக்கொண்டு, வாச னாதி திரவியங்களைப் பூசிக்கொண்ட கீசகன் திரௌபதி கூறியபடி ஆள்நடமாட்டமற்ற நேரத்தில்

அரண்மனையின் நாட்டியசாலைக்கு வந்தான். அங்கே ஒரு பெண்ணைப்போன்று வேடமிட்டுக் கொண்டு தனது முதுகைக் காட்டியபடி நின்று கொண்டிருந்த பீமசேனனைக் கண்டு அந்த திரௌபதியே தனக்காகக் காத்திருப்பதாக எண்ணி சந்தோஷத்துடன் கீசகன் கட்டியணைத்தான்.

உடனடியாகத் தனது பெண் வேடத்தைக் களைந்த பீமசேனன் அந்தக் கீசகனுடன் நீண்ட நேரம் ஆவேசமாக மல்யுத்தம் செய்து, இறுதியில் அவனைக் கொன்றான். தனது இருப்பிடத்திற்குச் சென்று ஆயாசம் தீரக் குளித்துவிட்டு, நடந்தவை அனைத்தையும் திரௌபதியிடம் விவரித்தான்.

திரௌபதியும் மனம் மகிழ்ந்ததுடன், கீசகனின் தொந்தரவு இனி இல்லை என்று நிம்மதியடைந்தாள்.

வரலாறு தோன்றிய காலத்திலிருந்து காமுகர்களும் தோன்றியபடியே இருக்கின்றனர். தரும நெறிகளுக்கு அப்பாற்பட்ட முறையில் தாம் காணுகின்ற பெண்களை எல்லாம் காமுறுகின்ற அக்கயவர்களும் தங்களின் அதிகாரம், பலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவர்களை வசப்படுத்த முயல்வதும், அம்முயற்சியின் பலனாகப் பலவித அவமானங்களுக்கு ஆளாவதுடன், இறுதியில் தங்களுடைய உயிரையே விட நேர்வதும் நடக்கத்தான் செய்கிறது. உலகின் தலைசிறந்த மல்யுத்த வீரர்களாக பீமசேனன், பலராமர், கீசகன் ஆகிய மூவரும் விளங்கியதாக மகாபாரதக் காவியம் எடுத்துரைக்கின்றது.

அத்தகைய பலசாலியாகிய கீசகன் மகாபாரத யுத்தத்தில் ஈடுபட்டு மரணமடைந்திருந்தால் வீர சுவர்க்கத்தை அடைந்திருப்பான். ஆனால், பெண்ணாசையின் காரணமாக மதியிழந்து திரிந்த அக்கீசகன் அவமானகரமான விதத்தில் தனது உயிரை விட்டதை எண்ணி அனுதாபப்படுவதைத் தவிர நம்மால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

இதுமட்டுமின்றி, கீசகனின் நடத்தையானது இன்னோர் அரிய உண்மையையும் நமக்கு விளக்குகின்றது. ஒரு நாட்டின் அரசன் மறைந்து போனவுடன், அடுத்ததாக யாரும் பட்டமேற்காவிட்டால் அந்நாட்டின் அமைதியும் ஒழுங்கும் சிதைவுறும். தீமை புரிபவர்களைத் தட்டிக்கேட்க யாரும் இருக்க மாட்டார்கள் என்பதால் அத்தேசத்தின் குடிமக்கள் துன்புறுவர். இத்தகைய நிலைமையைத் தான் நம் முன்னோர்கள் அராஜகம் அதாவது அரசன் இல்லாத நிலைமை என்று அழைத்துள்ளனர்.

மேலும், அரசன் என்று ஒருவன் இருந்து, அவன் பலவீனமானவனாகவும், தீமை செய்யும் உறவினர்களைக் கண்டிக்காதவனாகவும் இருந்தால், அப்பொழுதும் அராஜகம் நிலவும் என்பதை விராட மன்னனின் மைத்துனனாகிய கீசகனின் நடத்தை நமக்கு விளக்குகின்றது

புண்ணிய பூமியாகிய நமது பாரததேசத்தில் இனி எந்தக் காலத்திலும் அத்தகைய அராஜகச் சூழ்நிலை ஏற்படாதவாறு நம்மையும், நம்முடைய சந்ததியினரையும் காத்திட வேண்டுமென்று எல்லாம் வல்ல திருவேங்கடமுடையான் திருவருள் புரிய நாமெல்லாம் பிரார்த்தனைச் செய்வோமாக.

## சேஷனின் சேவை



*''சென்றால் குடையாம் இருந்தால் சிம்மாஸனமாம்''* என்ற பாசுரத்தின்படி ஆதிசேஷன் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் (தொண்டு) செய்து வருகின்றான். அதுமட்டுமல்லாமல் இராம அவதாரக் காலத்தில் *''அஹம் ஸர்வம் கரிஷ் யாமி''* என்று தொண்டினை ஆற்றினவன். எம்பெருமானுக்குத் தொண்டு புரிபவர்களில் முதன்மையானவர்களில் ஒருவராக விளங்கும் ஆதிசேஷனை சிராவண (ஆவணி) மாதம் வளர்ப்பிறை சதுர்த்தி (நாகசதுர்த்தி) அன்று வழிபட்டால் நாக தோஷங்கள் நீங்கிடும். மேலும், திருமணப் பிராப்தி, புத்திரப்பிராப்தி கிட்டிடும். அன்றைய தினம் திருமலையிலும் திருமலையப்ப ஸ்வாமி சேஷ வாகனத்தில் திருமாட வீதிகளில் எழுந்தருளி தன்னை நாடி வரும் பக்தர்களுக்குத் தரிசனமளிக்கின்றார்.

# குறுக்கெழுத்துப் புதிர் -121

## இடமிருந்து வலம்

01. முருகனுக்கு உகந்த நட்சத்திரங்களில் ஒன்று ...(5)
09 கன்னட தாசர்களில் முதன்மை ஆனவர்...(8)
11. மகாவிஷ்ணுவின் திருக்கரத்தில் இருப்பது ...(3) சக்கரம் .
12. பாரதம் என்ற பெயர் வைக்கக் காரணமானவர் ...(4) .
15. பஞ்ச பாண்டவர்களில் ஒருவர் (பலசாலி) ...(5)
16. பகவான் ஏழைப்...(5)
17. சகுந்தலையின் கணவன்...(6)
18. மகாபாரதத்தில் பரதனின் தாயார்...(5)
20. அர்ஜுனனின் வேறு பெயர்...(6).
22. மகாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களின் தொகுப்பு ...(6)
23. ஓம்...(7)நம: அஷ்டாக்ஷரம்.

## வலமிருந்து இடம்

03. ...(6)ம் ஆண்டாள் அருளிய கனாகண்ட பாசுரம்.
05. ...(3) தாளம் பல்லவி என்பார்கள்.
07. திருவரங்கத்தில் ஒலிக்கும் கோஷம் ...(3).
08. ...(2)யை வாரணாசி என்றும் சொல்லலாம்.
19. பகவான் ஸ்ரீகிருஷ்ணன் லீலைகளைக் கூறும் புராணம்...(5).
20. பஞ்சபாண்டவர்களில் மூத்தவர்...(4)

## மேலிருந்து கீழ்

01. பகவான் ஸ்ரீ...(5) ருக்மணியின் கணவர்.
03. அனுமனுக்கு ...(7) என்று பெயர்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | 3 | 4 |
| | | | | 5 | | | 6 | | 7 | | |
| | | | | | 8 | | | | | | |
| | | 9 | | | | | | 10 | | | |
| | | | 11 | | | | | | | | |
| | | | | 12 | | 13 | | | 14 | | |
| | 15 | | | | | 16 | | | | | |
| 17 | | | | | | 18 | | | | | |
| | | | | | | | 19 | | | | |
| | | | | | 20 | | | 21 | | | |
| 22 | | | | | | | | | | | |
| | 23 | | | | | | | | | 24 | 2 |

தொகுப்பு : திரு. எம்.ராஜன், சென்னை,

புதிருக்கான விடை 47ஆம் பக்கத்தில் உள்ளது.
வாசகர்கள் சரி பார்க்கவும்...

04. ...(8) பிரபலமான ராகங்களில் ஒன்று.
06. சாகுந்தலம் இயற்றியவர்...(5).
10. ...(3) இல்லையேல் சிவமில்லை.
14. மகாபாரதத்தில் வனப்பருவம் கூறும் கதை...(7).
15. விஷ்ணு சகஸ்ரநாமம் அருளிச் செய்தவர் ...(4) .
17. கௌரவர்கள் நூறு பேரில் மூத்தவர் ..(5)ன்.
21. துரியோதனனின் மாமா ...(3) .

## கீழிருந்து மேல்

02. ஆறுமுகன்...(5).
13. இராமபிரானின் தந்தை...(4).
15. பட்டு ...(6) என்பார்கள்.
17. ஏகலைவனிடம் குரு தக்ஷிணையைக் கேட்டவர்... (4) .
24. தேவலோக சிற்பி...(3).

# குடும்ப நலம் பெருகும் கருட தரிசனம்

திரு. பொ.பாலாஜி கணேஷ்,
சிதம்பரம்,
9842550844

விஷ்ணுவின் அம்சம் கருடன். கருட தரிசனம் பார்ப்பது நல்ல சகுனம் என்பார்கள். கருடனைத் தரிசிக்கும்போது நம்முடைய மனம் நிறைவடைகிறது. அதாவது நம்முடைய துன்பங்களையும், துயரங்களையும் போக்க பகவான் விரைந்து வர கருடனே பேருதவியாய் இருக்கிறார். இதனாலேயே இவரை கருடாழ்வார் என்கிறோம்.

கருடாழ்வார், மகா பலம் உடையவர். கச்யபர் – விநதை தம்பதிக்கு இரண்டாவது மகனாக ஆடி மாதம், சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர் கருடாழ்வார். இவருக்கு ருத்ரை மற்றும் சுகீர்த்தி என்னும் இரண்டு மனைவியர் உள்ளனர். கடவுளை நேரில் தரிசிப்பதைப் போன்றது வானில் கருடனைத் தரிசிப்பது. ஆகாயத்தில் கருடன் வட்டம் இடுவதோ, குரல் எழுப்புவதோ நல்லதொரு அறிகுறி ஆகும்.

கருடனை வணங்கினால் பகவானை வணங்கிய பலன் கிடைக்கும். நம் நாட்டில், எந்தக் கடவுளுக்குரிய ஆலயங்களின் கும்பாபிஷேகம் நடந்தாலும் அந்த நேரத்தில் வானத்தில் கருடன் வட்டம் இடுகிறானா என்பதையே மிகவும் முக்கியமாகப் பார்ப்பர்கள். ஏனென்றால் கருடன் வந்து தரிசனம் தந்தால்தான் கும்பாபிஷேகமே முழுமைப் பெறுவதாக நம்புகின்றனர்.

கருடனின் அழகிய இறக்கைகளே யக்ஞங்கள் என்றும், மந்திரங்களில் சிறந்த காயத்திரியே கருடனின் கண்கள் என்றும், தோத்திர மந்திரங்கள் அவனுடைய சிரசு என்றும், சாம வேதம் அவனுடைய உடல் என்றும் சாமவேதம் குறிப்பிடுகிறது. மகாவிஷ்ணு பல்வேறு விதமான வாகனங்களில் அருள்பாலித்தாலும் கருட வாகனத்தில் எழுந்து அருளி சேவை சாதிப்பது மிகவும் சிறப்பானதாகும்.

கருடனின் இந்தத் தரிசனத்தை அவர் நினைத்தால்தான் தரிசிக்க முடியும் என்பது ஐதீகம். விஷ்ணு தலங்களில் கருடாழ்வார் பெரிய திருவடி என்று அழைக்கப்படுகிறார். இவரை மங்களாலயன், பக்ஷி ராஜன், சுபர்ணன், புஷ்பப் பிரியன், வினதைச் சிறுவன், வேதஸ்வரூபன், வைனதேயன் போன்ற எண்ணற்ற பெயர்களால் அழைக்கின்றனர். இவர் பெருமாளின் வாகனமாகவும், கொடியாகவும் விளங்குகிறார்.

பெருமாள் கருடனை வாகனமாக ஏற்கும் போது, வெற்றிக்கு அறிகுறியாக நீ என் கொடியிலும் விளங்குவாய் என்று வரமளித்தார். பறவைகளின் அரசன் கருடனைத் தரிசிப்பது சுபசகுனமாகும்.

ஸ்ரீமந்நாராயணன் எத்தனை விதமான வாகனத்தில் தரிசனம் தந்தாலும் கருட வாகனத்தில் தரிசனம் தருவது தனிச்சிறப்பு.



## எப்படி வணங்க வேண்டும்

மாலை நேர கருட தரிசனம் சுபகாரியங்கள் வீட்டில் நிகழப் போவதை முன்னறிவிக்கிறது. அது போல ஒவ்வொரு கிழமைகளில் நீங்கள் செய்யும் கருட தரிசனம் உங்களுக்கு பல பலன்களைக் கொடுக்கும். அதாவது வியாழன் பஞ்சமியில் சுவாதி நட்சத்திரத்தில் கருட பஞ்சாங்கத்தைப் படிப்பது நல்ல பலனைத் தரும். சுவாதியில் மாலை நேர கருட தரிசனம் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

தேவலோகத்தில் இருந்து கருடன் எடுத்து வந்த அமுத கும்பத்தில் ஒட்டிய தேவப்புல்லே பூவுலகில் விழுந்து தர்ப்பை ஆனதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. கருடனை வழிபடும் போது கைகளை கூப்பாமல், கன்னத்தில் மோதிர விரலை வைத்து மானசீகமாக வணங்க வேண்டும். கருட பெருமான் திருமாலின் இரண்டு திருவடிகளையும் தம் இரு கரங்களால் தாங்கி ஊர்வலமாக வரும் காட்சியே கருட சேவை எனப்படும். அப்போது பெருமான், கருடன் ஆகிய இருவரின் அருளும் ஒருங்கே கிடப்பதைப் பக்தர்கள் புனிதமாகக் கருதுகிறார்கள்.

## நன்மைகள்

ஆயிரம் ஆயிரம் சுப சகுணங்கள் கிட்டினாலும் ஒரு கருட தரிசனத்திற்கு ஈடாகாது என்பது வழக்கு. கருட தரிசனம் தன்னிகரற்றது. கருடனைத் தரிசிப்பது பாவம் போக்கும். தோல் வியாதிகள், நீண்ட நாள் நோய் விலகும். நாக தோஷம் பறந்தோடும். கருட தரிசனம் செய்வது பூஜைகளிலும் மந்திர உச்சரிப்பிலும் தெரியாமல் ஏற்படும் தவறுகளைப் போக்க வல்லது. மணமான பெண்கள் கருட பஞ்சமி நாளில் கருடனைப் பூஜை செய்தால் பிறக்கும் குழந்தைகள் அறிவும், வீரமும் உடையவர்களாக விளங்குவார்கள். கெட்ட சகுணங்கள், துர் சக்திகளின் கிரியைகள் போன்ற அனைத்தும் கருட தரிசனத்தால் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்தோடி விடும். அழகிய கருட பகவானின் தரிசனம் கண்டாலே உள்ளத்தில் உற்சாகமும், ஊக்கமும் உண்டாவதை நன்கு உணரலாம்.

அடிக்கடி பாம்பு எதிர்படுதல், கெட்ட கனவு, காரணமில்லாத பயம் போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் கருடபஞ்சமி விரதத்தை மேற்கொள்ளலாம். பெண்கள் தீர்க்க சுமங்கலி பாக்கியம் வேண்டி இவ்விரதம் கடைபிடிப்பார்கள். சிறந்த பக்தி, ஞாபக சக்தி, வேதாந்த அறிவு, வாக்குச் சாதுரியம் போன்றவை கருடனை வணங்கும் போது கிடைக்கும் என ஈஸ்வர சம்ஹிதை என்ற நூல் விவரிக்கிறது. கருடாழ்வாரை வணங்கி விரதம் இருந்தால் மனநோய். இதயநோய், தீராத விஷநோய்கள் தீரும் என கருடதண்டகம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் கருட பகவானை தரிசனம் செய்தால் நோய் அகலும்.
திங்கட் கிழமைகளில் தரிசனம் செய்தால் குடும்ப நலம் பெருகும்.
செவ்வாய்க்கிழமைகளில் தரிசனம் செய்தால் துணிவு பிறக்கும்.
புதன் கிழமைகளில் தரிசனம் செய்தால் பகைவர் தொல்லை நீங்கும்.



வியாழக்கிழமைகளில் தரிசனம் செய்தால் நீண்ட ஆயுள் கிடைக்கும்.
வெள்ளிக்கிழமைகளில் தரிசனம் செய்தால் திருமகள் திருவருள் கிட்டும்.
சனிக்கிழமைகளில் தரிசனம் செய்தால் முக்தி அடையலாம்.

### 2026, செப்டம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 04 | ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி, கோகுலாஷ்டமி. |
| 13 | ஸ்ரீபலராம ஜெயந்தி, ஸ்ரீவராஹ ஜெயந்தி. |
| 14 | விநாயக சதுர்த்தி. |
| 15-23 | திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம். |
| 19 | திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை. |
| 21-24 | திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 23-26 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பவித்ரோத்ஸவம். 23 வாமன ஜெயந்தி. |
| 24 | திருமலையப்ப ஸ்வாமி பாக் சவாரி உத்ஸவம். |
| 25 | அனந்தபத்மநாப ஸ்வாமி விரதம். |




# அடக்கம் என்பது உயர்ந்த குணம்

– திரு.ஜெ. சுவாமிநாதன், சென்னை, 97907 22242

**பரதனின் அடக்கம்**

இராமன் வனம் சென்ற பிறகு ஒரு சமயம் பரதன் சபையைக் கூட்டினான். இராமன் காடு செல்வதற்கு காரணம் யார் என்று தீர்மானிக்க வேண்டும் என்றான். அவையில் உள்ள சிலர் கூனி தான் காரணம் என்றனர். அவள் அல்லவோ இராமனுடைய பட்டாபிஷேகத்தைக் கெடுத்தவள் என்றனர். மற்றும் சிலர், கூனி கலகம் செய்தாலும் இராமனுடைய தன்மையை அறிந்த கைகேயி ஏன் கேட்டாள்?

கலகம் சொல்பவர், கோள் சொன்னாலும் இவள் ஏன் கேட்கவேண்டும்? ஆக கைகேயி தான் காரணம் என்றனர். மற்றும் சிலர் கைகேயியின் வார்த்தையைக் கேட்ட அரசன்தான் காரணம், அபிஷேகம் செய்து வைக்கிறேன் என்று சொன்ன அரசன் கைகேயியின் இரு வரங்களுக்கு ஏன் உட்பட வேண்டும்?

இராஜாங்க சம்பந்தப்பட்ட விஷயத்தில் நீ தலையிடுவது தவறு என்று சொல்லிவிடலாமே, ஆக தசரதன் தான் காரணம் என்றனர். மற்றும் சிலர் அரசனின் குற்றம் அன்று, இராமனின் குற்றம் என்றனர். பதினான்கு வயது நிரம்பிய புதல்வன் மித்ரனுக்கு சமம் என்கிறது சாஸ்திரம். இராமன், தந்தையைப் பார்த்து, 'முன்பின் விரோதமாய் சொல்லுகிறாய், தந்தையே! நீ கைகேயியிடம், உனக்கு இரு வரம் அளித்தது உண்மை.

அந்த வரங்களுக்குக் கட்டுப்பட்டவன் நான், என்னைக் காட்டுக்குப் போ என்று சொல்லலாம், என் சிரஸையும் கேட்கலாம், இரு வரங்களுக்கு கட்டுப்பட்டவன் இராமன் அல்ல; பரதனுடைய பங்கை அவனிடம் கொடு; எனக்கு உட்பட்ட பாகத்தை நான் ஆட்சி செய்கிறேன்; உனக்கு சம்மதம் இல்லையெனில் தர வேண்டாம்; காட்டுக்கு என்னை அனுப்ப உனக்கு என்ன உரிமை? என்று தசரதனிடம் கேட்டிருக்க வேண்டும். அப்படி சொல்லாமல் காட்டிற்குச் சென்றது இராமனுடைய குற்றம் என்றனர்.

இதையெல்லாம் கேட்ட பரதன் எழுந்து, "கூனி, கைகேயி, தசரதன், ராகவன் இவர்கள் ஒருவரின் குற்றமும் அன்று! என்னுடைய குற்றம் தான் காரணம். நான் கைகேயியின் வயிற்றில் பிறக்காமல் இருந்தால் இது ஏற்படுவதற்கு வழியே இல்லையே" என்றான்.

**"என்பதைக் கேட்ட மைந்தன் இராமனுக்கு இளையார் என்று முன் பொத்த தோற்றத்தேமில் யான் முடிவில்லாத துன்பத்துக்கு ஹேதுவானேன் அவன் அது துடைக்க நின்றான் துன்பத்துக்கு எல்லை உண்டே அழகிது அடிமை என்றான்"**

– கம்பராமாயணம்.

இப்படி பரதன் தன்னிடம் குற்றம் இல்லாத போதும் தானே குற்றவாளி என்று சொன்னான். திருப்பாவை 15ஆம் பாசுரத்தில் ஆண்டாளும் "நானேதாநாயிடுக" என்று அருளினாள்.

## கதையின் நீதி

**பிறர் நம்மை காரணம் இருந்தோ இல்லாமலோ தூஷித்தாலும், அதை ஏற்றுக்கொள்பவன்தான் மனிதத்தன்மை பெற்றவன். ஒரு பாகவதர் கொடூரமான சொல்லைச் சொன்னால் அதைக்கேட்டு வணக்கத்துடனும், பொறுமையுடனும் பேசுபவன் தான் வைஷ்ணவன்.**





# ஸ்ரீவைகுண்டகத்யமும் ஆழ்வார்களின் பாசுரங்களும்


திரு.ஏ.கே.கோபி,
கள்ளக்குறிச்சி,
94438 79592.


*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**நித்ய சூரிகள் :**

*ஸ்வஸங்கல்ப மாத்ர அவக்லுப்த ஜகஜ்ஜந்ம*
*ஸ்திதி த்வம் ஸாதிகே ஸ்ரீமதீ விஷ்வக்சேனே*
*ந்யஸ்த ஸமஸ்த ஆத்மைஸ்வர்யம்*
*வைநதேயாதிபி: ஸ்வபாவதே நிரஸ்த ஸமஸ்த*
*ஸம்சாரிக ஸ்வபாவை பகவத் பரிசர்யா காரண*
*யோக்யை: பகவத் பரிசர்யைக போகை: நித்ய*
*ஸித்தை: அனந்தை: யதாயோகம் சேவ்ய மாநம்.*

எம்பெருமானின் திருவுள்ள நியமனப்படி லோகத்தின் கார்யங்ளான ஆக்கல், அழித்தல், காத்தல் எனும்படியான தொழில்களை ஆற்றிவரும் சேனைமுதலிகள், பெரியதிருவடியான கருடன் முதலான நித்யசூரிகள் எம்பெருமானின் திருவடிகளுக்குத் தொண்டு செய்வதைத் தவிர மற்றொன்றை நினையாதவர்களாய், எப்போதும் ஒரே சிந்தனை உள்ளவர்களாய், எம்பெருமானை எப்போதும் வணங்கி வழிபாடு செய்பவர்களாய், சர்வேஸ்வரனின் அருட்பார்வையாலே குளிர்ந்த கடாட்சம் பெற்று உகந்தவண்ணம் உள்ளனர்.

*தத் விஷ்ணோ:பரமம் பதம் ஸ்தா பஸ்யந்தி*
*ஸீரய: திவீவ சக்ஷுராததம்*
*தத் விப்ராஸோ விபந்யவோஜாக்ருவாம்ஸஸ்*
*ஸமிந்ததே விஷ்ணோர்யத் பரமம் பதம்*

–ருக்–அஷ்டக 1–2–7

விஷ்ணுவினுடைய பரமபதத்தை நித்ய சூரிகள் எப்போதும் சேவித்துக் கொண்டு இருக்கிறார்கள். உலகிற்கெல்லாம் கண்ணாயிருந்து ஆகாயத்தில் இருந்து பிரகாசிக்கும் சூரியனைப்போன்று பரமபதம் பிரகாசமாய் ஒளிவீசுகிறது. அவ்வொளியினால் மேதாவிகளும் துதிப்பவர்களும், ஜாகரூரர்களாய் இருக்கும் நித்யசூரிகளும் பிரகாசிக்கின்றனர்.

*வானவர் தங்கள் சிந்தைபோல என் நெஞ்சமே!*
*இனிதுவந்து மாதவ மானவர் தங்கள் சிந்தை*
*அமர்ந்துறைகின்ற வெந்தை*

– பெரியதிருமொழி 2–1–1

*கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்*
*கொலையாழி கொடுந்தண்டு கொற்றவொள்வாள்*
*காலர்ந்த கதிக் கருடனென்னும் வென்றிக்*
*கடும்பறவை இவை அனைத்தும் புறஞ்சூழ் காப்ப*

– பெருமாள் திருமொழி 1–8

*அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன்*
*அஞ்சிறைப்புள் தனிப்பாகன்*

–திருநெடுந்தாண்டகம் 6

**தாயும் தந்தையுமான எம்பெருமான்**

*மமநாதம் மமகுலதைவதம் மமகுலதநம்*
*மமபோக்யம் மமமாதரம் மமபிதரம் மமஸர்வம்*
*எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன்*
*ஏழ்படிகால்*
*தொடங்கி வந்து வழிவழியாட் செய்கின்றோம்*

– திருப்பல்லாண்டு 5

*அத்தனாகி அன்னையாகி யாளுமெம்பி ரானுமாய்*

–திருச்சந்த விருத்தம் –115

*தெளிவிலாக் கலங்கள் நீர்சூழ் திருவரங்கத்து*
*ளோலோங்கும்*
*ஒளியுளார்தாமே யன்றே தந்தையும் தாயுமாவார்*

– திருமாலை –37

*தாயெம்பெருமான் தந்தைதந்தையாவீர் அடியோமுக்*
*கேயெம்பெருமா னல்லீரோ?நீர் இந்தளூரீரே*

– பெரிய திருமொழி 4–9–5

*பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள்*
*திருவருளும்*
*கொண்டு நின் கோயில் சீய்த்துபல்படிகால்*
*குடிகுடிவழி வந்தாட்செய்யும்*

– திருவாய்மொழி –9–2–1

*நீக்கமில்லா அடியார்தம் அடியார் அடியார்*
*அடியாரெங் கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச்*
*செல்லும் நல்ல கோட்பாடே*

– திருவாய்மொழி 8–10–10

*மாதா பிதாப்ராதா நிவாஸஸ் ஸரணம்*
*ஸுஹ்ருத் கதிர் நாராயண:*

–ஸுபாலோபநிஷத் –16

நாராயணன் தாயாகவும், தந்தையாகவும், தன்னுடன் பிறந்தவனாகவும், தங்குமிடமாகவும், மோட்சத்திற்கான உபாயமாகவும், நண்பனாகவும், மோட்சத்தில் அடையப்படுபவனாகவும் உள்ளார்.

**திருவடி தலைமேலவே**

*ஸாஷாத் கரவரணி சஷூஷா கதாஹம் பகவத் பாதாம்புஜத்வயம் ஸிரஸா தாரயிஷ்யாமி கதாஹம் பகவத் பாதாம்புஜத்வய பரிசர்யாஸயா நிரஸ்த சமஸ்ததேதர போகாஸ: அபகத ஸமஸ்த ஸாம்ஸாரிக ஸ்வபாவ: தத்பாதாம்புஜத்வயம் ப்ரவேஷ்யாமி கதாமாம் பகவாந் ஸ்வகீயயாதி ஸீதலாய த்ருஸாவலோக்யா ஸ்நிக்த கம்பீர மதுரயா கிரா பரிசர்யாயாம் ஆஜ்ஞாபயிஷ்யதி*

ஸ்ரீவைகுண்டத்தில் அருள்பாலிக்கும் எம்பெருமானே தேவரீரை பரமபதத்திலே தரிசனம் செய்து, தேவரீரின் திருவடிகளை அடியேனின் தலையாலே தாங்கி அலங்கரித்துகொள்ளும் பாக்கியம் பெற அருள் புரியவேண்டும். தேவரீரின் திருவடிகளின் ஸ்பரிசத்தால் அடியேனின் உலகியல் பற்றுகளும், சம்சார வாழ்க்கையில் உண்டாகக் கூடிய அனைத்து தாழ்ந்த எண்ணங்களும், செயல்பாடுகளும் அடியோடு அழிந்தொழிய அருள்புரியவேண்டும். தேவரீர் அடியேனை திருக்கண்களால் குளிர கடாக்ஷித்து, அத்யந்த கைங்கர்யம் செய்யும் பாக்கியம் அருளவேண்டும்.

*கதா புநஸ் ஸங்கஇதாங்க கல்பக த்வஜார விந்தாங்குஸ வஜ்ரலாஞ்சநம் த்ரிவிக்ரம த்வச்சரணாம் புஜத்வயம் மதீயமூர்த்தா நமலங்கரிஷ்யதி*

– ஸ்தோத்திரரத்னம் –31

திரிவிக்கிரம அவதாரம் செய்தருளிய எம்பிரானே தேவரீரின் சங்கு, சக்கரம், கற்பக வ்ருக்ஷம், கோடி, தாமரை, அங்குஸம் வஜ்ராயுதம் இவைகளை அடையாளமாக உடைய தேவரீரின் திருவடித்தாமரைகள் அடியேனின் தலையினை எப்போதுதான் அலங்கரிக்கப் போகிறது?

*பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதி*
*போல்*
*திருப்பொலிந்த சேவடி என் சென்னியின்மேல்*
*பொறித்தாய்*

–பெரியாழ்வார் திருமொழி 5–4–7

*எம்மா வீட்டுத் திறமும் செப்பம் நின் செம்மா*
*பாதபற்புத் தலைசேர்த்தொல்லை*

–திருவாய்மொழி 2–9–1

*தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை*
*தளிர்புரையும் திருவடியென் தலைமேலவே*

–திருநெடுந்தாண்டகம்–1



**வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்**



*ததோऽப$_4$வத்$_3$யாத$_3$வஸம்ப்ரகாச:*
*ஸ்ரீயாமுநாசார்யகடாக்ஷசுத்$_3$த$_4$:।*
*கே$_3$ாவிந்த$_3$யோகீ$_3$ யதிராஜசிஷ்யோ*
*க்ரந்த$_2$ம் ஸ கஞ்சித்$_3$யதித$_4$ர்ம்மாஹ ॥*

(53)

**ஆளவந்தாருடைய கடாக்ஷத்தால் சுத்தியடைந்த யாதவப்ரகாசரும் யதிராஜருக்கு சிஷ்யராகி, "கோவிந்த ஜீயர்" என்னும் திருநாமம் பெற்று, ஸந்யாஸிகளின் தர்மங்களை விளக்கும் "யதிதர்மஸமுச்சம்" எனும் நூலை இயற்றினார்**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது

*த்ரைவிக்ரம க்ரம க்ருதக்ரமண த்ரிலோகம்*
*உத்தம்சமுத்தம மநுத்தமபக்தி பாஜாம் நித்யம்*
*தநம் மம கதாஹி மதுத்தமாங்கம்*
*அங்கீகரிஷ்யதி சிரம் தவ பாத பத்மம்*

–ஸ்ரீவைகுண்டஸ்தவம்–71

திரிவிக்கிரம அவதாரத்தின் போது மூவுலகங்களையும் அளப்பதற்காக உயர்ந்த தேவரீரின் திருவடிகளை பாகவதோத்தமர்கள் தங்கள் தலையிலே தாங்கி தரிக்கிறார்கள். மிகவும் உத்தமமானதும், அடியேனுக்குக் கிடைக்கப்பெற்ற ஒப்புயர்வு அற்ற செல்வமுமான தேவரீரின் திருவடித் தாமரைகள் அடியேனின் தலையின் மீது வைத்து நித்யமாக தரித்திருக்க அங்கீகரித்து அருளுமாறு தேவரீரின் திருவடிகளைச் சரணடைகிறேன்.

*நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும்*
*திருவேங்கடத்தானே புகலொன்றில்லா*
*அடியேனுன் அடிக்கீழமர்ந்து புகுந்தேனே*

–திருவாய்மொழி 6–10–10

*சன்மசன்மாந்தரங் காத்தடியார்களைக்*
*கொண்டுபோய் தன்மை பெறுத்தித் தன்*
*தாளிணைக் கீழ் கொள்ளும் அப்பனை*

–திருவாய்மொழி 3–7–7

*இசைவித்தென்னை உன்தாளிணைக்கீழ்*
*இருத்தும் அம்மானே*

–திருவாய்மொழி 5–8–9

*தேனேறு மலர்த் துளவம் திகழ் பாதன்செழும்*
*பறவை தானேறித் திரிவன*
*தாளிணை என் தலைமேலே*

– திருவாய்மொழி 10–6–5

*உந்நித்ரபத்ர சதபத்ரஸ கோத்ரம் அந்தர்*
*லேகாரவிந்த மபிநந்தந மிந்த்ரியாணாம்*
*மந்மூர்த்நி ஹந்த கரபல்லவ தல்லஜம் தே*
*குர்வந் கதா க்ருதமநோரத யிஷ்யசே மாம்*

– ஸ்ரீவைகுண்டஸ்தவம்–72

அன்றலர்ந்த தாமரை நன்றாக மலர்ந்து அழகாக விரிந்துள்ளதைப் போன்ற தேவரீரின் திருக்கைத் தலங்களிலே மகரந்த ரேகைகள் பொருந்தி மென்மையோடிருக்கின்றன.தளிர்போன்ற தேவரீரின் திருக்கைத்தலங்களை அடியேனின் தலையிலே பொருத்தி வைத்து அஞ்சேலென அருள் செய்து பரிபூரண கிருபையா? ஆட்கொள்ளவேண்டுமாறு பிரார்த்திக்கிறேன்.

*அணிமிகு தாமரைக் கையை அந்தோ*
*அடிச்சியோந் தலைமிசை நீயணியாய்*

–திருவாய்மொழி 10–3–5

**வைகுண்ட தரிசனம் தொடரும்...**

## கூடித் தொழில் செய்

**புதிய ஆத்திசூடி 18**




ஒரு மரத்தை எடுத்துக் கொண்டோமேயானால் அது வளர்வதற்கு முதலில் விதை போட மண், அடுத்தது நீர், அடுத்தது காற்று, பிறகு சூரிய ஒளி இவையெல்லாம் தேவைப்படுகிறது இல்லையா? ஒரு மரத்தின் வளர்ச்சிக்குப் பின் கண்ணுக்குத் தெரியாத பல விஷயங்கள் இருக்கின்றது. இவையெல்லாம் சேர்ந்துதான் ஒரு மரத்தை கனி கொடுக்க வைக்கின்றன. இதுதான் *"கூடிவாழ்ந்தால் கோடி நன்மை"* என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

இதே மனித வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், அது ஒரு கூட்டு வாழ்க்கையாகும். முதலில் பெற்றோர், பிறகு ஆசிரியர், படிக்கும் நிறுவனம், நண்பர்கள், வேலை பார்க்கும் நிறுவனம், இந்தச் சமுதாயம் என இந்தக் கூட்டமைப்புதான் வாழ்க்கை.

பாரதி *"காக்கை குருவி எங்கள் ஜாதி – நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்"* என்றும், *"முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுதுக்கும் பொதுவுடமை"* என்று பாடுகிறார். ஆதி மனிதனில் இருந்து பரிணாம வளர்ச்சி அடைந்து இன்று தனியாக நிற்காமல் கூட்டாக முயற்சிகள் எடுத்து ஜெயிக்கும் முறைகளை இன்று நாம் பின்பற்றுகிறோம். இன்று நம் நாடு தொழில் முன்னேற்றத்தில் முன்னணியில் நிற்கிறது. இதைத்தான் மகாகவி அன்றே *"கூடித் தொழில் செய்"* என்று கூறினார். நீங்களும் கூட்டோடு தொழில் செய்து வெற்றியடையுங்கள் குழந்தைகளே!

- டாக்டர் கவிஞர் இரா. உமா பாரதி, சென்னை, மகாகவி பாரதியார் வம்சாவளி, 73389 97938




மாத்ருஶ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஶ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே.சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*சென்ற மாத இதழின் தொடர்ச்சி...*

பிருஹஸ்பதி கூறிய வைத்தியத்தை செய்ய தனக்கு உதவியாக வேறு ஒருவரும் இல்லாததால் தானே விடியற்காலையில் எழுந்து மருந்தைத் தேடி ஶ்ரீஹரி புறப்பட்டார்.

அச்சமயத்தில் வராக ஸ்வாமி விருபாசூரனை சம்ஹரித்து பூதேவியுடன் காடு மலை என்று சுற்றித் திரிந்து வந்த அவர் சேஷாத்ரி மலையில் ஶ்ரீஹரியைப் பார்த்தார். ஶ்ரீஹரியைப் பார்த்த அவர் மனித வடிவில் உள்ள அரக்கன் என நினைத்து கொடூரமான சப்தம் எழுப்பினார். அந்த சப்தத்தைக் கேட்டு ஶ்ரீஹரி பயந்த வராய் ஒரு புதரில் சென்று மறைந்து கொண்டார். வராகஸ்வாமி அவரை இரண்டில் ஒன்று பார்த்து விட வேண்டும் என்று நினைத்து அந்தப் புதருக்கு வெளியி லேயே காத்து இருந்தார். ஆனால் கடைசியில் கண்ணீருடன் அவர் இருப்பதைப் பார்த்து காரணம் இல்லாமல் இவர் மீது நாம் கோபம் கொண்டோமே என்று நினைத்து ஹரி இருந்த இடத்திற்குச் சென்று நீ அச்சம் கொள்ளத் தேவை இல்லை என்று கூறி அபயம் கொடுத்தார்.

"ஶ்ரீஹரி! வைகுண்டத்தை விடுத்து வந்ததின் காரணம் என்ன? உன்னுடைய திருமார்பில் லட்சுமியைக் காணவில்லையே ஏன்? சாதாரணமான மனிதனைப் போல இருக்கின்றாயே எதற்கு? தலை யில் காயம் என்ன? சக்தி குறைந்து மிகவும் சோர் வாகக் காணப்படுகிறாயே ஏன்? கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாயே காரணம் என்ன? எனக்கு எல்லாவற்றையும் விளக்கி கூறுவாயாக" என அன்புடன் கேட்டுக் கொண்டார்.

அப்பொழுது "பிருகு முனிவர் வந்ததிலிருந்து, தனக்கு காயம் ஏற்பட்ட காரணம் வரை கூறி, பிருஹஸ்பதி சொல்லிச் சென்ற மருந்தைத் தேடி தனியாக நான் திரிந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்.

ஸ்வாமி உங்களோடு மனம் திறந்து பேசும் வாய்ப்பு கிடைத்தது. அதனால் என் மனதில் இருந்த துயரம் எல்லாம் காணாமல் போனது. கருணை கூர்ந்து என்னை உன்னவனாக ஏற்றுக் கொள்ளுங்கள். வைகுண்டம் விட்டு வந்த நான் இது நாள் வரையில் தாங்கள் இங்கு இருப்பதை அறியாமலேயே இருந்து விட்டேன் என்று கூறியதும், வராகதேவன் இந்த மலையில் விருபாசூரன் என்பவன் விளைகின்ற விளைச்சல் எல்லாற்றையும் தனதாக்கிக் கொண்டு அவனே எடுத்துக் கொள்கிறான். அவனை அழிப்பதற்கு நிறைய நாள் போராட வேண்டி இருந்தது. அவன் என் கண்களுக்குப் புலப்படாமலேயே இருந்து வந்தான். அவன் என் கண்ணில் பட்டவுடன் அவனைத் தண்டித்தேன். அப்படியாக வரும் வழியில்தான் உன்னைப் பார்க்க முடிந்தது. அதனால் உனக்கும் எனக்கும் நட்பு உண்டானது. இது ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருப்பதற்கு மட்டுமல்ல இது எனக்கு ஆனந்தமாகவும் உள்ளது என்றார்.

அவர் கூறியதைக் கேட்டதும் ஸ்ரீஹரி வராக தேவரிடம் கலியுகம் முடியும் வரையில் இம்மலையில் நான் தங்கி இருக்க விரும்புகிறேன். அதனால் நான் தங்குவதற்கான தகுந்த இடத்தை எனக்குக் காட்டுவீராக என்றார். வராக தேவர் அவரிடமிருந்து இதனை எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் கருணையோடு நிதானமாக "ஹரி ஏழைகளுக்கு ஆசை காட்டுவது கூடாது. அதே போல் வலிமை படைத்தவர்களுக்குத் தெரிந்தும் இடம் கொடுக்கக் கூடாது. நீ இந்த இடத்திற்கு பணம் கொடுத்தால் மட்டுமே உனக்கு 100 அடி பூமியை அளந்து கொடுக்க முடியும்" என்றார். அவர் கூறியதைக் கேட்டு ஹரி... "ஸ்வாமி! லட்சுமி என்னிடத்தில் இல்லை. என்னிடத்தில் இருந்திருந்தால் தாங்கள் கேட்டது போலவே நான் உங்களுக்கு அளித்திருப்பேன். ஆதிலட்சுமி என்னிடம் கோபித்துக் கொண்டு கொல்காபூர் சென்று விட்டாள். இந்த உலகத்தில் என்னை நம்பி யார் பணம் கொடுப்பார்கள். என் நிலையோ மக்களிடத்தில் கேட்டு வாங்கிக் கொண்டு வாழ வேண்டிய பரிதாப நிலை" என்றார்.

உண்மையாகவே இருந்தாலும் பணம் இல்லாமல் இடம் கொடுக்க முடியாது என்று உறுதியாகக் கூறினார் வராக தேவர். அதற்கு ஸ்ரீஹரி இந்த நிலப்பரப்பு எல்லாம் உன்னுடைய ஆளுமைக்கு உட்பட்டது தானே. சிறிது இடம் எனக்குக் கொடுக்கக் கூடாதா என்றார்.

தாங்கள் கொடுக்கும் இடம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதிலேயே நான் இருந்து கொள்கிறேன். நான் ஒரு சாதாரண மனிதனாக என் வாழ்க்கையை வாழ்ந்து கொள்கிறேன். மேலும் இம்மலையை நாடி மக்கள் அனைவரும் வரும்படி செய்வேன். உங்களுக்குத் தேவையான வகையில் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வேன். வரும் பக்தர்கள் முதலில் இந்தத் தீர்த்தத்தில் மூழ்கி உமக்குக் காணிக்கை செலுத்தும்படி ஆணை இடுகிறேன். அது மட்டுமல்லாது தங்களுக்கு நிவேதனம் செய்த பிறகே எனக்கு நிவேதனம் செய்யவும் அறிவுறுத்துகிறேன் என்றார். இது கேட்ட வராக தேவர் மிகவும் மகிழ்ந்து ஹரிக்கு 100 அடிகள் அளவிலான பூமியை அளந்து கொடுத்தார். இவ்வாறாக புற்றிலிருந்த ஸ்ரீஹரி இந்த இடத்திற்கு உரிமை உடையவராக ஆனார். தேவர்கள் இவர்கள் இருவர் மீதும் பூமாரி பொழிந்தனர். அதன் பிறகு ஸ்ரீஹரி ஒருவரே தனியாளாக இருப்பதினால் தனக்கு உறுதுணையாக இருந்து வரும் வகுள மாதாவை ஸ்ரீநிவாசனின் கைங்கரிய சேவை நிமித்தம் நியமித்தார் வராகர். அந்தத் தாய் ஸ்ரீநிவாசனுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து வந்தார். காயத்திற்கு மருந்து இடுவதும், உணவு வகைகளைச் சமைத்துக் கொடுத்தும் வந்தார். நடப்பனவற்றை கவனித்துக் கொண்டிருந்த பிரம்மா ருத்திரர்கள் ஸ்வாமிக்கு தகுந்த இடம் கிடைத்து விட்டது என்று மகிழ்ந்தனர். அதன் பின் ஸ்ரீஹரி அங்கிருந்த வண்ணம் அனைவரையும் தங்களிடம் வரும்படி செய்து வந்தார்.

பக்தி இல்லாதவர்களை மோகங்களில் மூழ்கிக் கொள்ளச் செய்வதும், பரம பக்தர்களுக்கு எல்லா வளத்தையும் நலத்தையும் நல்கியும், அசுரர்களுக்கு அச்சத்தை உண்டு பண்ணுபவராகவும், தேவர்களுக்கு வினோதங்களை உண்டாகும் படியும் செய்தார். தாய் வகுள மாதாவிற்கு ஒரு நல்ல பிள்ளையாக ஸ்வாமி இருந்து வந்தார் என்று சூத மகரிஷி கூறினார். அதைக்கேட்டு சௌனகாதி முனிவர்கள் வகுள மாதா யார் எனக் கேட்க, சூதரும் அத்தாயாரின் வரலாற்றுக் கதையைக் கூறத் தொடங்கினார்.

*பெருமை அறிவோம்...*


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**வாகன ஓட்டுனர்களின் கவனத்திற்கு...**

- திருமலைக்குச் சொந்த வாகனத்தில் வரும் பக்தர்கள் கூடுமானவரை ஓட்டுனர்களுக்குப் போதிய ஓய்வினை அளித்திடுங்கள். வாகன ஓட்டுனர்களின் பாதுகாப்பே நமது பாதுகாப்பாகும்.
- மலைவழிப்பாதையில் வாகனங்களை ஓட்டும் போது கவனமாகச் செயல்படவும். பிற வாகனங்களை முந்திச் செல்லாதீர்கள்.
- அனைவரும் கட்டாயமாக சீட் பெல்டை அணியுங்கள்.
- திருமலைக்கு இருச்சக்கர வாகனத்தில் வருபவர்கள் தலைக்கவசத்தை அணியுங்கள். தலைக்கவசமே உயிர் கவசமாகும்.

# கல்வி வளம் அருளும் நம்மாழ்வார் பாசுரங்கள்

– முனைவர் தி.கமலி,
சென்னை, 94444 78087



கல்விக்கு அதிபதி கலைமகள். படைக்கும் கடவுள் பிரம்மனின் பத்தினி. அனைத்து கலைகளையும், கல்வியும் ஞானமும் அருளும் தெய்வம் என்பதால் கலைமகள் கலைவாணி, நாமகள், சரஸ்வதி என்று போற்றப்படுகிறார்.

*''எழுத்து அறிவித்தவன் இறைவன்''* என்று குருவாக இறைவனைப் போற்றும் மரபு உள்ளது. *''எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்''* என்று இரு கண்களுக்கு ஒப்பாகக் கருதப்படும் கல்வியை ஒருவர் கற்று சிறந்தால் ஒரு பிறவியில் அவர் கற்ற கல்வி அவரது ஏழு பிறவிக்கும் உதவ வல்லது என்று குறள் கூறும்.

*''கல்வி கரையில கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கின்ற பிணி பல''* என்று நாலடியாரும், *''வேதநூல் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவரேலும் பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு பேதை பாலகனதாகும்''* என்று வாழ்நாள் பற்றி திருமாலை பாசுரமும் உரைக்கும்.

*மணியை வானவர் கண்ணனைத்*
*தன்னதோர்*
*அணியை தென்குருகூர்ச் சடகோபன் சொல்*
*பணி செய்யாயிரத்துள் இவை பத்துடன்*
*தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே*

– திருவாய்மொழி 1.10.11

இப்பதிகத்தின் பத்து பாசுரங்களைக் கற்பவர் கல்வி வாய்க்கப் பெறுவர் என்று திருவாய்மொழி (பெருமாள் நீள்படை–பதிகம்) பாசுரம் உரைக்கும். இதைப் பாராயணம் செய்வதன் மூலம் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்க முடியும்.

நவராத்திரியில் (நவராத்திரி விழாவில் 9–வது நாள்)நவமி மற்றும் தசமி நாட்களில் சரஸ்வதி பூஜையும், அதை ஒட்டி ஆயுத பூஜையும் கொண்டாடப்படுகிறது.

நம்மாழ்வாரைப் போற்றி "சடகோபர் அந்தாதி"யும், சரஸ்வதி தேவியைப் போற்றி "சரஸ்வதி அந்தாதி"யும் கம்பர் இயற்றியுள்ளார். குமரகுருபரர் சகலகலாவல்லி மாலை எனும் நூலை சரஸ்வதி தேவியைப் போற்றி எழுதி உள்ளார். *''வெள்ளை கமலத்தில் வீற்றிருப்பாள், புகழ் ஏற்றிருப்பாள்''* என்று சரஸ்வதி தேவி வாழும் இடங்களை பாரதி குறிப்பிடுகிறார்.

குரு தட்சிணாமூர்த்தியையும், ஹயக்ரீவப் பெருமானையும், சரஸ்வதி தேவியையும் கல்விக்கும் ஞானத்திற்கும் அதிபதிகளாகவும், அருள்பவர்களாகவும் போற்றுவர். *''நீதி உயர்ந்த மதி கல்வி, அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்''* என்று மேலோர்க்கு இலக்கணம் கூறுவார் பாரதி. அசுரன் மறைத்து வைத்த வேதங்களை மீட்டு பிரம்மனிடம் தந்தவர் திருமால். எழுதுவதற்கு தடைப்படாது இருக்க தன் தந்தத்தை உடைத்து எழுதியவர் விநாயகப் பெருமான். "ஓம்'' என்னும் பிரணவ உட்பொருளை சிவனாருக்கு உபதேசித்தார் முருகன். கல்வியைப் போற்றுவதில் கடவுளுக்கு ஈடிணையில்லை.

*கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்*
*மலரவன் வண்டமியோர்க்கு ஒவ்வான் - மலரவன் செய்*
*வெற்றுடம்பு மாய்வனப்போல் மாயா புகழ் கொண்டு*
*மற்று இவர் செய்யும் உடம்பு*

நான்முகனால் படைக்கப்படும் மனித உடல்கள் மாய்ந்து விடுகின்றன. ஆனால் அவன் மனைவி சரஸ்வதி அருள் பெற்றோர் செய்யும் உன்னத இலக்கியங்கள் காலம் கடந்தும் நிலைத்திருப்பதை சொல்லி இருவரும் படைப்பு கடவுள் எனினும் அதில் நுட்ப வேறுபாட்டை நீதிநெறி விளக்கம் கூறுகிறது.

*''மயர்வற மதிநலம் அருளினனெவனவன்''* (திருவாய்மொழி 1.1.1) என்று "தெளிந்த நல் மதிநலம் தருவது இறைவனே" என்கிறார் நம்மாழ்வார். **"ஆய்ந்த பெருஞ் சீரார் சடகோபன்செந்தமிழ் வேதம் தரிக்கும் பேராத உள்ளம் பெற"** என்று அனந்தாழ்வார் இராமாநுசரது திருவடிகளை வணங்கி துதிக்கிறார்.

*''கல்லும் சொல்லாதோ கவி''* என்பது போல இறையருள் வாய்க்கப் பெற்றால் கல்விமான் ஆகலாம். *''கற்றது நெஞ்சில் நிற்கும் இளமையில் கல்வி கல்''* என்பது ஆன்றோர் வாக்கு.

*''ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்குமென் அம்மை தூய உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே இருப்பாளிங்கு வாராது இடர்''* என்று கலைமகள் வாழும் மனத்தில் அஞ்ஞான இருளுக்கு இடமில்லாத தன்மை சொல்லப்படுகிறது.

*பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்*
*எண்ணும்பொழுது எளிதுஎய்த நல்காய்-எழுதா மறையும்*
*விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்*
*கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலா வல்லியே*

– சகலகலாவல்லி மாலை

பிறப்பதும், இறப்பதும், துயில்வதும், கண் விழிப்பதும் போன்ற செயல்கள், *"தோன்றின் புகழொடு தோன்றுக அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று"* என்று தோன்றுவதின் இலக்கணத்தை திருக்குறள் கூறும். *"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக"* என்று கற்பதின் பயனைக் குறிக்கும். அறியப்பெறும் அறிவும் இறைவனே. அறிவிப்பவனும் இறைவனே.

*கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில்*
*எண்ணிலும் வரும் என் இனி வேண்டுவம்?*

– திருவாய்மொழி 1.10.2

இறைவனை மனத்துள் நிறுத்தினால் யாவும் தானே வந்தடையும். வேண்டிப் பெற வேண்டியது ஏதுமில்லை என்கிறார் நம்மாழ்வார்.

*எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும்*
*தம்பிரானைத் தண் தாமரைக் கண்ணனை*
*கொம்பராவு நுண்ணோர் இடை மார்வனை*
*எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே!*

– திருவாய்மொழி 1.10.3

இறைவன் நமக்குக் குல முதல்வன். அவனைத் தொழுவோம். *"இனி என்ன குறைவினம்? மைந்தனை மலராள் மணவாளனை துஞ்சும்போதும் விடாது தொடர் கண்டாய்"* (திருவாய்மொழி 1.10.4) என்று அல்லும் பகலும் இடை ஈடின்றி செல்வ நாராணன் என்று நாம் சொல்லும் சொல் கேட்டு அப்பரந்தாமன் நம்மை கைவிடாது காப்பான் என்கிறார்.

*மறப்பும் ஞானமும் நானொன்று உணர்ந்திலன்*
*மறக்கும் என்று செந்தாமரைக் கண்ணொடு*
*மறப்பற என்னுள்ளே மன்னினான் தன்னை*
*மறப்பேனோ? இனியான் என் மணியையே*

– திருவாய்மொழி 1.10.10


படிக்கும் இளம் பிராயத்தில் உள்ளோர் நம்மாழ்வாரின் இப்பாசுரங்கள் பத்தினையும் (பெருமாள் நீள்படை – பதிகம்) தினமும் பாராயணம் செய்து கல்வி நலம் வாய்க்கப் பெற்று அனுமன் போல் சொல்லின் செல்வர்களாய், சீர்த்த மதி, கீர்த்தி, அரும்பெரும் ஞானம் பெற்று கலைமகள், திருமகள், அலைமகள் ஆசிகளுடன் நிறைவாழ்வு வாழ்வாங்கு வாழ இறையருளைத் துதிப்போம்.


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்துவதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும்போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல்ப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்



# வரலக்ஷ்மி விரதம் வழிபாட்டுமுறை

ஸ்ரீ வரலட்சுமி விரதம் சிராவண (ஆடி–ஆவணி) மாதத்தில் பௌர்ணமி திதிக்கு முன்பாக வருகின்ற வெள்ளிக் கிழமையன்று கடைபிடிப்பர். ஏதாவது தவிர்க்க இயலாத தடைகள் ஏற்படின் சிராவணமாதத்தில் வருகின்ற ஒரு வெள்ளிக் கிழமையில் வழிபடலாம். "ஸப்தகிரி" வாசகர்களுக்காக வரலக்ஷ்மி விரத வழிபாட்டு முறை...

தீபாரதனை, சங்கல்பம், கலச பூஜை, கணபதி பூஜை போன்றவற்றை விநாயகர் விரதத்தில் உள்ளதைப் போன்றே செய்து, சங்கல்பம் கீழ்க் காணும்படி கூறுதல் வேண்டும். *''மம உபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்தம் சுபே சோபநே முஹூர்த்தே,* (வருடம் முதலானவற்றைக் கூறவும்) *அஸ்மாகம் ஸகுடும்பானாம் க்ஷேம ஸ்தைர்ய விஜய ஆயுராரோக்ய ஐச்வர்ய அபிவ்ருத்த்யர்தம், தர்மார்த காமமோக்ஷ சதுர்வித புருஷார்த பலஸித்த்யர்தம், ஸத் ஸந்தான ஸௌபாக்ய சுபபல ப்ராப்த்யர்தம் வர்ஷே வர்ஷே ப்ரயுக் தாம், ஏதத்வர்ஷே ஸ்ரீவரலக்ஷ்மீ தேவதாம் உத்திச்ய, ஸ்ரீவரலக்ஷ்மீ தேவதாப்ரீத்யர்தம், பவிஷ்யோத்தர புராண கல்போக்த ப்ரகாரேண யாவச்சக்தி த்யான ஆவாஹணாதி ஷோடச உபசாரபூஜாம் கரிஷ்யே''* (ஸ்ரீவரலக்ஷ்மி படம், கலசம் மீது மலர், அட்சதைத் தூவவும்). பின் கலச பூஜை, கணபதி பூஜை செய்தல் வேண்டும்.

### ஸ்ரீ வரலக்ஷ்மி தேவி தியானம்

*ஓம் பத்மாஸனே பத்மகரே ஸர்வ லோகைகபூஜிதே*
*நாராயணப்ரியே தேவி! ஸுப்ரீதா பவ ஸர்வதா*
*ஓம் க்ஷீரோதார்ண ஸம்பூதே! கமலே கமலாலயே*
*ஸுஸ்திரா பவ மே கேஹே ஸுராஸுர நமஸ்க்ருதே!*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதா த்யாயாமி*

மலர்கள், அட்சதைகளை தாயாரின் கலசம், படம் அருகில் வைத்து வணங்குதல் வேண்டும்.

### ஆவாஹனம்

*ஓம் தேவி! த்ரைலோக்யஜனனி! சர்வ லோகைக*
*பாவனி ஆகச்ச வரதே மாத: ப்ரஸீத பரமாத்மிகே!*
*ஓம் ஸ்ரீ வரலஷ்மீ தேவதாம் ஆவாஹயாமி*

மலர்கள்/அக்ஷதைகளை படம்/கலசம் மீது தூவவும்

### ஆசனம்

*ஓம் ஸ்வர்ண ரத்னமயம் திவ்யம் ஹேமவர்ணம் ஸுசோபிதம்*
*ஆசனம் தே ப்ரதாஸ்யாமிஸ்வீகுருஷ்வ ஹரிப்ரியே*
*ஓம்ஸ்ரீவரலக்ஷ்மீ தேவதாயை நம: ரத்னசிம்ஹாசனம் சமர்பயாமி*

தாயாரின் படம், கலசம் அருகில் மலர்கள், அட்சதைகளை வைத்து வணங்குதல் வேண்டும்.

### பாத்யம்

*ஓம் கங்காதிசலிலைர்யுக்தம் ஸுகந்தேனஸுவாஸிதம்*
*பாத்யம் க்ருஹாண ஸ்ரீதேவி! சர்வதேவ நமஸ்க்ருதே*
*ஓம் ஸ்ரீவரலக்ஷ்மீ தேவதாயை நம: பாதயோ: பாத்யம் சமர்பயாமி*

கலச நீரினை, இரண்டுமுறை உத்தரணியில் எடுத்து, தாயாரின் கலசம் அருகில் திருப்பாதங்கள் இருப்பதாக எண்ணி, தொட்டு அர்க்ய பாத்திரத்தில் விடுதல் வேண்டும்.

### அர்க்யம்

*ஓம் சுத்தோதகம் ச பாத்ரஸ்தம் கந்தபுஷ்பாதிமிச்ரிதம்*
*அர்க்யம் தாஸ்யாமிதேதேவி! க்ருஹாணசுரபூஜிதே*




லக்ஷ்மீம் க்ஷீர ஸமுத்ர ராஜதனயாம் ஶ்ரீரங்கதாமேச்வரீம் தாஸீபூத ஸமஸ்த தேவ வனிதாம் லோகைக தீபாங்குராம்
ஶ்ரீமந்மந்த கடாக்ஷ லப்த விபவத் ப்ரஹ்மேந்த்ர கங்காதராம் த்வாம் த்ரைலோக்ய குடும்பினீம் ஸரஸிஜாம் வந்தே முகுந்தப்ரியாம்

பாற்கடலின் இராஜகுமாரியானவளே! ஶ்ரீரங்கத்தில் உறைபவளே!அனைத்து தேவமாதர்களையும் தங்களுக்குத் தாஸிகளாகக் கொண்டவளே! உலகிற்கே ஒளியானவளே! உன்னுடைய கருணைப் பார்வையால் பிரம்மா, சிவன் போன்றோரே பெரும் செல்வங்களைப் பெற்றவர்கள். மூன்று உலகங்களையும் காக்கும் குடும்பத் தலைவியே! தாமரை மலரில் அமர்ந்திருப்பவளே! திருமாலின் அன்பிற்கு உரியவளே! உன்னை வணங்குகிறேன்.

*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம:*
*ஹஸ்தயோ: அர்க்யம் சமர்பயாமி*

கலச நீரினை இரண்டுமுறை உத்தரணியில் எடுத்து, தாயாரின் திருக்கரங்களைத் தொட்டு, அந்நீரினை அர்க்ய பாத்திரத்தில் சமர்ப்பிக்கவும்.

### ஆசமனீயம்

*ஓம் சுவர்ணகலசாநீதம், சந்தனாகருசம்யுதம்*
*க்ருஹாணாசமனம் தேவி! மயாதத்தம் சுபப்ரதே*
*ஓம் ஸ்ரீவரலக்ஷ்மீதேவதாயை நம: முகே*
*ஆசமனீயம் சமர்பயாமி*

மும்முறை உத்தரணியால் கலசநீரினை எடுத்து, தாயாரின் திருமுகத்தினைத் தொட்டு அர்க்ய பாத்திரத்தில் விடுதல் வேண்டும்.

### பஞ்சாமிர்த ஸ்நானம்

*ஓம் பயோததிக்ருதோபேதம் சர்கராமது ஸம்யுதம்*
*பஞ்சாம்ருதஸ்நானாமிதம், க்ருஹாண கமலாலயே*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீதேவதாயை நம: பஞ்சாம்ருத*
*ஸ்நானம் சமர்பயாமி*

பஞ்சாமிர்தத்தை மலரால் தொட்டு ஐந்துமுறை கொஞ்சம் கொஞ்சமாகத் தாயாரின் படத்தின் மீதும், கலசத்தின் மீதும் தெளித்தல் வேண்டும்.

### சுத்தோதகஸ்நானம்

*ஓம் கங்காஜலம் மயாநீதம் மஹாதேவ சிர:ஸ்திதம்*
*சுகந்தி த்ரவ்ய சம்யுக்தம் ஜலம் ஸ்நானாய*
*க்ருஹ்யதாம்*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம: சுகந்தி த்ரவ்ய*
*சம்யுக்த சுத்தோதகஸ்நானம் சமர்பயாமி*

கலச நீரினை உத்தரணியால் எடுத்து, அந்நீரை மலர்களால் கலசம்/படத்தின் மீது தெளிக்கவும். ''ஸ்நானானந்தரம் ஆசமனீயம் சமர்பயாமி'' கலச நீரினை உத்தரணியால் தாயாரின் திருமுகத்திற்குக் காட்டி, அர்க்ய பாத்திரத்தில் இடுதல் வேண்டும்.

### வஸ்திரம்

*ஓம் சுரார்சிதாம் க்ரியுகளே துகூலவஸனப்ரியே*
*வஸ்த்ரயுக்மம் ப்ரதாஸ்யாமி க்ருஹாண ஹரி*
*வல்லபே*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம: வஸ்த்ரயுக்மம்*
*சமர்பயாமி*

இரண்டு வஸ்திரங்களைக் கலசத்திற்கும், படத்திற்கும் அணிவித்தல் வேண்டும்.

### ஆபரணம்

*ஓம் கேயூரகங்கணே திவ்யே ஹாரனூபுரமேகலா:*
*விபூஷணானி அமூல்யானி க்ருஹாணே*
*ருஷியூஜிதே*
*ஓம் ஸ்ரீவரலக்ஷ்மீ தேவதாயை நம: ஆபரணானி*
*சமர்பயாமி*

ஏற்கனவே ஆபரணங்களைச் சூட்டி இருப்பதால் மலர்கள், அட்சதைகளைச் சமர்ப்பிக்கவும்.

### யக்ஜோபவீதம் (பூணூல்)

*ஓம் தப்தஹேமக்ருதம் தேவி முக்தாதாம*
*ஸமன்விதம்*
*உபவீதம் மயா தத்தம் க்ருஹாண த்வம்சுபப்ரதே*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம:*
*யக்ஜோபவீதம் சமர்பயாமி*

எனக் கூறி, பூணூலைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### கந்தம்

*ஓம் கற்பூராகரு கஸ்தூரீரோசனாதிபிரன்விதம்*
*கந்தம் தாஸ்யாம்யஹம் தேவி! ப்ரீத்யர்தம் ப்ரதி*
*க்ருஹ்யதாம்*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம: திவ்ய பரிமள*
*கந்தான் தாரயாமி*

சந்தனத்தை பூக்களால் தொட்டு கலசம் மற்றும் படத்தின் மீது தெளித்தல் வேண்டும்.

### ஹரித்ராசூர்ணம் (மஞ்சள்), குங்குமம், அட்சதை

*ஓம் அக்ஷதான் தவளான் தேவி! சாலீயாம்*
*ஸ்தண்டுலான் சுபான்*
*ஹரித்ராகுங்குமோபேதான் க்ருஹ்யதாம்அப்திபுத்ரிகே*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம:*
*அக்ஷதான் ஹரித்ராசூர்ணம் குங்குமம் சமர்பயாமி*

அட்சதை, மஞ்சள், குங்குமத்தை தாயாருக்குச் சமர்பித்தல் வேண்டும்.

### புஷ்பம் சமர்ப்பணம்

*ஓம் மல்லிகாஜாதிகுஸுமை: சம்பகைர்வகுளைரபி*
*சதபத்ரைச்ச கல்ஹாரை: பூஜயாமி ஹரிப்ரியே!*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம:*
*நாநாவிதபரிமள பத்ரபுஷ்பாணி சமர்பயாமி*

படம், கலசம் மீது மலர்களைச் சமர்ப்பித்து வணங்குதல் வேண்டும்.

## ஸ்ரீ வரலக்ஷ்மி தேவிக்கு அங்கபூஜை

தாயாரை திருப்பாதம் முதல் சிரசு வரை பலவிதமான நறுமணமுள்ள மலர்களால் பூஜித்தல் வேண்டும்.

*ஓம் ஸ்ரீசஞ்சலாயை நம: பாதௌ பூஜயாமி*
*ஓம் ஸ்ரீசபலாயை நம: ஜானுனீ பூஜயாமி*
*ஓம் ஸ்ரீபீதாம்பராயை நம: ஊரூ பூஜயாமி*
*ஓம் ஸ்ரீகமலவாஸின்யை நம: கடிம் பூஜயாமி*
*ஓம் பத்மாலயாயை நம: நாபிம் பூஜயாமி*
*ஓம் மதனமாத்ரே நம: ஸ்தனௌ பூஜயாமி*
*ஓம் லலிதாயை நம: புஜத்வயம் பூஜயாமி*
*ஓம் கம்புகண்ட்யை நம: கண்டம் பூஜயாமி*
*ஓம் ஸுமுகாயை நம: முகம் பூஜயாமி*
*ஓம் ஸ்ரியை நம: ஓஷ்டௌ பூஜயாமி*
*ஓம் ஸுனாஸிகாயை நம: நாசிகாம் பூஜயாமி*
*ஓம் ஸுனேத்ர்யை நம: நேத்ர பூஜயாமி*
*ஓம் ரமாயை நம: கர்ணௌ பூஜயாமி*
*ஓம் கமலாயை நம: சிர: பூஜயாமி*
*ஓம் ஸ்ரீவரலக்ஷ்மீதேவ்யை நம:*
*ஸர்வாணியங்கானி பூஜயாமி*



பின்னர் குங்குமத்தாலோ, மலர்களாலோ ஸ்ரீலக்ஷ்மி அஷ்டோத்தர சதநாமாவளியால் பூஜித்தல் வேண்டும்.

## ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தர சதநாமாவளி

*ஓம் ப்ரக்ருத்யை நம:*
*ஓம் விக்ருத்யை நம:*
*ஓம் வித்யாயை நம:*
*ஓம் ஸர்வபூத ஹிதப்ரதாயைநம:*
*ஓம் ச்ரத்தாயை நம:*
*ஓம் விபூத்யை நம:*
*ஓம் ஸுரப்யை நம:*
*ஓம் பரமாத்மிகாயை நம:*
*ஓம் வாசே நம:*
*ஓம் பத்மாலயாயை நம:* 10
*ஓம் பத்மாயை நம:*
*ஓம் சுசயே நம:*
*ஓம் ஸ்வாஹாயை நம:*
*ஓம் ஸ்வதாயை நம:*
*ஓம் ஸுதாயை நம:*
*ஓம் தன்யாயை நம:*
*ஓம் ஹிரண்மய்யை நம:*
*ஓம் லக்ஷ்ம்யை நம:*
*ஓம் நித்யபுஷ்டாயை நம:*
*ஓம் விபாவர்யை நம:* 20
*ஓம் அதித்யை நம:*
*ஓம் தித்யை நம:*
*ஓம் தீப்தாயை நம:*
*ஓம் வஸுதாயை நம:*
*ஓம் வஸுதாரிண்யை நம:*
*ஓம் கமலாயை நம:*
*ஓம் காந்தாயை நம:*
*ஓம் காமாக்ஷ்யை நம:*
*ஓம் க்ரோத ஸம்பவாயை நம:*
*ஓம் அனுக்ரஹபராயை நம:* 30
*ஓம் புத்தயே நம:*
*ஓம் அநகாயை நம:*
*ஓம் ஹரிவல்லபாயை நம:*
*ஓம் அசோகாயை நம:*
*ஓம் அம்ருதாயை நம:*
*ஓம் தீப்தாயை நம:*
*ஓம் லோகசோக விநாசின்யை நம:*
*ஓம் தர்மநிலயாயை நம:*
*ஓம் கருணாயை நம:*
*ஓம் லோகமாத்ரே நம:* 40
*ஓம் பத்மப்ரியாயை நம:*
*ஓம் பத்மஹஸ்தாயை நம:*
*ஓம் பத்மாக்ஷ்யை நம:*
*ஓம் பத்மஸுந்தர்யை நம:*
*ஓம் பத்மோத்பவாயை நம:*
*ஓம் பத்மமுக்யை நம:*
*ஓம் பத்மநாபப்ரியாயை நம:*
*ஓம் ரமாயை நம:*
*ஓம் பத்மமாலாதராயை நம:*
*ஓம் தேவ்யை நம:* 50
*ஓம் பத்மின்யை நம:*
*ஓம் பத்மகந்தின்யை நம:*
*ஓம் புண்யகந்தாயை நம:*
*ஓம் ஸுப்ரஸன்னாயை நம:*
*ஓம் ப்ரஸாதாபிமுக்யை நம:*
*ஓம் ப்ரபாயை நம:*
*ஓம் சந்த்ரவதனாயை நம:*
*ஓம் சந்த்ராயை நம:*
*ஓம் சந்த்ரஸஹோதர்யை நம:*
*ஓம் சதுர்புஜாயை நம:* 60

ஓம் சந்த்ரரூபாயை நம:
ஓம் இந்திராயை நம:
ஓம் இந்துசீதலாயை நம:
ஓம் ஆஹ்லாதஜனன்யை நம:
ஓம் புஷ்ட்யை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் சிவகர்யை நம:
ஓம் ஸத்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் விச்வஜனன்யை நம: 70
ஓம் துஷ்ட்யை நம:
ஓம் தாரித்ர்யநாசின்யை நம:
ஓம் ப்ரீதிபுஷ்கரிண்யை நம:
ஓம் சாந்தாயை நம:
ஓம் சுக்லமால்யாம்பராயை நம:
ஓம் ச்ரியை நம:
ஓம் பாஸ்கர்யை நம:
ஓம் பில்வநிலயாயை நம:
ஓம் வராரோஹாயை நம:
ஓம் யசஸ்வின்யை நம: 80
ஓம் வஸுந்தராயை நம:
ஓம் உதாராங்காயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேமமாலின்யை நம:
ஓம் தனதான்யகர்யை நம:
ஓம் ஸித்தயே நம:
ஓம் ஸ்த்ரைண ஸௌம்யாயை நம:
ஓம் சுபப்ரதாயை நம:
ஓம் ந்ருபவேச்ம கதானந்தாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை நம: 90
ஓம் வஸுப்ரதாயை நம:
ஓம் சுபாயை நம:
ஓம் ஹிரண்யப்ராகாராயை நம:
ஓம் ஸமுத்ரதனயாயை நம:
ஓம் ஜயாயை நம:
ஓம் மங்களாதேவ்யை நம:
ஓம் விஷ்ணுவக்ஷஸ்தல ஸ்திதாயை நம:
ஓம் விஷ்ணுபத்ன்யை நம:
ஓம் ப்ரஸன்னாக்ஷ்யை நம:
ஓம் நாராயண ஸமாச்ரிதாயை நம:100
ஓம் தாரித்ர்ய த்வம்ஸின்யை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் ஸர்வோபத்ரவவாரிண்யை நம:
ஓம் நவதுர்காயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ப்ரஹ்மவிஷ்ணுசிவாத் மிகாயை நம:
ஓம் த்ரிகாலஜ்ஞான ஸம்பன்னாயை நம:
ஓம் புவனேஸ்வர்யை நம: 108
ஓம் ஸ்ரீவரமஹாலக்ஷ்மிதேவ்யை நம:
அஷ்டோத்தர சத நாமபூஜாம் ஸமர்பயாமி.

**தூபம்**

ஓம் தசாங்கம் குக்குலூபேதம் சுகந்தம் ச மனோஹரம்।
தூபம் தாஸ்யாமி தேவேசி! க்ருபயா பரிக்ருஹ்யதாம் ||
ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம:
திவ்யபரிமள தூபம் ஆக்ராபயாமி

மணியை அடித்தபடி தாயாருக்கு மூன்று முறை தூபம் காட்டுதல் வேண்டும்.

**தீபம்:** மூன்று நெய் வத்திகளை ஏற்றுதல் வேண்டும்.

ஓம் க்ருதாக்தவர்தி ஸம்யுக்தம் அந்தகாரவினாசகம்!
தீபம் தாஸ்யாமி தேதேவி! க்ருஹாண முதிதா பவ
ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம: தீபம் தர்சயாமி

(மணியை அடித்தபடி தாயாருக்கு மும்முறை தீபத்தைக் காட்டவும்.) "தூபதீபானந்தரம் ஆசமனீயம் ஸமர்பயாமி" (கலச நீரினை உத்தரணியில் ஒருமுறை எடுத்து, தாயாரின் திருமுகத்திற்குக் காண்பித்து, அர்க்ய பாத்திரத்தில் இடவும்).

**நைவேத்தியம்:** தேங்காய், பழம், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, இனிப்பு வகைகள் வைக்கவும். (நைவேத்தியத்தில் பூண்டு, வெங்காயம் மற்றும் மசாலா பொருட்களைச் சேர்த்தல் கூடாது). நைவேத்தியத்தின் மீது கலச நீரினை மலர்/துளசியால் தெளித்தல் வேண்டும்.

ஓம் நைவேத்யம் ஷட்ரஸோபேதம் ததி மது ஆஜ்யஸம்யுதம்
நாநாபக்ஷ்யபலோபேதம் க்ருஹாண ஹரிவல்லபே
ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம: நாரிகேள பலகண்ட த்வய, நாநாவிதபல பக்ஷ்யஸஹிதமஹாநைவேத்யம் ஸமர்பயாமி

எனக்கூறி வலதுகையில் ஒரு மலரை வைத்துக் கொண்டு, "ஓம் ப்ராணாத்மனே நம:, ஓம் அபானாத்மனே நம:, ஓம் வ்யானாத்மனே நம:, ஓம் உதானாத்மனே நம:, ஓம் ஸமானாத்மனே நம:" எனக் கூறி, கலச நீரினை உத்தரணியில் எடுத்துக் கொண்டு தாயாருக்கு ஐந்துமுறை காட்டி, அர்க்ய பாத்திரத்தில் விடுதல் வேண்டும். பின்னர் "மத்யே மத்யே பானீயம் ஸமர்பயாமி" எனக் கூறி மூன்று முறை உத்தரணியில் நீரினை தாயாருக்குக் காண்பித்து அர்க்ய பாத்திரத்தில் விடுதல் வேண்டும். பிறகு "ஹஸ்தெள ப்ரக்ஷாளயாமி, பாதெள ப்ரக்ஷாளயாமி சுத்தாசமனீயம் ஸமர்பயாமி" – ஐந்து முறை உத்தரணியால் நீரினைக் காண்பித்து, அர்க்ய பாத்திரத்தில் இடுதல் வேண்டும்.

**தாம்பூலம்:** வெற்றிலை, பாக்கு, தட்சணையுடன் தாம்பூலத்தை வைத்தல் வேண்டும்.

ஓம் பூகீ பலஸமாயுக்தம் நாகவல்லீதளைர்யுதம்
கற்பூரசூர்ணஸம்யுக்தம் தாம்பூலம் ப்ரதிக்ருஹ்யதாம்

*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம:*
*ஸதக்ஷிண தாம்பூலம் சமர்பயாமி*

உத்தரணியால் நீரினைத் தாம்பூலத்தைத் தொட்டு, தாயாரின் திருவதனத்திற்குக் காண்பித்து, அந்நீரினை அர்க்ய பாத்திரத்தில் விடவும்.

**கற்பூர நீராஜனம்**

*ஓம் நீராஜனம் சமாநீதம் கற்பூரரேணசமன்விதம்*
*துப்யம் தாஸ்யாமி அஹம்தேவி! க்ருஹ்யதாம்*
*விஷ்ணுவல்லபே!*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம:*
*கற்பூர நீராஜனம் சமர்பயாமி*

தாயாரின் திருப்பாதங்கள் முதல் சிரசுவரை மூன்றுமுறை நிதானமாக கற்பூர ஆரத்தி காண்பித்து, கற்பூர ஒளியில் நாம் தாயாரைத் தரிசித்தல் வேண்டும். *"நீராஜனானந்தரம் ஆசமநீயம் சமர்பயாமி"* எனக் கூறி உத்தரணி நீரினை தாயாருக்குக் காண்பித்து அர்க்ய பாத்திரத்தில் விடுதல் வேண்டும்.

**மந்திரபுஷ்பம்:** கையில் மலர்கள், அட்சதைகளை வைத்துக் கொள்ளல் வேண்டும்.

*ஓம் பத்மாசனே! பத்மகரே! சர்வலோகைக பூஜிதே*
*நாராயணப்ரியே தேவி! ஸுப்ரீதா பவ சர்வதா*
*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம: மந்த்ர புஷ்பம்*
*சமர்பயாமி*

கையில் இருக்கும் அட்சதை, மலர்களை கலசம் அருகில் வைத்து வணங்குதல் வேண்டும்.

**பிரதக்ஷிணம்:** அட்சதை, மலர்களை கையில் வைத்துக் கொண்டு, வணங்கி தாயாருக்கு உங்கள் முதுகுபுறமாக இல்லாமல் மூன்றுமுறை பிரதக்ஷிணம் செய்தல் வேண்டும். பின்னர் தாயாருக்கு எதிர் புறமாக நின்று அட்சதை, மலர்களை கலசம் அருகில் வைத்து வணங்குதல் வேண்டும்.

*யானி கானி ச பாபானி ஜன்மாந்தரக்ருதானிச*
*தானி தானி ப்ரணச்யந்தி ப்ரதக்ஷிணபதே பதே*
*அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம*
*தஸ்மாத் காருண்ய பா வேன ரக்ஷ ரக்ஷஹரிப்ரியே*
*ஓம் ஸ்ரீவரலக்ஷ்மீதேவதாயை நம:*
*ஆத்ம ப்ரதக்ஷிணானி சமர்பயாமி*

**நமஸ்காரம்:** தாயாரை மூன்றுமுறை வணங்கவும்.

*ஓம் நம ஸ்த்ரைலோக்யஜனனி! நமஸ்தே*
*விஷ்ணுவல்லபே*
*த்ராஹி மாம் பக்தவரதே! வரலக்ஷ்மி நமோஸ்துதே*



*ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீதேவதாயை*
*நமஸ்காரான் சமர்பயாமி*

பின்னர் கையில் கட்டிக்கொள்ளும் காப்பு கயிறுகளை(தாயாருக்குக் கட்டும் கயிறுக்கும்) விரதம் கடைபிடிக்கும் பெண்கள் கட்டிக் கொள்வதற்கும் வெள்ளை நூலாலான ஒன்பது நூல்களைச் செய்து, அதற்கு மஞ்சள்பூசி ஒன்பது இடங்களில் – இடைவெளி விட்டு வெற்றிலை அல்லது மலர்கள் வைத்து முடிச்சு போடுதல் வேண்டும். இவ்வாறாக ஒன்பது கயிறுகளைக் கட்டி, தாம்பூலத்தில் வைத்து, தாயாரின் வலதுபுறத்தில் ஒரு தட்டில் வைத்து, முடிச்சுகளின் மீது குங்குமம் வைத்து, கீழ்க்காணும் படி வழிபடுதல் வேண்டும்.

*ஓம் ஸ்ரீ கமலாயை நம: ப்ரதமக்ரந்திம் பூஜயாமி*
(1வது முடிச்சு)
*ஓம் ஸ்ரீ ரமாயை நம: த்வதீயக்ரந்திம் பூஜயாமி*
(2வது முடிச்சு)
*ஓம் ஸ்ரீ லோகமாத்ரே நம: த்ருதீயக்ரந்திம் பூஜயாமி*
(3வது முடிச்சு)
*ஓம் ஸ்ரீ விஷ்வஜனன்யை நம: சதுர்தக்ரந்திம் பூஜயாமி* (4வது முடிச்சு)



ஓம் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை நம: பஞ்சமக்ரந்திம் பூஜயாமி (5வது முடிச்சு)
ஓம் ஸ்ரீ க்ஷீராப்திதனயாயை நம: ஷஸ்டிக்ரந்திம் பூஜயாமி (6வது முடிச்சு)
ஓம் ஸ்ரீ விஷ்வசாக்ஷிண்யை நம: சப்தமக்ரந்திம் பூஜயாமி (7வது முடிச்சு)
ஓம் ஸ்ரீசந்த்ரசஹோதர்யை நம: அஷ்டம க்ரந்திம் பூஜயாமி (8வது முடிச்சு)
ஓம் ஸ்ரீ ஹரிவல்லபாயை நம: நவமக்ரந்திம் பூஜயாமி (9வது முடிச்சு)

ஓம் ஸ்ரீ வரலக்ஷ்மீ தேவதாயை நம: நவக்ரந்தியுக்த தோரபூஜாம் சமர்பயாமி (எனக் கூறி முடிச்சின்மீது மஞ்சள், குங்குமம் இட்டு, மலர்கள் வைத்து வணங்குதல் வேண்டும். கீழ்க்காணும் மந்திரத்தைக் கூறி, முதலில் தாயாரின் வலது திருக்கரத்தில் கட்டி, தாயாருக்கு மஞ்சள் குங்குமம் இட்டு வணங்குதல் வேண்டும்).

ஓம் பத்னாமி தக்ஷிணே ஹஸ்தே நவசூத்ரம் சுபப்ரதம்
புத்ரபௌத்ராபிவ்ருத்திம்சௌபாக்யம் தேஹிமேரமே
ஓம் ஸ்ரீவரலக்ஷ்மீ தேவதாயை நம:
ஸ்ரீவரலக்ஷ்மீ வ்ரதாங்க நவ க்ரந்திதோரம் சமர்பயாமி

பின்னர் விரதம் கடைபிடிக்கும் பெண்களும் இம்மந்திரத்தைக் கூறி, வலது கையில் தேங்காயோ, பழமோ வைத்துக் கொண்டு, சுமங்கலிகளிடம் காப்பு கயிற்றை வலது கையில் கட்டிக் கொள்ளல் வேண்டும். இதற்கான மந்திரம் "பத்மாமி...ரமே" என்பதாகும். காப்பு கயிற்றைக் கட்டிக்கொண்ட பின்னர் தாயாருக்கு மஞ்சள், குங்குமம் வைத்து வணங்குதல் வேண்டும். காப்பு கயிற்றைக் கட்டிக் கொண்ட பின்னர் புரோகிதருக்குக் காணிக்கை அளித்தல் வேண்டும். காணிக்கையில் தாம்பூலம், தட்சணை, இனிப்புவகை பிரசாதங்கள் வைத்தல் வேண்டும். இம்மந்திரத்தை காணிக்கைக் கொடுக்கும் தம்பதியரும், புரோகிதருடன் சேர்ந்து கூறுதல் வேண்டும்.

ஓம் இந்திரா ப்ரதிக்ருஹ்ணாது இந்திராவை ததாதி ச
இந்திரா தாரிகோபயோ: இந்திராயை நமோ நம:

காணிக்கை அளித்த தம்பதியரை புரோகிதர் கீழ்க்காணும்படி ஆசிர்வதித்தல் வேண்டும்.

ஸ்ரீ வரலக்ஷ்மீ க்ருபாகடாக்ஷேண அனயோ:
தம்பத்யோ: தீர்கசௌமங்கல்ய ஆயுராரோக்ய
ஐச்வர்யாபிவ்ருத்திரஸ்து சததம் ஸ்ரீ ரஸ்து
வஞ்சாபிவ்ருத்திரஸ்து

பின்னர் பூஜை செய்த தம்பதியரிடம் அட்சதை, மலர்களைக் கொடுத்து கீழ்க்காணும் சுலோகம் கூறி, அட்சதை, மலர்கள் உள்ள வலது கரத்தில் மூன்று முறை உத்தரணி நீரினை வைத்துக் கொண்டு தாயாரின் முன்பாக விடுதல் வேண்டும்.

மந்த்ர ஹீனம் க்ரியாஹீனம் பக்திஹீனம் ஹரி ப்ரியே
யத்பூஜிதம் மயா தேவி! பரிபூர்ணம் ததஸ்து தே
ஏதத் பூஜாபலம் சர்வம் ஸ்ரீவரலக்ஷ்மீ தேவதா அர்பணமஸ்து
அனயா கல்போக்தப்ரகாரேணக்ருதயா
ஷோடசோபசாரபூஜயா பகவதீ சர்வாத்மிகா ஸ்ரீ
வரலக்ஷ்மீ தேவதா சுப்ரீதா, சுப்ரஸன்னா வரதா
பவது மம இஷ்ட காம்யார்தசித்திரஸ்து

எனக்கூறி அட்சதைகள், நீரினை தாயாரின் முன்பாக தட்டில் விட்டு, தம்பதியினர் வணங்குதல் வேண்டும். பின்னர் வரலக்ஷ்மி விரதக் கதையைப் படித்தல் வேண்டும். கதை கூறும்முன்னர் அனைவருக்கும் மலர்கள், அட்சதைகளை வழங்கி, கதை நிறைவுறும் வரை கையில் வைத்தபடியே கதையைக் கேட்க வேண்டும் எனக் கூறல் வேண்டும்.

### ஸ்ரீ வரலட்சுமி விரதக் கதை

ஓம் சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி ஸித்திர்பவது மேசதா
ஓம் குருர் பிரம்மா, குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஸ்வர:
குரு சாக்ஷாத் பரபிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:

இவ்விரதக் கதையை சிவபெருமான் பார்வதி தேவிக்குக் கூறினார். பக்தர்களே கேளுங்கள்...

"ஸ்வாமி! எல்லா உலகங்களுக்கும் அதிபதியே, எல்லா உயிர்களுக்கும் கருணை காட்டுபவரே! எங்களுக்கும் நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்று விரும்பி, ஒரு மங்களகரமான விரதத்தை எனக்குக் கூறுங்கள்" என்று பார்வதி தேவி கேட்டார். அதற்கு சிவன், "பார்வதி! விரதங்கள் அனைத்திலும் சிறந்தது "ஸ்ரீவரலட்சுமி விரதம்". இதை நீ கடைபிடித்தால், எல்லா செல்வங்களையும் அடையலாம்" என்றார்.

இப்புனித விரதத்தை, சிராவண (ஆடி–ஆவணி) மாதத்தில் பௌர்ணமிக்கு முந்தைய வெள்ளிக் கிழமையன்று அனுசரிக்க வேண்டும். பார்வதி! இந்த விரதத்தை அனுசரிக்கும் ஒரு பெண் பெரும் புண்ணியத்தை அடைவாள் என்று கூறினார். உடனே பார்வதி, "ஸ்வாமி! இவ்விரதத்தை எப்படி கடை பிடிக்க வேண்டும்? இதற்கு முன்பு இந்த வரலட்சுமி தேவியை யார் வழிபட்டிருக்கிறார்கள்? யாராவது இன்னருள் பெற்றிருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

அதற்கு சிவபெருமான், "பார்வதி! வரலட்சுமி விரதத்தின் மிகப்புனிதமான பலன்களை நான் உனக்குச் சொல்கிறேன்" கேள். "குண்டினம்" என்ற ஊரில் சாருமதி என்ற பெண் தன் கணவனுக்கும் கணவர் வீட்டினருக்கும் பணிவிடை செய்து வந்தாள். அவள் எப்போதும் புன்னகையுடன் இனிமையாகப் பேசுவாள். அவள் நல்ல அறிவும் உணர்வுகளும் கொண்டவள். ஒருநாள், லட்சுமி தேவி அந்த சாருமதியின் கனவில் தோன்றி, "ஓ பாக்கியசாலியே! சிராவண மாதத்தில் பௌர்ணமிக்கு முந்தைய வெள்ளிக்கிழமையன்று என்னை வழிபடு. நீ கேட்ட வரத்தை நான் உனக்குத் தருகின்றேன்" என்றார்.

சாருமதியும் மறுநாள் காலை தன் உறவினர்கள் அனைவரிடமும் தன் கனவைப் பற்றிக் கூறினாள். அனைவரும், "சாருமதி! மகாலக்ஷ்மித்தாயார் கூறிய படியே அனைவரும் விரதம் இருப்போம்" என்றனர். அவர்கள் அனைவரும் சிராவண மாத பௌர்ணமி அன்று விரதத்தைத் துவங்கினர். அன்றைய தினம் பெண்கள் நீராடி, தூய்மையான ஆடைகளை அணிந் தனர். ஒரு கலசத்தில் அரிசியையும் மாவிலைகளை யும் இட்டு, அதில் பசுவின் சாணத்தைப் போட்டு, அந்தக் கலசத்தில் வரலட்சுமி தேவியை ஆவாஹனம் செய்து பூஜை செய்தனர். அவர்கள் தங்கள் வலது கையில் ஒன்பது முடிச்சுப் போட்ட நூல் கயிறுகளைக் கட்டிக் கொண்டனர். தாயாருக்கு நைவேத்தியங்க ளும் சமர்ப்பித்தனர். புரோகிதருக்கு இனிப்புப் பண டங்கள், பழங்கள் தாம்பூலம் மற்றும் தட்சணை வழங்கினர். தேவிக்கு சமர்ப்பித்த நைவேத்தி யத்தைப் பிரசாதமாக பக்தியுடன் உண்டனர்.

வரலட்சுமி தேவியின் அருளால், சாருமதி உட் பட அனைத்துப் பெண்களும் நல்மக்கட்பேறு பெற்று, தன, தான்யம் என பொருட்செல்வங்களை யும் பெற்றனர். அவர்கள் தர்மம் செய்தும், தங்கள் உறவினர்களைப் பேணியும் மகிழ்ச்சியாக வாழ்ந்த னர். பார்வதி! சாருமதியிட மிருந்து கேட்டறிந்த இந்த ஸ்ரீவரலட்சுமி விரதத்தைப் பற்றி அந்நகரத்து மக்கள் அனைவரும் அறிந்துகொண்டனர். அவர்களும் இந்த விரதத்தை பக்தியுடன் அனுசரித்தனர்.

சாருமதியால் நாங்கள் அனைவரும் எல்லா செல்வங்களையும் பெற்று சுகமாக இருக்கிறோம். சாருமதி எவ்வளவு புனிதமானவள்! அவள் எவ்வ ளவு அதிர்ஷ்டசாலி! ஸ்ரீவரலட்சுமி தேவியே அவ ளுக்குக் காட்சியளித்து இந்த விரதத்தை உபதேசித் தார் எனப் புகழ்ந்தனர். "பார்வதி! அன்று முதல், இவ் விரதம் "ஸ்ரீவரலட்சுமி விரதம்" என்று அழைக்கப் பட்டது. இது எல்லா விரதங்களிலும் சிறந்தது. இவ் விரதத்தைக் கடைபிடிப்பவர், விரதத்தின் கதையைக் கேட்பவர், அதை பாராயணம் செய்பவர் ஆகியோ ரின் காரியங்கள் அனைத்தும் வரலட்சுமித் தாயாரின் அருளால் நிறைவேறும்" என்றார் சிவபெருமான்.

அன்றிலிருந்து பூலோகத்தில் இப்பூஜை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள், கேட்பவர்கள் அனைவருமே வரலக்ஷ்மியின் அருளால் தனதான்ய அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெறுவர். இது பவிஷ்யோத்தர புராணத்தில் பார்வதி பரமேஸ்வரன் உரையாடல்.

*க்ஷவரலக்ஷ்மி வ்ரதம் சம்பூர்ணம்*
*ஸர்வேஜனா: ஸுகினோ பவந்து*
*ஸமஸ்தஸன்மங்களானி பவந்து*

வரலக்ஷ்மி பூஜை நிறைவுற்றவுடன் மலர்கள், அட்சதைகளைக் கலசம் அருகில் வைத்து வணங்கி தீர்த்தப்பிரசாதத்தை அளித்தல் வேண்டும்.

**தீர்த்த மந்திரம்**

*அகாலம்ருத்யுஹரணம் ஸர்வவ்யாதி நிவாரணம்*
*ஸமஸ்தாபாபசமனம் லக்ஷ்மீபாதோதகம் சுபம்.*

# வேல்மாறல் மகாமந்திரம்!

முனைவர் ச. செந்திலாண்டவன்,
சென்னை, 9444582856

*வீரவேல்! தாரைவேல்! விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல்! செவ்வேள் திருக்கைவேல்!-வாரி
குளித்தவேல் ! கொற்றவேல் சூர்மார்பும்,
குன்றும் துளைத்தவேல் உண்டே துணை!*

### முன்னுரை

பஞ்சாட்சரம் – திருவைந்தெழுத்து (நம சிவாய), சடாட்சரம் – திருஆறெழுத்து (சரவண பவ) போன்ற மந்திர எழுத்துக்களை, ஐங் கோண, அறுக்கோணச் சக்கரங்கள் (கட்டங் களுக்குள்) அமைய, அடைத்தெழுதி அந்தச் சக்கரங்களைப் பூஜை செய்வதால் உயர்ந்த புண்ணிய பலன்கள் கிடைக்கும் என்று கூறுவர் பெரியோர். அந்த முறையில், அருளாளர் அருணகிரி நாதர் பாடிய வேல் வகுப்பினை– வேல் மாறல் – பாட வேண்டிய – பாராயணம் செய்ய வேண்டிய அமைப்பையும் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் உருவாக்கி உள்ளது ஆனந்த அனுபவம்.



வேல்மாறல் பாராயணம் எங்கே நடக்கிறதோ அங்கே முருகப் பெருமான், வள்ளி, தேவசேனையுடன் சூட்சுமமாக எழுந்தருளி, மனம் மகிழ்ந்து கேட்டு, இன்புற்று, வேண்டிய வரங்களை அள்ளித் தருகின்ற, ஆனந்த அனுபவத்தைப் பல முருகன் அடியார்கள் உணர்ந்து, கண்ணீர் பெருக்கிக் கண்டிருக்கின்றார்கள்.

### மந்திர அதிர்வலைகள்

வேல் மாறல் பாராயணம், மன – ஒருமைப்பாடு என்கிற ஏகாக்ர சித்தத்தை உண்டாக்குகின்ற வல்லமை உடையது. பொதுவாகவே, மன ஒருமைப்பாட்டுடன் மந்திரங்களை உச்சரித்து வழிபடும் போது உண்டா கின்ற அதிர்வு அலைகளை, வேல்மாறல் பாராயணத் தில் உணர முடியும்.

### வேல்மாறல் பாராயணம்

அச்சத்தினாலும், மனச்சிதைவாலும் உண்டாகின்ற ஏவல் வைப்பு, பில்லி, சூனியம், பேய் பிசாசு பிடித்தல் போன்ற கடுமையான துக்கங்களிலிருந்து விடுவிக்க, வேல்மாறல் மிகவும் கைகண்ட மருந்து ஆகும்.

### நெஞ்சில் பக்தி

வேல்மாறல் பாடலைப் பக்தியுடனும், சிரத்தையுட னும், மன ஒருமைப்பாட்டுடனும், குறைந்தது ஒரு மண் டல காலம் அதாவது 48 நாட்கள் விடாமல் தொடர்ந்து, காலையோ, மாலையோ ஒருமுறையாவது பாராயணம் செய்வது மிகவும் அவசியமாகும். அதுமட்டுமின்றி, வளர்பிறை சஷ்டி தினத்திலும், கார்த்திகை தினத்திலும் ஒரு முறையேனும் பாராயணம் செய்தல் வேண்டும்.




ஸ்ரீஹயக்ரீவருடைய கனைப்பொலி சாமவேதத்தின் எல்லாக் கிளைகளும் ஒன்றுகூடிய வடிவமாயுள்ளது; ரிக்வேத மந்திரங்களின் பொருளைக் கூறும் மற்றொரு சொல்லோ என்னும்படி விளங்குகின்றது; யஜுர்வேத மந்திரங்களின் கருத்துக்கள் அனைத்தும் தன்னுள் அடங்கப்பெற்றது; கல்வி கற்பதற்கு வரும் தடைகளை எல்லாம் ஒழிக்கவல்லது; ஞானமெனும் கடலின் அலைவரிசையோ என்னும்படி நிற்பது. இவ்வாறு மூன்று வேதங்களின் ஸாரமென்னலாம்படி நின்று கல்வியின் தடைகளைப் போக்கி அறிவுச்சுடரை ஏற்றும் வல்லமையுடையது. பிற மதத்தினருக்கு யுக்திகளைக் கொண்டு வாதம் புரிவதில் செருக்குக் கொண்டுள்ளனர். அவர்களின் ஆரவாரத்தால் பல மக்கள் மதி மயங்குகின்றனர். அவர்களின் அஞ்ஞானவிருளை ஸ்ரீஹயக்ரீவனுடைய கனைப்பொலி அறவே ஒழித்தருள்க.

### பாராயணப் பலன்

இம்மகாமந்திர வேல்மாறல் பாராயணத்தை ஆண், பெண் மற்றும் சாதி–மத பேதமின்றி யாவரும் கூட்டுப் பாராயணமாகவும் செய்யலாம்.

நோயிலிருந்தும், வாழ்க்கைச் சிக்கல்களில் இருந்தும் விடுபட்டு, மனஉறுதியும், மனமகிழ்ச்சியும், மன நிறைவும் உண்டாக்கும். அவரவரும் மனத்தில் என்ன வரம் வேண்டுமென்று நினைத்துப் பாராயணம் செய்கின்ற போது, அப்பிரார்த்தனை கல்வி, திருமணம், வேலைவாய்ப்பு, எதிரிகள் தொல்லை என எவ்வாறாக இருந்தாலும் அவரவர் எண்ணியபடியே நிறைவேறும் அதிசய, அற்புத மந்திரம் வேல்மாறல் மகாமந்திரமாகும்.

### பாடும் முறை

வேல் வகுப்பின் 16 வரிகளை மேலும் கீழுமாகவும், முன்னும் பின்னுமாகவும், ஏறி இறங்கி வருவது போல, மாறி மாறி வர அமைத்து, அதனை 4 மடங்காக (16*4=64) அறுபத்து நான்கு வரிகளாக (அடிகளாக) அமைய வைத்துப் பாராயணம் செய்யும் முறையை "வேல் மாறல்" என்று தொகுத்தளித்தவர் வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் ஆவார்.

### வேலை வணங்குவதே வேலை

திருத்தணியில் அருள்புரியும் முருகப் பெருமான், உயிர்களின் உள்ளத்து இருள் அகல வந்த ஞானசூரியன்! அருளை வழங்குவதில் ஒப்பு அற்றவன்! குறிஞ்சிக் கிழவன்! உரிமையாக முருகப் பெருமான் என் உள்ளக் குகையில் உறைபவன்! கருணையே வடிவமானவன்! ஆதிக்கும் ஆதியாய் நிற்கும் மூலமுதல்வன்! திரோதானச் சக்தியாகிய மயிலைச் செலுத்தும் குகப் பெருமானின் ஞானமே உருக்கொண்ட திருவருட்சக்தியாகிய வேல் நம்மைக் காக்கின்ற கருணை வடிவம்! வேலை வணங்குவோம்.

### வள்ளியின் கருணைக் கண்களுக்கு ஒப்பாகும் வேல்

வள்ளிநாச்சியாரின் கடைக்கண் நோக்கால் விளையும் பயன்களை, முருகனது கைவேலே அருளிவிடும்! ஆழ்ந்தகன்ற நுண்ணிய வேல், வள்ளி நாச்சியாரின் கண்களுக்கு ஒப்பாகும்.

### இந்திரனைக் காத்ததும் வேலே

பனைத்துதிக்கை, சித்திர முகப்படாம், மதநீர் ஒழுகுகன்னம், வெண்மை நிறம் வாய்ந்த ஐராவதத்தின் அதிபதியான இந்திரனின் கால்களில் அசுரர்கள் இட்ட விலங்கின் ஆணியைத் தெறிக்கச் செய்யும், வேலாயுதம், ஆற்றல் மிக்க அரமாகும்.

### நக்கீரரை மீட்டது முருகன் கைவேல்

பழுத்த தமிழ்ப்புலமையுடன், மதுரைத் தமிழ்ச் சங்கப் பலகையில் விளங்கிய ஒப்பிலாப் புலவர் நக்கீரர் இசைத்த திருமுருகாற்றுப்படை நூலைக்

கேட்டு உருக, புலவர் நக்கீரர் அடைபட்டிருந்த குகையை இடித்து அவரை வெளியேற்றும் சக்தி கொண்டது முருகனது கைவேலாகும்.

### பேய்ப்பசி தீர்ப்பதும் வேலே

திருத்தணி முருகனது கைவேல், பசியினால் அனுபவித்த பேய்கள் அங்கங்களை அசைத்து, புலம்பி உணவு வேண்டுவதைத் தணித்து, அரக்கர்களது சதைகளையும் அப்பேய்கள் உண்டு களிக்குமாறு அருளவல்லதாகும்.

### பேரருள் பெருஞ்சோதி வேல்

திருத்தணி முருகப் பெருமானின் வேலாயுதத்தின் ஒளி சுடர்ப்பரிதியையும், குளிர்கிரண சந்திரனையும், கடலில் எழும் வடவாமுகாக்கினியையும், கந்த வேலின் ஒளி பிரபாவத்தின் முன்னால், நம்முடைய ஒளி எம்மாத்திரம் என்று வெட்கப்பட்டு நாணி, ஒளிரச் செய்யும் வண்ணம் தனது பேரொளிச் சோதியை எவ்விடத்தும் பிரகாசிக்கச் செய்யும்.

### பகைவரை வேரறுக்கும்

“வேலை வணங்குவதே வேலை” என வணங்கும் அடியார்களுக்கு யாராவது துன்பம் செய்ய நினைத்தார்களானால், நினைத்தவுடனே அப்பகைவரின் குலத்தையே வேரறுக்கும்! எனக்கோ ஒப்பற்ற பெருந்துணையாகி அருள் பாலிக்கும்! என்னப்பன் முருகன் கைவேல் அல்லவா!

### திருப்புகழ் அடியாரைக் காக்கும்

சொற்களால் சொல்ல முடியாத பெருமையையுடைய முருகனது திருவடியைப் புகழ்ந்து போற்றும் திருப்புகழ்ப் பாடல்களை ஓதுபவர்களிடம் நிகழ்கின்ற பகை ஏதும் இருப்பின், அவற்றை அழிக்க கோபித்துச் சினந்து ஆக்ரமித்து ஆக்ரோசமாகக் கிளம்பும் முருகனது கைவேல்.

### வேல் சிவபெருமானின் பேராற்றல் நிறைந்த திருவடிக்கு ஒப்பானது

அலங்காரமாகவும், ஆரவாரத்துடனும் முருகனடியார்களின் உயிரைக் கவர்வதற்கு எமன் வந்தால், எருக்கம்பூ, சந்திரன் இரண்டையும் சூடிய முடியையுடைய சிவபெருமானின் திருவடி, திருக்கடையூரில் எமனைச் சம்ஹாரம் செய்தது போல முருகனின் கைவேல் என்னையும் சம்ஹாரம் செய்யும்.

### பசியைப் போக்கும் முருகனது கைவேல்

உயிர்களின் பசித்தீயை அணைத்து, வறுமை இன்றி வாழவைக்கும். நமது கருத்தறிந்து வேண்டியதை எல்லாம் முடித்துத் தரும். நாம் நினைப்பதை எல்லாம் நிறைவேற்றி மகிழ்ச்சியளிக்கும்.

### திருத்தணி வடிவேலன் வடிவேல் துணை

அருணகிரி நாதருக்கு உதவியதுபோல, எட்டுத் திக்கும், பதினாறு கோணமும், விழிக்குத் துணையாகவும், மொழிக்குத் துணையாகவும், முன்பு செய்த பழிக்குத் துணையாகவும், தனி வழிக்குத் துணையாகவும் நின்று நம்மைக் காக்கும்.

### வினையழிக்கும் வீரவேல்

அசுரர்களின் கொட்டத்தை அடக்கிக் கொழுத்துத் தடித்த பெரிய குடல்களை மாலைபோல் அணிந்து, நம்முடைய வினைகளை அடியோடு அழிக்கும் முருகனது வீர வேல்.

### அலைகடலை ஒரு நொடியில் குடிக்கும் வேல்

அலைகடல் தண்ணீரில் உடைப்பு உண்டாக்கி, அதில் வரும் கடல்நீரை ஒரு நொடியில் குடித்து, அவ்வுடைப்பு முழுவதையும் அடைத்து, அதில் அசுரர் இரத்தத்தை நிரப்பி விளையாடும்.

### திசைமலைகளின் வேகம் போல் விரைந்து செல்லும் வேலாயுதம்

இந்திரன் திசைமலைகளின் சிறகுகளை அறுத்தெறிந்தான். அம்மலைகளுக்கு இறக்கை முளைத்துப் பறப்பது போல, அண்ட சராசரமும் அஞ்சி நடுங்கும்படி, உலகைச் சுற்றி வரும் முருகனது வேலாயுதம்.

### அசுரர்களைச் சாடும் சினவேல்

அசுரர்களைக் கொன்று, அறுத்த தலைகள் சிரிக்கும்படியாகவும், கண்களை உருட்டி கிழிப்பது போலவும், வாய் அளகும்படியாகவும் செய்ய வல்லது முருகப் பெருமான் கைவேலேயாகும்.

இப்படிப்பட்ட பேரருட்சக்தியையுடைய திருத்தணி முருகன் கைவேல், தன்னை வழிபடும் அடியார்களுக்குச் சகல செல்வ யோகம் மிக்கப் பெருவாழ்வு தந்து, காத்து, அருட்செல்வத்தையும், பொருட்

செல்வத்தையும் வாரிக் கொடுக்கும் வள்ளலாக உயிர்ச்சக்தியுடன் விளங்குகின்றது என்று அருணகிரியார் போற்றிப் பாடியுள்ளார். நாமும் "வேல் மாறல்" பாராயணத்தை ஆடிக்கார்த்திகையில் பாடி வழிபட்டு முருகன் பேரருளைப் பெறுவோம். வேல் மாறல் பாடல் உங்களுக்காக...

## வேல்மாறல் பாடல்

- பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை கருத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும்.
- பனைக்கைமுக படக்கரட மதத்தவள கஜக்கடவுள் பதத்(து) இடு(ம்)நி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும்.
- பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு கவிப்புலவன் இசைக்(கு)உருகி வரைக்குகையை இடித்துவழி காணும்.
- பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல் ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும்.
- சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும் விதி தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும் இடுக்கண் வினை சாடும்.
- சுடர்ப்பரிதி ஒளிப்பநில ஒழுக்குமதி ஒளிப்ப அலை அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும்.
- துதிக்கும் அடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர் நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும் எனக்கொர்துணை ஆகும்.
- சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை அறுத்தெறிய உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும்.
- தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி படைத்தவிறல் படைத்த இறை கழற்குநிகர் ஆகும்.
- தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின் உணவழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்கவளை வாகும்.
- தனித்துவழி நடக்கும்என திடத்தும்ஒரு வலத்தும்இரு புறத்தும்அரு கடுத்திரவு பகற்றுணைய தாகும்.
- சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர் சிவத்ததொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும்.
- திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்துடையும் உடைப்படைய அடைத்துதிரம் நிறைத்துவிளை யாடும்.
- திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்த சிறை முளைத்ததென முகட்டின்இடை பறக்கஅற விசைத்ததிர ஓடும்.
- சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி விழித்தலற மோதும்.
- திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை விருத்தன் என துளத்தில்உறை கருத்தன் மயில் நடத்துகுகன் வேலே!.




திருவதரி, பத்ரிவிஷால், பத்ரிநாத், பத்ரிகாச்ரமம்

# திருப்பதரியாச்ரமம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு**

பாரத நாட்டின் ஆன்மீக வாழ்விற்கு முடி மணியாய்த் திகழ்வது பத்ரிகாச்ரமம் என்ற திவ்ய தேசம். **“தேவு மற்றுஅறியேன்”** என்று ஆசாரிய நிலையை மதுரகவி ஆழ்வார் போற்றிய வண்ணம், பாரமார்த்திகப் பேரறிவை ஒருவன் பெற்று உய்ய வேண்டுமானால், குரு சிஷ்ய உறவு முறையின் மூலமாகத் தான் அதனைப் பெறமுடியும் என்பதை உலகிற்கு உணர்த்தும் ஒரே திவ்ய தேசம் திருவதரி ஒன்றே. பதரி என்ற சொல் இலந்தை மரத்தைக் குறிக்கும். பெரிய பிராட்டியாகிய மஹாலக்ஷ்மிக்கு விருப்பமானது இலந்தைமரம். லக்ஷ்மியே, பெருமாளுக்கு நிழல் கொடுக்கும் இலந்தை மரமாக மாறியதாகவும் கூறுவர்.

இந்த இலந்தை மர நிழலில் தான், பத்ரி நாராயணன் அமர்ந்திருப்பதாகவும், கலியுகத்தில் ஞானவான்களால் இலந்தை மரத்தைக் காண முடியும், மற்றவரால் காண முடியாது என்றும் கூறுவர். இந்த இலந்தை மர நிழலில் அமர்ந்தத் திருக்கோலத்தில் இருந்து, அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசம் செய்வதற்காகவே பரம பதத்தில் இருந்து கீழே இறங்கி வந்து உள்ளான் பகவான். அமைதியாகத் தியானம் செய்வதற்கு ஏற்ற இமாலயச் சூழல். எம்பெருமானின் தலையில் சடைமுடி. நான்கு திருக்கரங்கள். மேல் திருக்கரத்தில் சக்கரம். மேல் இடத்திருக் கரத்தில் சங்கு. கீழ்வலது, இடது திருக்கரங்கள் யோக முத்திரையைக் காட்டுகிறது.

பத்மாஸனத்தில் மகரிஷியாக சேவை சாதிக்கிறான். வலப் புறத்தில் குபேரனும், கருடாழ்வானும் உள்ளனர். இடப்புறத்தில் நாரதர், உத்தவர், நரரும் நாராயணரும். தானே தவத்தில் சிறந்து விளங்கி தன் அவதாரமாகிய நரநாராயணர்களுக்கு, உபதேசித்து உலகமே உய்வதற்கு எம்பெருமான் வழிவகுத்தார்.

குரு சிஷ்ய ஏற்றத்தை எடுத்துக்காட்டும் ஒப்பற்ற அர்ச்சாவதார நிலை. இலந்தை மரம் இருக்கும் இத்தலத்தில், திருமகளுக்கும் ஒரு தனிச் சந்நிதி உண்டு. ஆதிசங்கரர் சந்நிதி ஒருபுறத்தில். கோயிலின் பின்புறத்தில் லக்ஷ்மி நரசிம்மருக்கான தனிச் சந்நிதி அதில் ஸ்ரீமத்ராமாநுஜரும், ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனும் சேவை சாதிக்கின்றனர். எத்தனையோ தேவர்களும், முனிவர்களும் எம்பெருமானின் இந்த எளிய நிலையைக் கண்டு தாங்களும் தவம் செய்து ஞானம் பெற்ற தலம்.

இவர்களில் நாரதரும் ஒருவர். முன்பு ஒரு காலத்தில் த்ருஷத் வதி என்ற நாட்டில், விஷ்ணு மநஸ் என்ற அந்தணனுக்கு விஷ்ணு ரதி என்ற மைந்தன் பிறந்தான் என்றும், அவன் தன் தந்தையைப் போன்று வேத சாஸ்திரப் பயிற்சி செய்யாமல், எப்போதும் நண்பர்களுடன், பாடிக்கொண்டு, வாழ்ந்ததால் தந்தை கோபம் கொண்டு, அவனை வீட்டைவிட்டு வெளியேற்றவே பாடுவதை விடாமல் பிச்சை எடுப்பவனாய், அலையும் போது எம்பெருமானின் கிருபையால் (நிர்ஹேதுக கிருபை) எம்பெருமான் மீது பக்தி உணர்வு பெருகி, அவனது பாடல்களில் பக்திச் சுவை ததும்பியது.

இந்நிலையில் அவன் பாடிக்கொண்டே பத்ரியை அடைந்த போது, அவனது இசைக்கு உருகிய பத்ரி நாராயணன், தனது அனைத்து அலங்காரங்களுடன் நாராயணனாய் சேவை சாதிக்க,

விஷ்ணுரதி, நாரதன் என்ற பெயருடன் எல்லா வற்றையும் அறியும் பேரறிவையும் (ஸர்வக்ஞத்வம்) எல்லா இடத்திற்கும் எளிதாகச் செல்லும் வல்லமை யையும் (யோகி த்வம்), எம்பெருமானிடம் நிலைத்த பக்தி உணர்வும், எம்பெருமானை இனிய இசையில் பாடும் வல்லமையும், உலகப்பற்று சிறிதும் இல்லாமல் எம்பெருமானையே எக்காலமும் நினைக்கும் சிந்தனையும் வேண்டிப்பெற்றான்.

நாரம் என்ற சொல்லுக்கு தண்ணீர் என்பது பொருள். கங்கை நீரை எம்பெருமானிடம் அர்ப்ப ணித்ததால், விஷ்ணு ரதிக்கு நாரதர் என்ற பெயர் ஏற் பட்டு நிலைத்தது. சாதாரணப் பாடகரை நாரத மாமுனியாக மாற்றியது, பத்ரி நாராயணனின் பேரருளே.

சங்கரகுப்தன் என்னும் வியாபாரி புத்ர காமேஷ்டி என்னும் யாகத்தை அந்தணர்களைக் கொண்டு செய்வித்து, பிள்ளைப்பேற்றை அடைந்த தும், விதியின் விளைவால் மகன் மிகக் கொடியவ னாக, தீமைகளையே செய்து இழிநிலை அடைந்து, பிழை உணர்ந்து, தந்தையின் அறிவுரையால், பத்ரி நாதனை வழிபட்டு உய்ந்தான் என்றும் வரலாறு.

ஜனமேஜயன் என்ற அரசன் வியாசர் கூறிய வண்ணம், விதியை வெல்ல முடியாதவனாகி பெண்ணாசையால் சீரழிந்து, அதன் காரணமாக, தன் ஆசை நிறைவேறக் குறுக்கே நின்ற 18 அந்தணர்களைக் கொன்று, பின்பு வியாசரின் அறிவுரை நினைவில் தோன்றவே, பத்ரிக்குச் சென்று வியாசரின் ஆசிரமத்தை அடைந்து, சிலை வடிவில் இருந்த பாரத இதிகாசத்தை வணங்கி. உணவு உறக்கம் துறந்து, உயிர்விடும் தருவாயில், வியாசர் நேரில் தோன்றி, அவனுக்குப் பாரத இதிகாசத்தை உபதேசிக்க, பத்ரியின் தொடர்பாலும், பாரதம் கேட்ட பயனாலும், ஜனமேஜயன் பழைய நிலையை அடைகிறான்.

ஸ்காந்த புராணத்திலும், மாத்ஸ்ய புராணத் திலும், பல வரலாறுகள் உள. தான் செய்த கொடுந் தொழிலால், காட்டு எருமையாகப் போகுமாறு சபிக்கப் பெற்ற கலிங்க மன்னன், இத்திவ்ய தேசத் தீர்த்தத்தில் நீராடிப் பழைய நினைவுகளைத் திரும்பப்பெற்று தேவர் உலகம் சென்றான்.

திருபத்ரிகாச்ரம திவ்ய தேச வைபவம் தொடரும்...





## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய கேள்வி பதில்

91. ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடி ஸ்தானமாகக் கொண்டாடப்படும் ஆசார்ய புருஷர் யார்? அவர் அனுக்ரஹித்த க்ரந்தம் எது?

அழகியமணவாளப்பெருமாள் நாயனார், ஆசார்ய ஹ்ருதயம்.

92. பாகவத வைபவத்தை விவரிக்கும் திருவாய்மொழியில் பதிகங்கள் யாவை?

பயிலும் சுடரொளி (3–7), நெடுமாற்கடிமை (8–10)

93. தத்வத்ரயம், சதுச்லோகீ, பஞ்சஸ்தவம், ஸப்தகாதை, அஷ்டச்லோகீ, நவரத்னமாலை, ஆகிய க்ரந்தங்களை அநுக்ரஹித்த பரம விலக்ஷணமான ஆசார்யர்கள் திருநாமங்களை வரிசையாக எழுதுக?

பிள்ளைலோகாசார்யர், யாமுனாசார்யர், கூரத்தாழ்வான், விளாஞ்சோலைப் பிள்ளை, பராசரபட்டர், பிள்ளைலோகாசார்யர்.

94. திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்தில் வளருங் கோள் என்று நஞ்சீயருக்கு மங்களாசாசனம் செய்த அருளாளப்பெருமாள் எம்பெருமானார் சீடர் யார்?

நஞ்சீயருக்கு அனந்தாழ்வான் மங்களாசாசனம்.

95. பூர்வாசார்யர்களில் யார் யாரை பெருமாள் தாய் பாவனையில் ஆய் என்று அன்போடு அழைத்தார்?

நடாதூரம்மாள், கந்தாடை தோழப்பர் திருக்குமாரரான பெரிய ஆயி, சிறிய ஆயி, திருநாராயணபுரம் ஜனந்யாசார்யர்.

**- தெலுங்கில் : கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.நடாதூர் பாஷ்யாசார்ய ஸ்வாமி, ஸ்ரீபெரும்பூதூர்.**
**தமிழாக்கம் : திருமதி குமுதா வரதராஜன், சென்னை.**



அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# ஸ்ரீபராசர பட்டர்

- ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

ஸ்ரீரங்கநாதனுக்கு புரோஹிதராய், ஸ்ரீவத்ஸாங்கர் என்னும் கூரத்தாழ்வானின் திருக்குமாரராய் அவதரித்தவர் ஸ்ரீபராசரபட்டராவார். இவர் வைகாசி மாதம் அநுஷ நக்ஷத்ரத்தில் அவதரித்தார்.

***தென்னரங்கர் மைந்தன்எனச் சிறக்க வந்தோன்வாழியே***
***திருநெடுந்தாண்டகப்பொருளைச் செப்புமவன் வாழியே***
***அன்ன வயல் பூதூரன் அடிபணிந்தோன் வாழியே***
***அநவரதம் எம்பாருக்கு ஆட்செய்வோன் வாழியே***
***மன்னு திருக்கூரனார் வளமுரைப்போன் வாழியே***
***வைகாசி அனுடத்தில் வந்து உதித்தான் வாழியே***
***பன்னு கலை நால்வேதப்பயன் தெரிந்தோன் வாழியே***
***பராசரனாம் சீர்பட்டர் பாருலகில் வாழியே***

## பதவுரை

தென்னரங்கர் – ஸ்ரீரங்கத்திலுள்ள நம்பெருமாள், மைந்தன் என – புதல்வன் என்று பிரசித்தி தோன்ற, சிறக்க வந்தோன் வாழியே – கொண்டாடும்படி அவதரித்தவர் ஸ்ரீபராசர பட்டர். அவர் பல்லாண்டு வாழ வேண்டும். திருநெடுந்தாண்டகப்பொருளை – திருமங்கயாழ்வார் அருளிய திருநெடுந்தாண்டகத்தின் உட்பொருளான ரகஸ்யத்ரயத்தை, செப்புமவன் – விளங்கச்செய்தவர். அன்ன வயல் – அன்னங்கள் உலாவும் வயலையுடைய, பூதூரன் – ஸ்ரீபெரும்பூதூருக்குத்தலைவரான இராமாநுசன், அடிபணிந்தோன் – திருவடிகளைப் பற்றினவர். மன்னு – பொருந்திய, திருக்கூரனார் – கூரத்தின் தலைவரான கூரத்தாழ்வான், வளமுரைப்போன் – பெருமையை உரைப்பவர். வைகாசி – வைகாசி மாதத்தில், அனுடத்தில் – அநுஷ நக்ஷத்ரத்தில், வந்து உதித்தான் – வந்து அவதரித்தவர். பன்னுகலை – நாலாயிர திவ்யப்ரபந்தம், நால்வேதப்பயன் – நான்கு வேதப் பயனாக, தெரிந்தோன் – அறிந்தவர். பராசரனாம் சீர் பட்டர் – பராசரர் என்று புகழ்பெற்ற பட்டர், பாருலகில் – இந்த உலகில், வாழியே – பல்லாண்டு வாழ்கவே.

## சிறப்புரை

*(தென்னரங்கர் மைந்தன் எனச் சிறக்க வந்தோன் வாழியே)* பட்டர் தென் அரங்கனுக்கு மைந்தனானவாறு எங்ஙனே என்னில் – ஆளவந்தார், ஸ்ரீபராசர பகவான் பேரைக்குறிக்க ஒரு ஸத்புத்ரன் உண்டாகவேணும் என்று ப்ரபத்தி பண்ணியிருந்தார். அவர் திருவுள்ளத்தை இராமாநுசரும் தலைக்கட்டி வைக்க வேணும் என்று ப்ரபத்தி பண்ணினார். அவர்களை உகப்பிக்க பெரிய பெருமாள் காலம் பார்த்து இருந்தான். அப்போது ஒரு நாள் இராமாநுசருடைய சீடர்களில் முதல்வரான கூரத்தாழ்வானும், அவருடைய தேவியான ஆண்டாளும் பதி பத்நீ சேர்த்தியற்றவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். மழைக் காலத்தில் ஒரு நாள்

நடுப்பகல் வரை பெருமழையாயிருந்தபடியால் ஆழ்வான் உபாதானத்துக்குச் செல்ல முடிய வில்லை. மறுநாளைக்கென்று சேர்த்து வைக்கும் பழக்கமும் இல்லை. எனவே எம்பெருமானுக்கு ஒரு பழத்தை அமுது செய்வித்தார்.

மாலையில் நம்பெருமாளை சேவித்தார். திருவாய்மொழி அனுஸந்தானமே தாரகமாக பட்டினியோடே தூங்குவதற்கு எழுந்தருளினார். அப்போது நம்பெருமாளுக்கு அரவணை ப்ரஸாதம் அமுது செய்து திருச்சின்னம் ஸேவிக்கும் ஒலி கேட்டது. அது கேட்ட கூரத்து ஆண்டாள் உம்முடைய பக்தர் பட்டினியாய்க் கிடக்க, நீர் என்ன குலாவிக் குலாவி அமுது செய்தருளுகிறீர் என்று நினைத்தாள். அந்நினைவு பெரிய பெருமாள் மனத்திலே உறுத்தியது.

திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த உத்தமநம்பியின் கனவில் பெருமாள் தோன்றி "நம்பீ! ஆழ்வான் பட்டினி கிடக்கிறார். நம் அரவணை ப்ரஸாதத்தை – குடை. சாமரங்கள், எல்லா வாத்யங்களோடு தலையில் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போய் கொடும்" என்று நியமித்தருளினார்.

நம்பியும் கண்விழித்து அவ்வண்ணமே கொண்டு போய் ஆழ்வானிடம் அரவணை ப்ரஸாதம் நம்பெருமாள் அனுப்பி இருக்கிறார், ஏற்றுக் கொள்ளும் என்று சொல்ல, ஆழ்வானும் அதை சிரஸா ஏற்றுக் கொண்டு தனக்கும் ஆண்டாளுக்குமாக மூன்று பாகத்தை ஸ்வீகரித்து, எஞ்சியதை பண்டாரத்துக்கு அனுப்பிவிட்டார். ஆண்டாளைப் பார்த்து நீ என்ன நினைத்தாய் என்று ஆழ்வான் கேட்டார். அவளும் தாம் நினைத்ததைச் சொன்னாள்.

நீ இப்படி எண்ணலாமோ என்று வெறுப்புடனே தாமும் ப்ரஸாதத்தை ஏற்றுக் கொண்டு இரண்டு பாகத்தை ஆண்டாளுக்கும் கொடுத்தார். அவற்றை ஆண்டாள் கருவில் இரண்டு பிண்டங்களாய் அமையும்படி கடாக்ஷித்தான் பெரிய பெருமாள். பிள்ளைகள் பிறந்த பின்பு முற்படப் பிறந்தவரை எம்பெருமான் ஸ்வீகாரம் செய்து கொண்டார். பின்பிறந்தவரை அவர்களுக்காக விட்டுவைத்தான் என்று குருபரம்பரை நூல் கூறும். இராமாவதாரத்தில் தசரதன் புத்ரகாமேஷ்டி யாகத்தில் உண்டான பாயஸத்தினால் நான்கு குமாரர்கள் அவதரித்தாப்போலே, இவ்விரண்டு திரளைகளால் பட்டரும் சீராமப்பிள்ளையும் அவதரித்தார்கள். இதுவன்றோ தென் அரங்கர் மைந்தன் எனச் சிறப்பு தோன்ற அவதரித்தது. அத்தகைய ஸ்ரீபராசர பட்டர் பல்லாண்டு வாழ்க.

பட்டர் வாழித்திருநாம உரை தொடரும்...

## ஸப்தகிரி ஜூன் 2026 விடைகள்

1. நரசிம்மர்.
2. திருமங்கையாழ்வார்.
3. ஸ்ரீமந்நாதமுனிகள்.
4. திருவாய்மொழி.
5. தேவப்பெருமாள்.
6. வைகாசி, ரோகிணி.
7. கம்பர்.
8. பாரதியார்.
9. அனந்தாழ்வான்.
10. ஜயத்ரதன்.
11. திருமாலிருஞ்சோலை.
12. பிள்ளைலோகாசாரியார்.
13. நாலாயிர திவ்ய பிரபந்தம்.
14. திருநைமிசாரண்யம்.
15. பெரியாழ்வார்.




## போட்டி எண். 47

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றிப் பெற்றவர்கள்**

1. செல்வன் ஆர்.மோஹித், அம்பத்தூர், சென்னை.
2. செல்வி அ.அம்ரிதா, சத்தியமங்கலம், ஈரோடு.
3. செல்வி சி.தேவரதி, சத்தியமங்கலம், ஈரோடு.

# சீலம் எல்லை இலான்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

*அபிஷிச்ய லங்காயாம்: ராக்ஷஸேந்த்ரம்
வீபீஷணம் க்ருதக்ருத்யஸ் ததாராம:*

விபீஷணாழ்வானுக்கு முடிசூட்டித் தன் காரியம் தலைக்கட்டியதாக நினைத்து (குதாராம:) அப்போது தான் சந்தோஷம் அடைந்து இராமன் ஆயினான் என்கை.

பெருமாள் செய்தருளின ஒவ்வொரு காரியமும் அவர் தம்முடைய திருவுள்ளத்தை மட்டும் குளிரச் செய்யாமல் அவருடைய பக்தர்களுக்கும் குளிரச் செய்ய வல்லதேயாயிற்று.

குகன், சுக்ரீவன், மாருதி, விபீஷணாதிகள் பக்கலிலே காட்டின அனுக்ரஹ விசேஷத்தினால் தம் திருவுள்ளம் குளிர்ந்தது போல, தாடகா தாடகேய விராத கரதூஷண ராவணாதிகள் பக்கலிலே காட்டின நிக்ரஹத்தினாலும் ஆச்ரித விரோதிகள் தொலையப் பெற்றோம் என்றும் திருவுள்ளம் குளிர்ந்திருக்கக் குறையவில்லை.

ஆக *''ரமதே இதி ராம''* என்கிற வ்யுக்பத்தியினால் ஸ்ரீராமாயணத்தில் பல ப்ரகரணங்களில் காட்டப்பட்டு உள்ளது. அன்றியே *''ராம: ரமயதீதி ராம''* என்கிற வ்யுத்பத்தியும் பொருந்தும். எம்பெருமான் ஸ்ரீராமன் தன்னைக் காண்பவர்களையும், தன் சரிதை கேட்பவர்களையும் மகிழ்விப்பார். உலகத்தில் அதிகாரிகள் வெவ்வேறு தட்டில் இருந்தாலும் ஒரே குணத்தினால் எல்லோரையும் ஏக ரூபமாக மகிழ்விக்க முடியாது.

*ஸத்யேந லோகாந் ஜயதி
தீநாந் தாநேந ராகவ :
குரூந் சுச்ரூஷயா தீரோ
தநுஷா யதி சாத்ரவாந் :*

என்கிறபடி ஒவ்வொருவர் பக்கலிலே ஒவ்வொரு குணத்தைச் செலுத்தி மகிழ்விப்பது ஸ்ரீராமனின் ப்ரஸித்தமான ஸௌசீல்யம்.

ஸௌசீல்யம், சௌலப்யம், ஸௌந்தர்யம், பொறுமை, தயவு, வாத்ஸல்யம், வீரம் முதலான பல திருக்குணங்கட்குக் கடலாக விளங்குகின்ற பெருமாள் பரமபதத்தில் தன்னுடைய திருக்கல்யாண குணங்களை ப்ரகாசிக்கச் செய்ய முடியாமல் போகவே இம்மண் உலகில் மானிடமாய் வந்து தோன்றி அனைவருக்கும் தன்னுடைய உயர்ந்த குணங்களால் அனுக்ரஹித்தார். அக்குணங்களில் ஈடுபட்ட ஆழ்வார்களும் ஆசாரியர்களும் மிகவும் மகிழ்ந்து மற்றவர்களும் மகிழ்விக்க வேணுமாய் அனுக்ரஹித்த ப்ரபந்தங்களும், சுலோகங்களும், வியாக்யானங்களும் பகவானின் சிறந்த கல்யாண குணங்களை அடியார்கள் ஆகிய நாமும் அனுபவிப்பதற்கு நமக்கு மிகவும் உறுதுணையாய் இருக்கின்றன.

ஸ்ரீராமன் தமது ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களாலே தண்டகாரண்ய வாஸிகளான மகரிஷிகளை ஈடுபடுத்தினார். காதும் மூக்கும் அறுப்புண்டு கதறியழுது கொண்டே கரதூஷணாதிகளிடம் சென்று சொல்லலுற்ற,



**- பெருமாள் கோவில்
திருமலை விஞ்சமூர்
ஆராவமுதன்,
திருவல்லிக்கேணி**

*சூர்ப்பனகை தருணௌ ரூபஸம்பந்நௌ*
*ஸூகுமாரௌ மஹாபலௌ புண்டரீக*
*விசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜி நாம் ப்ரௌ*
*கந்தர்வராஜ ப்ரதிமௌ பார்த்திவ வ்யஞ்ஜ நாந்விதௌ*

என்று இராமனின் அழகினைப்பற்றி சொல்லிச் சொல்லி புலம்பும்படி செய்ததே சிறப்பு.

இங்ஙனே ஒரே குணங்களைக் காட்டி ஒவ்வொருவரையும் ஈர்த்தது. ஸ்ரீராமனின் கல்யாண குண வடிவழகில் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் மிகவும் மோஹித்து இருந்தார்கள். திருமங்கை ஆழ்வார் பெரிய திருமடலில் *"பன்னியுரைக்குங்காற் பாரதமாம்"* என்று சிறிய வார்த்தையில் மிகப்பெரிய அர்த்தமான ஸ்ரீராம அவதாரத்தின் மகிமை, அவருடைய அனுக்ரஹம் பாரத தேசத்திற்குக் கிடைத்தது மிகப்பெரிய பொக்கிஷம் என்றார். மேலும் நம்மாழ்வார்,

*நீராய் நிலனாயத் தீயாய் காலாய் நெடுவானாய்ச்*
*சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனானாய்*

– திருவாய்மொழி 6–9–1

*"தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்..."*

– திருவாய்மொழி 7–8–1

என்று அநுஸந்தித்தபடி, எல்லாப் பொருள்களுமாகவும் இருக்கிற பரமாத்மா இராமன் என்கிற ஒரு பெயருக்கு மாத்திரம் பொருளாகவும் இருந்தான். ஆக, இங்ஙனே உயர்ந்த நிலைமைகளை விட்டுத் தாழ்ந்த நிலைமைகளை ஏறிட்டுக் கொண்டுவந்து பிறந்தவாறு என்னே! என்று ஈடும்படியான சீல குணம்.

## மஹரிஷி வால்மீகி, ஆழ்வார்கள், கம்பர் ஆகியோரது விசேஷ அநுபவங்கள்

ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும், கம்பர் வாக்கினாலும் தோழமைக் குணம் ப்ரகாசிப்பது நன்கு தெரிகிறது. கம்பராமாயணம் விபீடணன் அடைக்கல படலத்தில் – 146

*குகனோடும் ஐவரானோம் முன்பு, பின் குன்று சூழ்வான்*
*மகனொடும் அறுவரானோம் எம்முழையன்பின் வந்த*
*அகனமர் காதலைய நின்னொடும் எழுவரானோம்*
*புகலருங் கானந்தந்து புதல்வராற் பொலிந்தானுந் தந்தை*

என்ற பாடல் மிக மிக இன்சுவை.

தசரத மகாராஜாவிற்கு நான்கு பிள்ளைகளாய்ப் பிறந்தோம். அன்றளவும் திருப்தி பெறாத தசரதன் இன்னமும் புத்திரர்கள் வேண்டியே எங்களைக் காட்டிற்கு அனுப்பி இன்னமும் சில தம்பிமார்களைச் சம்பாதித்துக் கொண்டு வாருங்கள் என்று எங்கள் இருவரையும் கானகம் அனுப்பினார். கங்கைக் கரையிலே குகனைத் தம்பியாகவும், பம்பைக் கரையிலே சுக்ரீவனைத் தம்பியாகவும், கடற்கரையிலே விபீடணா! உன்னையும் தம்பியாகப் பெற்றோம். ஆக, நம் தந்தை ஏழு புத்திரர்களைப் பெற்றவர் ஆயினார்.

மேற்கூறிய சொற்களை உதிர்த்த இராமன் குகனிடத்தும், சுக்ரீவனிடத்தும், விபீடணனிடத்தும் கூடப்பிறந்த தம்பியைப் போலவே அன்பு பாராட்டுபவன் என்பதை அன்றோ வெளியிட்டான்.

இராமபிரானுடைய சீலகுணம் விளங்கின இடங்கள் பல பல இருந்தாலும் குகன், சுக்ரீவன், விபிஷணன் என்ற மூன்று இடங்கள் முக்கியமாக அமைந்துள்ளன.

வேதாந்ததேசிகர் தயாசதகத்தில் *"நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ"* என்னும் சுலோகத்தில் சபரியையும் எடுத்துக்காட்டியுள்ளார். பெருமாள் சபரியினிடம் கலந்து பரிமாறின வரலாற்றைக் கம்பரும் கூறியுள்ளார்.

சபரியிடம் கலந்து பரிமாறினதை நம் பூர்வாசார்யர்கள் விசேஷமாகவும் கூறியுள்ளனர். ஸ்ரீவசன பூஷணம் வ்யாக்யானம் (233) என்கிற க்ரந்தத்தில் பெருமாள் சபரி கையாலே அமுது செய்தருளினர் என்று கூறியதை ஸ்வாமி மணவாளமாமுனிகள் ரகுகுல திலகராய் ஆசாரப் ப்ரதாநரான எம்பெருமான் *"சபர்யா பூஜீதஸ் ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:"* என்னும்படி "வேடுவிச்சியாய் வைத்தே குரு சுச்ருகைஷயிலே பழுத்து ஜ்ஞாநாதிகையாய் தன் நாவுக்கு இனிதாயிருந்தே பல மூலாதிகள் எல்லாம் இங்குத்தைக்கென்று ஸஞ்சயித்துக் கொண்டு வரவு பார்த்திருந்த ஸ்ரீசபரி தன் ஆதாராநுகுணமாகத் தன் கையாலே அமுது செய்ய பண்ண அதிஸந்துஷ்டராய் அமுது செய்தார்" என்று அருளிச் செய்தார்.

வேதாந்த தேசிகர் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஆறாவது அங்கத்தில் விவேகன் ஆனந்தமாகப் பாடுவதாய் இயற்றியுள்ள சுலோகத்தில், *''பகவதி பரத்வாஜே புக்திஸ் ததா சபரீக்ருஹே''* "ஸ்ரீராமன் பரத்வாஜ ஆஸ்ரமத்தில் அமுது செய்தது போல் சபரி திருமாளிகையிலும் அமுது செய்தார்'' என்று சிறப்பிக்கிறார். இதுதான் ஸ்ரீராமனுடைய நீர்மை என்று ஈடுபட்டுக் கூறலாம்.

ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று சொல்லி மறுநாள் காலை கைகேயி சொல்லால் விடியும் போது "காட்டிற்குச் செல்" என்று கூறியபோதும் பெருமாள் சிறிதும் மனவேதனை இன்றி நாட்டை ஆள்வதைக் காட்டிலும் காடு சென்று உறைவதே பரமானந்தம் என்று உள்ளம் பொங்கி கூறியது ஸ்ரீராமனின் மஹாகுணம்.

ஸ்ரீராமனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் நடைபெற இருப்பதை உணர்ந்த கைகேயி மந்தரையினால் மனம் கலைக்கப் பெற்று, கோபம் கொண்டு தசரதனிடம் இராமனுடைய வன வாசத்தையும், பரதாபிஷேகத்தையும் வரமாகக் கேட்டவுடன் சக்ரவர்த்தி மூர்ச்சித்துக் கிடந்தான். மூர்ச்சை தெளிந்த பின் "அடீ கொடியவளே! இராமன் உனக்கு செய்த தீங்கு ஏதேனுமுண்டா? பெற்ற தாய்க்கும் மேலாக உனக்குப் பணிவிடை செய்தவன். எல்லோரும் எல்லா வர்க்கங்களும் புகழும்படி என்னை விட உயர்ந்த நற்குண நற்செய்திகள் வாய்ந்த இராமனை எங்ஙனம் நான் வனம் போக விடுவேன்?'' என்றவாறு தசரதன் புலம்பி இராமனுடைய நற்குணங்களை நாலைந்து சுலோகங்களினால் கல்லும் உருகும்படி கூறுகின்றான். அவற்றுள் முக்கிய சுலோகம்.

*ஸத்யேந லோகாந் ஜயதி தீநாந் தாநேந ராகவ:*
*குருந் சுச்ரூஷயா தீரோ தநுஷா யுத் சாத்ரவாந்*

இராமன் தன்னுடைய ஸத்ய வாக்கின் பெருமையினால் ஸகல லோகங்களையும் தானிட்ட வழக்காகக் கொண்டு இருக்கின்றான். ஏழைகளைத் தன் கொடையினால் கவர்கின்றான். ஆசிரியர்களை பணிவிடையினால் கவர்கின்றான். போர்க்களத்தில் வில்லினால் பகைவர்களைக் கவர்கின்றான் என்பது பொருள்.

மேலும், கம்பர் தனது கம்பராமாயணம் – அயோத்யா காண்டம், கைகேயிப்படலம் – 108 ல் *''இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கெளிதோ? யாருஞ் செப்பருங்குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின் ஒப்பதே முன்பு பின்பு அவ்வாசகம் உரைக்கக் கேட்ட அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா''* என்று வியக்கிறார்.

"உனக்கு நாடு இல்லை. நீ வனம் செல்ல வேண்டும்" என்று தசரதன் சொன்னபோது இராமனது திருமுகக்கமலத்தில் தோன்றிய விகாஸத்தை அப்பொழுது கண்கூடாகக் கண்டவர்கள் சொல்லவேண்டுமே அல்லது நாம் அதை சொல்ல வல்லோம் அல்லர். காடு செல்வாய் என்கிற சொல் செவிப்படுவதற்கு முன்னே இராமனது முகம் தாமரை போன்றிருந்ததாம்; அச்சொல் செவிப்பட்டதும் தாமரையை வென்று விளங்கியதாம். காடு செல்வதைப் பற்றி வருத்தமின்றி அளவு கடந்த ஆனந்தம் ஏற்பட்டதாம். மேலும் "மன்னவன் தசரதன் சொன்னாலும் (அல்லது) எனது தாயான மகராணி கைகேயி நேரிடையாகக் கூறினாலும் வனவாசத்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றது இராமன் எனது தம்பி பரதன் ராஜ்யம் ஆள்வது எனக்கு மிகச் சந்தோஷம் தெரிவித்ததைக் கம்பர் *''என் பின்னவன் பெற்ற செல்வம்*

## விகனஸ மஹரிஷி

வைணவ சமயத்தில் இறை வழிபாட்டு முறைகளை திருமாலே நேரடியாக இவருக்கு ஆகம வடிவத்தில் உபதேசித்ததாக ஆன்மீக நூல்கள் கூறுகின்றன. இவருடைய சீடர்கள் அத்ரி, பிருகு, மரிச்சி, காஷ்யபர் ஆகிய நான்கு முனிவர்கள் மூலம் இந்த ஆகமம் பிரசித்தி பெற்றது. திருவேங்கடத்தில் வைகானச ஆகம முறைப்படியே வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.



***அடியனேன் பெற்ற தன்றோ!''*** என்று பாடுகிறார். மேற்கூறிய கருத்தையே குலசேகராழ்வார் தன்னுடைய பெருமாள் திருமொழி பிரபந்தத்தில் ***''கொத்தலர் பூஞ்சுரிகுழல் கைகேசி சொல்லால் தொன்னகரம் துறந்து, துறைக் கங்கை தன்னை பத்தி யுடைக் குகன் கடத்த வனம் போய்ப் புக்கு பரதனுக்கு பாதுகமும் அரசும் ஈந்து''*** என்று அநுஸந்தித்துள்ளார்.

நாட்டில் அரசு செய்தால் தனது பரத்வகுணம் ஒன்றையே காட்ட முடியும். சீல குணத்தைக் காட்ட அவகாசமே நேரிடாது. அதிகமாக சீல குணத்தைக் காட்டுவதற்காகவே அவதாரம் செய்தார் பெருமாள்; சீல குணம் மிக மிக விளங்குவதற்குரிய வனவாசமே அன்றோ அவனுக்கு ஆனந்த சுகமாகும் என்கிறபடியே ***''வன வாஸோ மஹோதய''*** என்றார் வால்மீகி.

ரிஷிகளின் பக்கலிலே இராமன் சென்று தாழ நின்ற சீலமும் நெஞ்சை உருக்குவதாகும். மஹரிஷிகளின் ஆஸ்ரமங்களுக்குத் தானாகச் சென்று அவர்களைத் தெண்டனிட்டு குசலப்ரச்னம் பண்ணவேணும் என்று இராமன் விரும்ப, அவர்கள் முந்திக் கொண்டு வந்து தங்கள் குறைகளை விண்ணப்பஞ் செய்தபோது அவர்களிடம் ஸ்ரீராமன் பணிவுடன் கேட்டுக்கொண்டது ஆகும்.

அவனது சீல குணத்தை விளக்கினபடியே, வால்மீகர் முனி ***''ஸிம்ஹஸ்ய கவிதா வநசாரிண ச்ருண்வன் ராமகதா நாதம் கோ ந யாதி பராங்கதிம்''*** எம்பெருமானின் அவதார சரித்திரமான ஸ்ரீராமாயணம் வால்மீகி முனிவரால் அருளப் பட்டது. எம்பெருமானின் ஸௌஸீல்ய ஸௌலப்ய ஸ்வாநு பவ்யங்கள் நிரூபகமாகத் திகழும் ஸ்ரீராமனின் கதை இந்த பூவுலகத்தையும் மற்றும் வானவர் நாட்டையும் உஜ்ஜீவிக்கிறது.

அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி – தன் தாமமேவிச் சென்று – இனிது வீற்றிருந்த ஸ்ரீராமன் பாரததேசத்தில் உலகுய்ய திருவயிறு வாய்த்த புதல்வர்களின் செம்பவளத் திரள்வாய் மூலம் தன் சரிதை கேட்டதனாலும் ஸ்ரீராமபிரான் தன்னை ஆராதிப்பவருக்கும் தன் சரிதையைப் பாடுபவருக்கும், அவரது சரிதையில் அந்வயிப்பவருக்கும் அனுக்ரஹம் செய்வார் என்பது அவரது சீல குணத்தால் நன்கு புலப்படுகின்றது.

வால்மீகி மஹரிஷி அனுக்ரஹித்த ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமனது ஸௌலப்ய, ஸௌஸீல்ய குணத்தினைப் பற்றி, பிற்காலத்தில் அவதரித்த ஆழ்வார்களும். ஆசார்யர்களும் ஆழங்கால்பட்டு தமிழில் திவ்ய ப்ரபந்தமாகப் பாசுரங்களில் அனுபவித்துள்ளார்கள். சிற்சில பதங்களை மேலே அந்வயித்துள்ளோம்.

நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் ஒன்பதாம் பத்து மூன்றாவது பதிகம் பதினோராவது பாசுரத்தில் ***''சீலம் எல்லை இலான்''*** என்று சாதித்து அருள்கிறார். இது ஸ்ரீராமபிரானின் எல்லையற்ற எளிமையை ஆழ்வார் மிகவும் அநுபவிப்பதாக பூர்வாசாரியர்கள் வியாக்யானங்களில் திருவுள்ளம் பற்றி இருக்கிறார்கள். எல்லையற்ற எளிமையும் கருணையுமே வடிவான பேரருளுக்குப் பாத்திரர்கள் ஆவோமாக.

*முற்றும்...*

## குறுக்கெழுத்துப் புதிர் விடை -121

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கி | ரு | த் | தி | கை | ர | யி | மா | ண | ர | 3 வா | 4 ச |
| ரு | ம் | ம் | க | 5 ரா | | ன் | 6 கா | ங் | 7 ர | யு | ங் |
| ஷ் | ர | | | சி | 8 கா | த | ளி | | | பு | க |
| ண | ப | 9 பு | ர | ந் | த | ர | தா | 10 ச | ர் | த் | ரா |
| ர் | ம் | | 11 ச | ங் | கு | ச | ச | க் | | தி | ப |
| ண | தா | | | 12 ப | ர | 13 த | ன் | தி | 14 ந | ர | ர |
| ரோ | 15 பீ | ம | சே | ன | ன் | 16 ப | ங் | கா | ள | ன் | ண |
| 17 து | ஷ் | ய | ந் | த | ன் | 18 ச | கு | ந் | த | லை | ம் |
| ரி | ம | | ம் | த | வ | க | 19 பா | | ம | | க |
| யோ | ர் | ர் | ம | ரு | 20 த | ன | ஞ் | 21 ச | ய | ன் | மு |
| 22 த | சா | வ | தா | ர | ம் | | | கு | ந் | ய | ண் |
| ன | 23 ந | மோ | நா | ரா | ய | ணா | ய | னி | தி | 24 ம | 2 ச |



# ஆகஸ்ட் 2026
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.




தொழிலில் செலவுகள் அதிகமாகும். ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு இட மாற்றம் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றியைக் கொடுக்கும். கருவுற்ற தாய்மார்கள் உடல் நலனில் மிகுந்த அக்கறை தேவை.படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். தம்பதிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். பெரும் முயற்சியால் முன்னேறும் மாதம் இது.




வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தொழிலில் அலைச்சலுடன் முன்னேற்றம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். தம்பதியரிடையே ஒற்றுமை நிலவும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும், சம்பள உயர்வும் உண்டு. தெய்வஸ்தல யாத்திரையில் நல்ல தரிசனம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நினைத்ததைச் சாதிக்கும் மாதம் இது.




குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். ஆரோக்கியத்திலும், தொழில் துறையிலும் முடிவு எடுப்பதில் மிகுந்த அக்கறை தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு வேலைகள் மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். வீடு, மனை, புது வாகனம் வாங்க முயற்சி செய்யலாம். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் பெறும் இனிய மாதம் இது.




தொழிலில் இருந்த தேக்கநிலை மறையும். ஓரளவு தொழிலில் நல்ல வளர்ச்சி உண்டு. செலவிற்கேற்ற வருமானம் கிடைக்கும். தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. குழந்தைகள் கல்விக்காக செலவுகள் அதிகமாகும். வீடு, மனை பழுது செய்ய வேண்டி இருக்கும். குடும்ப உறுப்பினர்களுடன் பேசும்போது விவாதத்தைத் தவிர்க்கவும். மிகவும் எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதம்.




மூட்டு வலிகளுக்குத் தகுந்த மருத்துவம் கிடைக்கும். குழந்தைகள் கல்விக்காக செலவினங்கள் அதிகமாகும். குடும்ப ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. செலவிற்கேற்ற வருமானம் கிடைக்கும். மாணவர்கள் மிகுந்த கருத்துடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தால் மட்டுமே வெற்றியைப் பெரும் மாதம் இது.




தொழிலில் அலைச்சலுடன் வளர்ச்சியும் கூடவே அமையும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். திருஷ்டி காரணமாக நினைத்த காரியங்கள் தாமதமாக நடக்கும். தம்பதியரிடையே இருந்த பிரச்சனைகள் தீரும். கிடைத்த வேலையில் உடனடியாக சேர்ந்து கொள்வது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாகும் நல்ல மாதம் இது.




பழைய பாக்கிகள் வசூல் ஆகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. மனைவியின் ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் நீங்கும். படித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். கருவுற்ற தாய்மார்கள் தூர பிரயாணங்களைத் தவிர்க்கவும். நல்ல காரியங்களுக்குத் தலைமை தாங்கி நல்ல பெயரைப் பெறுவீர். நினைத்ததைச் சாதிக்கும் மாதம்.




திருமணம் கைகூடும். அடிக்கடி பிரயாணம் செய்வதால் அலைச்சல் உண்டாகும். தொழிலில் புதிய முயற்சிகளில் தாமதமாக வெற்றி கிடைக்கும். சகோதர வகையில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். பூர்வீகச் சொத்துப் பிரச்சனைகள் தீரும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் உண்டாகும். மெதுவாகக் காரியத்தைச் சாதிக்கும் மாதம் இது.




தொழிலில் அலைச்சல் அதிகமாகும். கடன் கொடுப்பதையும், கடன் வாங்குவதையும் தவிர்க்கவும். புதிய தொழில் முயற்சியில் மிகுந்த அக்கறை தேவை. உணவு கட்டுப்பாடு மிக அவசியம். வயிறு உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தம்பதியருக்குள் சிறு கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். தெய்வ அருளினால் முன்னேறும் மாதம் இது.




திருமணம் கைகூடும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். முடிந்தவரை விவாதத்தைத் தவிர்க்கவும். தைரியமாகக் காரியங்களைச் செய்து அதில் வெற்றி பெறுவீர். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும், சம்பள உயர்வும் தாமதமாகக் கிடைக்கும். மாணவர்கள் சுமாரான மதிப்பெண்கள் பெறுவர். கடும் முயற்சியால் முன்னேறும் மாதம் இது.




மாதத்தின் முன்பகுதியை விட பின்பகுதியில் நல்ல முன்னேற்றத்தைக் கொடுக்கும். எதிர்பார்த்த பண வரவும், கடன் உதவியும் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி இம்மாதம் பேசாமல் இருப்பது நல்லது. வேலை ஆட்களால் சிறு பிரச்சனை ஏற்பட்டுப் பிறகு சரியாகும்.பண விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதம் இது.





வேலைக்கேற்ற வருமானம் கிடைக்கும். உடல் வலிக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். குழந்தை பாக்கியம் உண்டாகும். புதிதாக வீடு, மனை, வாகனம், தங்கம், வெள்ளி ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. திருமணம் ஆகாதவர்களுக்கு நற்செய்தி கிடைக்கும். நினைத்ததை சாதிக்கும் இனிய மாதம் இது.

# பல்சுவைப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



வண்ணம் தீட்டுங்கள் !!



சித்திரத்தைப் பாருங்கள் !



குமரனுக்கு வேல் கொடுக்கக் காத்திருக்கும் அவரின் தாயாரிடம் செல்ல வழிகாட்டி உதவிடுங்கள்!





**ஓம் பூர்புவஸ் ஸுவ: தத்ஸ விதுர்வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோந: ப்ரசோதயாத்**

பூமி, ஆகாயம் மற்றும் சொர்க்கம் ஆகிய மூன்று உலகங்களிலும் நிறைந்திருக்கும். அந்த ஒளி பொருந்திய மேலான சக்தியை நாங்கள் வணங்குகிறோம். அந்தப் பரம்பொருள் எங்கள் மனதை தெளிவித்து நமது அறிவை நல்வழியில் வழிநடத்தட்டும்.

**காயத்ரி மந்திரத்தை தினமும் உச்சரிப்பதன் மூலம் மூளை சுறுசுறுப்பு, மன அமைதி, சிறந்த ஞாபக சக்தி, தீய சக்திகளிலிருந்து பாதுகாப்பு போன்ற பல நன்மைகள் கிடைக்கும்.**




திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண் - 49



## ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!

1. பாண்டவர்களை தம் பணியாளர்களாக நியமித்த மத்ஸ்ய தேசத்து மன்னன்.................................
2. “கோவிந்த ஜீயர்” என்று அழைக்கப்பட்டவர் .................................
3. விராட தேசத்தின் மகாராணியான சுதேஷ்ணையின் சகோதரன் .................................
4. வேல் வகுப்பினை அருளிச் செய்தவர் .................................
5. “பாதுகா சகஸ்ரம்” என்ற நூலை அருளிச் செய்தவர் .................................
6. “தேவு மற்றறியேன்” என்று அருளிச் செய்தவர் .................................
7. ஆண்டாள் யாரிடம் குயிலை தூதாக அனுப்பி வைத்தாள் .................................
8. ஸ்ரீபராசர பட்டரின் அவதார மாதம், திருநட்சத்திரம் .................................
9. திருமலையில் ஸ்ரீநிவாசரின் கைங்கர்யத்திற்கு வராகரால் நியமிக்கப்பட்டவர் .................................
10. கருடாழ்வார் அவதரித்த மாதம், திருநட்சத்திரம்.................................
11. “கல்வி கரையில கற்பவர் நாள் சில” என்று கல்வியின் சிறப்பினைக் கூறும் நூல் .................................
12. சக்கரத்தாழ்வார் அவதரித்த மாதம், திருநட்சத்திரம் .................................
13. “காக்கை குருவி எங்கள் ஜாதி” என்று கூறியவர் .................................
14. அஞ்ஞாதவாசத்தின் போது அர்ஜுனனின் பெயர் .................................
15. “மாலே மணிவண்ணா” என்று கண்ணனை அழைத்தவர் .................................




## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடி மக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலை பேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.08.2026.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

விடையை எழுதுங்கள்!
திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!



அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

## விடைகள்

1) விஜய(வெற்றி) கணபதி, 2) வீரகணபதி, 3) விக்னேஷ்வரன், 4)சந்தான கணபதி 5) கஜானனன், 6) ஏகதந்தன், 7) சக்தி கணபதி, 8)பாலச்சந்திரன்.

### ஓவியத்தின் அடிப்படையில் அதற்கான பண்டிகையுடன் ஒப்பிடவும்!




1) கருட பஞ்சமி
2) ஆடிக்கிருத்திகை
3) ஆடிப்பூரம்
4) ஆவணி அவிட்டம்
5) நாக சதுர்த்தி
6) காயத்ரி ஜபம்
7) ராக்கி பண்டிகை
8) வரலக்ஷ்மி விரதம்
9) மார்கழி மாதம்
10) ஏகாதசி

விடை :
1) 3, 2) 5, 3) 4, 4) 7, 5) 2, 6) 6, 7) 1



நான் யார் ?

மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்ட சித்திரத்தின் அடிப்படையில் பூமிப்பிராட்டி அவதாரப் பெயர் மற்றும் இந்த மாதத்தில் வரும் தாயாரின் உத்ஸவத்தினைக் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...


விடை : ஆண்டாள்/ஆடிப்பூரம்

சித்திரக் கதை

# எதிரியை என்றுமே முழுமையாக நம்பாதே!

கதை : கலாரத்னா டாக்டர் கே.ரவிச்சந்திரன்
சித்திரம் : திரு.தும்பலி சிவாஜி.




வலையைக் கடித்த பிறகு நீ என்ன சிந்திப்பாயோ யாருக்குத் தெரியும்? பகைமை இருக்கும் இடத்தில் ஒப்பந்தம் இருந்தாலும் கூட முழுமையாக நம்புவதற்குச் சாத்தியமில்லை.
ஐயோ! நான் உனக்கு எந்தத் தீங்கும் செய்யமாட்டேன். என்னை நம்பு. இந்த வலையை வேகமாக கடித்து என்னை வெளியே வரவிடு.
பயப்படாதே... நான் வலையின் கயிறுகளைக் கடிக்கின்றேன்...
எலி வலையின் கயிறுகளைக் கடித்ததும், பூனை வேகமாக ஓடிச் சென்று மரத்தின் மேலே ஏறிக் கொண்டது.
நாமிருவரும் நண்பர்கள். ஆபத்து காலத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக இருந்திருக்கிறோம். நாம் ஒன்றாக நிம்மதியாக இருப்போம். என்னைக் கண்டு பயப்படாதே...
ஓ பூனையே! நான் சொல்வதைக் கேள். யார் நண்பன், யார் எதிரி என்று சொல்வது கடினம். உன் மனம் எப்போது, எப்படி மாறும் என்று யாருக்குத் தெரியும்?
ஐயோ!அவ்வாறு கூறுவது தர்மமா? என்னைக் காப்பாற்றிய உன்னை தின்பேனா...
இல்லை, பூனையே! இல்லை... உன்னால்தான் நான் உயிர் பிழைத்தேன். என்னால்தான் நீ அந்தப் பொறியிலிருந்து தப்பித்தாய். அவ்வளவுதான் நம் நட்பு! இனி நான் உன்னை நெருங்க மாட்டேன். ஏனென்றால் நான் உனது உணவு அல்லவா!
அந்த எலி சொல்வது சரிதான்.. அது எனக்கு உணவு... எந்த நேரத்திலும் மனதானது மாறிவிடும் அல்லவா!
நீதி: எதிரிக்குத் தேவைப்பட்டால் உதவலாமேத் தவிர, எதிரியை முழுமையாக நம்பிவிடக் கூடாது.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



11-06-2026 அன்று திருவேங்கடமுடையானைத் தரிசனம் செய்த மேதகு ஆ.மா. ஆளுநர் திரு.எஸ்.அப்துல் நஜீர் அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.எம்.ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சிஎச். வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள் மற்றும் சி.வி.&எஸ்.ஓ. திரு.கே.வி.முரளி கிருஷ்ணா ஐ.பி.எஸ். அவர்கள்



12-06-2026 அன்று திருவேங்கடமுடையானைத் தரிசனம் செய்த மேதகு ஆ.மா. உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி லீசாகில் தம்பதியருக்கு ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.எம்.ரவிச்சந்திரா ஐ.ஏ.எஸ். அவர்கள் உடன் தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு.சிஎச்.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள் மற்றும் சி.வி.&எஸ்.ஓ. திரு.கே.வி.முரளிகிருஷ்ணா ஐ.பி.எஸ். அவர்கள்

















ஜூன் 21 சர்வதேச யோகா தினத்தினை முன்னிட்டு தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாக மைதானத்தில் தியானம், யோகாசனம் செய்த தி.தி.தே. உயரதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-07-2026 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.

